**23-02-1999**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 123-165 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (முதல் பட்டியல்) | 166-227 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல் | 228-230 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு | 230, 297 |
| 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி. | |
| *திரு. கே. சுப்பராயன் | 230-243 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 244-252 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 257-297 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 299 |

2 20163

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 11, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 பிப்ரவரி 23, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்"*

*வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துக்களைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.*

### 1. வினாக்கள்-விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 61, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**61—**

#### உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி

***8695—திரு. பா. வேல்துரை:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஒன்றியம், பொட்டல் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியம், பொட்டல் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 1997-98 ஆம் ஆண்டில் அரசு முழு நிதியுதவியுடன் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தர, அரசாணை (நிலை) எண் 506, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15-12-1997-ல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. பா. வேல்துரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொட்டல் கிராமத்தில் உள்ள பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஏற்படுத்தித் தந்தது இந்த அரசுதான். அதற்குப் பிறகு இரண்டு வகுப்பறைகள் கட்டப்பட்டன. ஏற்கெனவே அது பஞ்சாயத்து யூனியன் பள்ளியாக இருந்ததால், அங்கே அடிப்படை வசதிகள், கட்டட வசதிகள் இல்லை. மேலும், இப்போதுகூட ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு ரூ. 4.84 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பள்ளிக்கு உடற் பயிற்சி ஆசிரியர், ஓவிய ஆசிரியர், பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர் எல்லாம இல்லை. ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு இந்த ஆணையை வெளியிட்டதற்கு நீங்கள் நன்றியைச் சொல்லிவிட்டு, பிறகு கோரிக்கைகளை வைப்பதுதான் மரபு 2 வகுப்பறைகள் கட்டப்பட்டிருக்கின்றன, ஆய்வுக்கூடம் கட்டுவதற்குப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. முதலில் அதற்கு நன்றியைச் சொல்லிவிட்டு, அது போதாது, இன்னும் வேண்டுமென்று உங்கள் தேவையைக் கேளுங்கள். அதுதான் மரபு.

**திரு. பா. வேல்துரை**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இரண்டு வகுப்பறைகள், ஆயவுக் கூடம் ஆகியவை கட்டித் தந்ததற்காக நான் தமிழக அரசுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு, மேலும் கட்டட வசதிகள் வேண்டும். இன்னும் இரண்டு வகுப்பறைகள் தந்தால் வசதியாக இருக்கும். அதோடு உடற் பயிற்சி ஆசிரியர், ஓவிய ஆசிரியர், பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் யாருமே அங்கே நியமிக்கப்படவில்லை. முதலாம் ஆணடிலேயே தேர்வுகளில் 100-க்கு 100 பேர் தேர்ச்சி பெற்ற பள்ளியாக அது விளங்குகிறது. அந்தப் பள்ளியில் இப்போதே நல்லமுறையில் பாடம் நடத்துகிறார்கள். எனவே



இதுபோன்ற தேவையான அடிப்படை வசதிகள், ஆசிரியர்கள் இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அந்தவகையில் அதை உடனடியாக அரசு செய்துதர வேண்டும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்குத் தேவையான பல்வேறு பணியிடங்களை வழங்குவது என்பது கடந்த காலத்தில்லிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு எப்போது கிடைக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் [illegible] பணியிடங்கள் புதிதாக வழங்கப்படும். கட்டடம் கட்டுவ[illegible]பதைப் பொறுத்தவரையில் அரசு அவ்வப்போது ஆண்டுதோறும் ஒதுக்கக்கூடிய நிதியில் பல்வேறு மாவட்டங்களில் வெவ்வேறு பள்ளிகளில் இரண்டு இரண்டு அறைகளாகக் கட்டப்படுகின்றன. நடைமுறையில் அந்த வகையில் இரண்டு வகுபபு அறைகளையும், ஆய்வுக்கூடத்தையும் கட்டுகின்ற முறைதான் இப்போது வாய்ப்பாக அமைந்திருக்கிறது. மேலும் நிதி ஒதுக்கீடு கிடைக்கிறபோது, மேலும் வகுப்பறை கட்டும் கடமையை அரசு செய்யும். ஆனால், பல்வேறு பள்ளிகளில் போதுமான கட்டட வசதியில்லை என்ற நிலையில், பெற்றோர்-ஆசிரியர் கழகம் மூலமாக, சட்டமன்ற உறுப்பினர்களே முன்வந்து, பொறுப்பேற்று, நிதி வசூலித்து, அந்தக் கட்டடங்களைக் கட்டுவதில் ஈடுபட வேண்டுமெனறு நான் அனைவரையுமேகூடக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**62—**

**பாம்புக் கடிக்குத் தனி சிகிச்சைப் பிரிவு**

***312—திரு. சீ. வெ. கிருஷ்ணன்**:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குஜிலியம்பாறை அரசு மருத்துவமனையில் பாம்புக் கடியால் பாதிக்கப்படும் மக்களுக்காக தனி சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படுமா?

[1999 பிப்ரவரி 23

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குஜிலியம்பாறை ஆரம்ப சுகாதார நிலையத்தில், பாம்புக் கடியால் பாதிக்கப்படும் மக்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது. போதிய மருந்துகளும் கையிருப்பில் உள்ளன. தனி சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறை என்று சொன்னாலே அது பாம்புக் கடி பகுதி என்றே சொல்வார்கள் அங்கே உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பாம்புக் கடிக்கான சிகிச்சை வசதி இல்லை. அது பாம்புகள் அதிகமுள்ள பகுதியாக இருக்கிறது. மனிதர்களுக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு நோய்க்கும் மருத்துவத் துறையில், மருத்துவமனைகளில் பல்வேறு சிகிச்சைப் பிரிவுகள் இருக்கின்றன. ஆனால் பாம்பு கடித்தால் மனிதன் ஐந்து மணி நேரத்தில் உயிரை விட்டுவிடுவான். ஆகவே அமைச்சர் அவர்கள், பாம்புக் கடி சிகிச்சைக்கு என்று தனிப் பிரிவு ஒன்றை அங்கே அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறை மருத்துவமனை இப்போது தரம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய காரணத்தினாலே நான்கு மருத்துவர்கள் தொடர்ந்து அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பாம்புக் கடியாலே அந்தப் பகுதியிலே அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டதாக அரசுக்கு எந்தப் புகாரும் வரவில்லை. இன்னும் சொல்லப்போனால், பாம்புக் கடிக்கு சிகிச்சை பெறுவதற்கு என்று அதிகமான பேர்கள் வருவதில்லை என்ற குறிப்புதான் அரசாங்கத்திடம் இருக்கிறது. அப்படியே இருந்தாலும்கூட, மருந்துகள் கையிருப்பிலே இருக்கின்ற காரணத்தினாலே, அன்றையதினம் எந்த மருத்துவர் பணியிலே இருக்கின்றாரோ அவர் உடனடியாகச் சிகிச்சை அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, பாம்புக் கடி சிகிச்சைக்கு என்று தனிப் பிரிவு ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.



1999 பிப்ரவரி 23]

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பு பிடிப்பதை இப்போது அரசு தடை செய்திருக்கின்ற காரணத்தினாலே, கிராமப்புறங்களில் ஒவ்வொரு நாளும் பாம்புக் கடிக்கு இரையாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. மேலும் கிராமங்களிலேயிருந்து அவர்களை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுகின்றபோது வழியிலே இறந்து போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால், அரசு மருத்துவமனையில் மட்டுமல்ல, ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பாம்புக் கடி சிகிச்சைக்கான மருந்தினை வழங்குவ[illegible] அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய [illegible].

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள அரசு மருத்துவ மனைகளிலேயும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும் பாம்புக் கடிக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய மருந்து வழங்கப்பட்டிருக்கிறது. எங்கேயாவது அந்த மருந்து இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடியாக அந்த மருந்தினை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஒவ்வொரு மருத்துவமனைக்கும் Ambulance வசதி செய்து தரப்பட்டது. ஆனால், அந்த Ambulance-ஐ ஓட்டுவதற்கு பல இடங்களில் ஓட்டுநர்கள் நியமிக்கப்படாத நிலைமை இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாம்புக் கடியால் பாதிக்கப்படும் மக்களுக்காக தனி சிகிச்சை பிரிவு ஏற்படுத்துவது பற்றியது மூலக் கேள்வி, நீங்கள் கேட்பது வேறு, உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** அவசர காலங்களில் Ambulance-ஐ ஓட்ட ஆள் இல்லை. பாம்பு கடித்தவர்களை சிகிச்சைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூல வினாவிற்குத் தொடர்பில்லாத கேள்வி.

**திரு. லா. சந்தானம் :** பாம்பு கடித்தவர்களை Ambulance-ல் எடுத்துச் செல்வதற்கு முடியவில்லை என்பதால் சொல்கிறேன்.

[1999 பிப்ரவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாம்புக் கடிக்கெல்லாம் Ambulance கிடையாது, நீங்கள் உட்காருங்கள். திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளிலும்... (குறுக்கீடு) நான் கேட்டு முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களை உட்காரச் சொல்லுகிறேன். நீங்கள் அவரைப் பார்த்துப் பேசக்கூடாது, உட்காருங்கள். நான் பிறகு உங்களைக் கூப்பிடுகிறேன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளிலும், 24 மணி நேர அரசு மருத்துவமனைகளிலும் பாம்புக் கடி சிகிச்சைக்கு மருந்து இல்லை என்ற நிலை பல இடங்களிலே உள்ளது.

**திரு. லா. சந்தானம்:** தமிழ்நாடு முழுவதுமே ஒட்டுமொத்தமாக இந்தப் பிரச்சினை இருப்பதால் நான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், நீங்கள் உட்காருங்கள். பிறகு உங்களை நான் அழைக்கிறேன். திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** தலைவரவர்களே, வட்டத் தலைநகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளிலும், 24 மணி நேர அரசு மருத்துவமனைகளிலும் பாம்புக் கடி சிகிச்சைக்கு மருந்து இல்லை என்ற நிலை பல இடங்களிலே இருக்கின்றது. குறிப்பாக மங்கலம்பேட்டை, விருத்தாசலம் ஆகிய இடங்களில் இந்தக் குறைபாடு உள்ளது. மருந்து இருக்கிறது, ஆனால், சில நேரங்களிலே இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். எனவே, இந்தக் குறைபாட்டைப் போக்க, நிரந்தரமாக அங்கெல்லாம் பாம்புக்கடி சிகிச்சைக்கான மருந்தை வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது, மருந்து இருக்கிறது, ஆனால் இல்லை என்று



1999 பிப்ரவரி 23]

சொல்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அவர் பொறுப்புள்ள ஒரு சட்டமன்ற உறுப்பினர். மருந்து இருக்கின்ற நேரத்திலே எந்த மருத்துவராவது இல்லை என்று தெரிவித்தால், அவர்மீது நடவடிக்கை எடுக்க, பரிந்துரை செய்வதற்கு அவருக்கு உரிமை இருக்கின்றது. அப்படிப் பரிந்துரை செய்வாரேயானால், நாங்கள் எடுக்கின்ற நடவடிக்கை மூலம் அப்படிப்பட்ட தவறுகளை நாட்டிலே குறைக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், இது பாம்புக் கடி சிகிச்சைப் பிரிவு தொடங்குவதற்கான வினா. Ambulance-க்கு ஓட்டுநர் இல்லை என்று சொல்வதற்குத் தனிக் கேள்வி போட்டிருக்கலாம். ஓட்டுநர் இல்லை, அவரை நியமியுங்கள் என்று கேட்பதற்கு இதுதானா வாய்ப்பு?

**திரு. லா. சந்தானம்:** தலைவரவர்களே, பாம்பு கடித்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற நிலை வருகின்றபோது, Ambulance-ஐ எடுத்துச் செல்ல முடியவில்லையென்றால், பாம்பு கடித்தவர் அங்கேயே இறந்து போய்விடக்கூடிய நிலை ஏற்படுகிறது. பாம்புக் கடி சிகிச்சைக்கான தனிப் பிரிவு என்று பேசுவதால், அதன் தொடர்பான கேள்வி என்பதால்தான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எல்லா மருத்துவமனைகளிலும் பாம்புக் கடி சிகிச்சைக்கு மருந்து இருப்பதாகத் தெரிவித்தார்கள். நன்றி. ஆனால், பல ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, அதிலும் குறிப்பாக மலைப்பாங்கான பகுதிகளிலே—பேச்சிப்பாறை மேஜர் பஞ்சாயத்திலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையம்; அதுபோன்று, பத்துகாணி ஆரம்ப சுகாதார நிலையம்—இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்ற இடங்கள் முழுக்க முழுக்க மலைப்பாங்கான பகுதிகள். பாம்புக்கடி தொந்தரவு இருக்கின்ற பகுதிகள். எனவே, என்னுடைய கோரிக்கை என்னவென்றால், இப்படிப்பட்ட மலைப்பாங்கான பகுதிகளிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாலுகா மையங்களிலே இருக்கின்ற மருத்துவமனைகள்

[1999 பிப்ரவரி 23

இங்கெல்லாம் அந்த மருந்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பாம்புக் கடிபட்டவர்கள் அதற்கான சிகிச்சைக்கு என்று தனியாரிடம் போய்விட்டால் 5000 ரூபாய் வரை வாங்கி விடுகிறார்கள். அந்தக் கொடுமை இருக்கிற காரணத்தினால், எல்லா மருத்துவமனைகளிலும் பாமபுக் கடிக்கு எதிரான மருந்துகளை வழங்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்குத் தேவையான மருந்துகளை மருத்துவ சேவைக் கழகம் கொள்முதல் செய்து, தாலுகா மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குத் தேவையான மருந்துகள்பற்றி கணிப்பொறி மூலமாகத் தகவல் அறிந்து, உடனுக்குடன் அந்த மருந்துகளை அனுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். எங்கேயாவது ஒரு குறிப்பிட்ட மருந்து இல்லையென்று தகவல் கிடைக்குமானால் அடுத்த 24 மணி நேரத்திற்குள்ளாக அந்த மருந்து குறிப்பிட்ட மருத்துவமனைக்குப் போய் சேர்ந்து விடுகிறது. அப்படிப்பட்ட ஒரு Internet வசதி இருக்கிற காரணத்தினாலே, எங்கேயாவது அப்படிப்பட்ட குறைகள் இருக்குமானால், உடனடியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதனை அரசு நிச்சயமாகத் தவிர்க்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாம்புக்கடி சம்பந்தமான கேள்விக்கே வினாக்கள்-விடைகள் நேரம் முழுவதும் முடிந்துவிடும்போல இருக்கிறது. இத்தனைபேர் கை தூக்குகிறீர்கள், அதனால் இதோடு நிறுத்திக்கொள்ளலாம். (சிரிப்பு)

வினா எண் 63, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**63—**

**பொது மருத்துவமனையாக உயர்த்துதல்**

***16776—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 23]

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாக உயர்த்தித் தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சிறுப்பாக்கத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகள் ஏற்பட்டால் மதுராந்தகத்திற்கு அல்லது செங்கற்பட்டிலுள்ள அரசு மருத்துவமனைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. ஆகையினால், பல உயிர்கள் சேதம் அடைகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அச்சிறுப்பாக்கத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சிறுப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம், மதுராந்தகத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையிலே இருக்கக்கூடியது. அங்கிருந்து மதுராந்தகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 20 நிமிடத்தில் சென்றுவிடலாம், அதைப்போல செங்கற்பட்டிற்கு வர வேண்டுமென்று சொன்னாலும் அரை மணி நேரத்திலே வந்து விடலாம். ஒரு மணி நேரத்திற்குள்ளாக வரக்கூடிய இடங்களிலேயெல்லாம் ஓர் அரசு மருத்துவமனை ஆரம்பிப்பது என்று சொன்னால், இப்போதுள்ள நிதிநிலை அதற்கு இடம் தராது, எனவே அந்த வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அச்சிறுப்பாக்கத்தைப்பற்றி யாராவது கேள்வி கேட்பதாக இருந்தால் நான் அனுமதி கொடுக்கிறேன். யாரும் இல்லை.

வினா எண் 64, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**64—**

### நாட்ராம்பள்ளியில் வட்டாட்சியர் அலுவலகம்

***17546—திரு. இரா. மகேந்திரன்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாட்ராம்பள்ளியில் புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.*

புதிய வட்டங்களை உருவாக்கத் தேவைப்படும் செலவினம் மற்றும் அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு புதிய நிர்வாக அமைப்புகள் அமைப்பதை தற்போது ஆய்வு செய்யத் தேவையில்லை என அரசு முடிவு செய்துள்ளது. ஆகவே, நாட்ராம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் நீண்ட நாட்களாக வட்டாட்சியர் அலுவலகம் தேவையென்று அரசைக் கோரி வருகின்றார்கள். நம்முடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் வருகின்ற காலகட்டத்திலாவது இதனைப் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, துணைக்கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினரது கவனத்திற்கு அல்லது பரிசீலனைக்கு, இவ்வரசு பொறுப்பேற்ற பின்பு, 4 புதிய மாவட்டங்கள், 8 புதிய வருவாய்க் கோட்டங்கள், 24 புதிய வட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கியுள்ளது. அவை அனைத்தும் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும் நிதிநிலைக்கேற்ப உறுப்பினரின் கோரிக்கை உரிய காலத்தில் பரிசீலிக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேள்வி பதில் முடிந்து போயிற்று. (சிரிப்பு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 65, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**65—**

### தாரமங்கலம் தொகுதிக்குக் குடிநீர் வசதி

***8330—திரு. ப. கோவிந்தன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அரியாம்பட்டி ஊராட்சி, மேட்டு லட்சுமணன்வளவில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் வருவதில்லை என்பதனை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அப்பகுதிக்குக் குடிநீர் வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.*

*இந்த வினாவைப் பொறுத்தவரையில், நேற்று மாலை 5 மணிக்குக் கிடைத்த தகவலையொட்டி ஒரு வரியில் திருத்தம் மேற்கொள்ளலாம் என்று கருதி, அதற்குத் தங்கள் அனுமதியை, தங்களுடைய அறையில் பெற்றிருக்கின்றேன். அந்த அனுமதியோடு, நான் இந்த பதிலைத் தெரிவிக்கிறேன்.*

*(அ) ஆம்.*

*(ஆ) அரியா கவுண்டம்பட்டி குடிநீர் திட்டத்துடன் இணைத்து, அரியாம்பட்டி ஊராட்சி, மேட்டு லட்சுமணன்வளவில் உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றி, 15-2-1998 முதல் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது என்பது விடை. ஆனால், அதில் திருத்தம் 'வந்தது' என்று குறிப்பிடுகிறேன்.*

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்த வினா எண் 66, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

[1999 பிப்ரவரி 23

**66—**

**மூலிகை செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல்**

***18581—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகாவில் மூலிகை செயல் விளக்கப் பாத்திகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் (1998-99) சிதம்பரம் தாலுகாவில் மூலிகை செயல் விளக்கப் பாத்திகள் இரண்டு எண்கள் அமைத்திட தோட்டக் கலை உதவி இயக்குநர், கடலூர் அவர்களால் திட்டமிடப்பட்டு அதற்குரிய பயனாளிகள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்தச் செயல் விளக்கப் பாத்திகளில் 'துளசி' மூலிகைப் பயிர் பயிரிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் தாலுகாவில் மூலிகை செயல் விளக்கப் பாத்திகள் அமைப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. மூலிகைச் செடிகள் இன்றைக்கு மிகப் பெரிய வியாபாரமாக இருக்கிறது. அவற்றுக்கு உலகச் சந்தையில் இன்றைக்கு நல்ல தேவை இருக்கிறது. எனவே, பல்வேறு மூலிகைகளைப் பயிரிட மிகப் பெரிய அளவில் பண்ணைகள் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். ஏற்காடு மலையிலே பெரிய அளவிலே மாதிரிப் பண்ணைகள் அமைத்திருக்கிறார்கள். அதுபோல, வியாபார ரீதியாக இத்தகைய மூலிகைப் பண்ணைகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1999 பிப்ரவரி 23]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டில், 400 செயல் விளக்கப் பாத்திகள் தேனி மாவட்டம் நீங்கலாக மற்ற அனைத்து மாவட்டங்களிலும் ரூ. 6 இலட்சம் செலவில் அமைக்க வேண்டி, அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு செயல் விளக்கப் பாத்தியும் 12.5 சென்ட் நிலப் பரப்பில் அமைக்கப்படுகிறது. அதற்கு 1,500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இதனை 27 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த அதற்கென இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. அவரி, துளசி, நித்தியகல்யாணி, கண்வளிக் கிழங்கு, அசுவகந்தி, திப்பிலி, கூர்க்கன் கிழங்கு, சிறுகுறிஞ்சான், வல்லாரை போன்ற மூலிகைகள் பல நோய்களைத் தீர்க்கும் மருந்துக்குப் பயன்படக் கூடியவை. மூலிகை செயல் விளக்கப் பாத்திகளில் இந்த மூலிகைச் செடிகள் வளர்க்கப்படும். இந்த மூலிகைகளுக்கு ஏற்றுமதிக்கான வாய்ப்பு இருக்கிறது. ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கக்கூடிய மூலிகைச் செடிகளை விவசாயிகளிடம் விளம்பரப்படுத்த இந்த மூலிகைச் செயல் விளக்கப் பாத்திகள் பெரிதும் பயன்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் காசினிக் கீரை மூலிகைக்கு முழுவதுமான வரி விலக்குத் தந்திருக்கிறார்கள். அதற்கு நம்முடைய தமிழக மக்கள் அனைவரும் நன்றி உள்ளவர்களாக இருக்கிறார்கள். பல நோய்களைக் குணப்படுத்தும் என்கிற நிலையில், நம்முடைய வேளாண்மைத் துறையின் சார்பாக இந்த காசினிக் கீரையை அதிக அளவில் வளர்ப்பதற்கு என்று தனியாக ஒரு பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. மூலக் கேள்வியே மூலிகைச் செயல் விளக்கப் பாத்திகள் அமைப்பது பற்றியதுதான். அதையொட்டிய, அதன் சம்பந்தப்பட்ட செடிகள் குறித்துதான் பதில் அளித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

[1999 பிப்ரவரி 23

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீ ஆண்டாள் துளசியிலிருந்துதான் பிறந்தாள் என்று ஐதீகம் சொல்கிறது. ஆண்டாள் கோவிலுக்குச் சொந்தமான செண்பகத்தோப்பில் மூலிகைப் பண்ணை இருந்தது. அது அரசால் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது அது மூடப்பட்டுவிட்டது. மீண்டும் அதைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா? அந்த நேரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சதுர்வேதி மங்கலத்தை [illegible] மூலிகைத் தோட்டம் இருக்கிறது. அதை அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் [illegible]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைகள் இயற்கையாகவே அதிகமாக விளைகின்ற இடம் குற்றால மலையும், அதற்குப் பக்கத்திலேயிருக்கின்ற பாபநாசம் மலையும் [illegible] சித்த மருத்துவக் கல்லூரியும் பாளையங்கோட்டையில் இருக்கிறது. ஆகவே மூலிகைச் செடிகளை கல்லூரியின் வாயிலாகவும் இந்த இரண்டு இடங்களிலும் தனித் திட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** குற்றாலத்தைப் பற்றிய விவரம் இல்லை. ஆனால், திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் போன்ற மாவட்டங்களில் இதுபோன்ற செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, may I know from the Hon. Minister for Agriculture, the total value of export of medicinal plants from Tamil Nadu to other nations?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலம் இது ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.



1999 பிப்ரவரி 23]

இப்போது, தனியார் சிலர் இதுபோன்ற மருந்துகளுக்குப் பயன்படக்கூடிய செடிகளைப் பயிர் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள். அதுபற்றிதான் அரசிடம் தகவல் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துளசி மூலிகையில் ஏராளமான வகைகள் உள்ளதாகச் சொல்கிறார்கள். எத்தனை வகைகள்? அவை அத்தனையையும் வளர்ப்பதற்குண்டான ஏற்பாட்டை அரசு செய்கின்றதா? இந்த அனைத்து வகைகளும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துளசியில் நான்கு வகைகள் இருக்கின்றன. ஏராளமாக இல்லை. நான்கு வகைகள் இருக்கின்றன. கருந்துளசி, செந்துளசி, நாய்த்துளசி, நீலதுளசி. இந்த நான்கு துளசிகளைக் கொண்டு இருமல், சளி, சுவாச நோய்களுக்கு மருந்து தயாரிக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற வேளாண்மைத் துறை, உடல்நலத்திற்கு நன்மை பயக்கக்கூடிய கீரை வகைகளை உற்பத்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**67—**

### நீர்த்தேக்கம் கட்டுதல்

***8389—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பூண்டி-அருங்காட்டுக்குளம் நீர்த்தேக்கத்தைக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டப் பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் ஒன்றியம்-பூண்டி அருங்காட்டுக்குளம் நீர்த்தேக்கத்தை கட்டும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மேல்மலைப் பகுதி விவசாயிகளுக்கு ஆற்றுப் பாசனமோ, கண்மாய்ப் பாசனமோ, கிணற்றுப் பாசனமோ கிடையாது. அந்தப் பகுதி விவசாயிகள் மானாவரியாக உருளைக்கிழங்கு, பூண்டு, கோஸ், காரட், நூல்கோல் போன்ற காய்கறிகளைப் பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறார்கள். மழை பொய்த்துவிடுகின்ற நேரங்களில், அந்த விவசாயிகள் பெரிதும் நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, நம்முடைய அரசு, கொடைக்கானல் மேல்மலைப் பகுதி மக்கள்மீது அக்கறை செலுத்துகின்றவகையில் கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் பூண்டி அருங்காட்டுக்குளம் நீர்த்தேக்கத்தை விரைவில் கட்டித் தரவும், அதுபோல, பூம்பாறை விவசாயிகளுடைய நீண்டநாள் கோரிக்கையான குண்டம்பாச்சி நீர்த்தேக்கம், கூக்கல் கிராமத்தில் உருளைக்கோம்பு நீர்த்தேக்கம், போன்றவற்றை கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் மானாவாரியாக விவசாயம் செய்கின்ற அந்த மக்களுடைய நலன் கருதி கொடைக்கானல் மேல்மலைப் பகுதியில் கட்டித்தர அரசு விரைந்து முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தேவையென்று கருதிய காரணத்தினால்தான் ரூபாய் 3 கோடியே 26 இலட்சத்திற்கு அரசு முதல் நிலை அறிக்கை ஒன்றைத் தயாரித்தது. அதில் சில technical defects இருப்பதைக் கண்டறிந்து, அவற்றை rectify செய்து அனுப்ப வேண்டுமென்று திருப்பி அனுப்பியிருக்கிறோம். அந்த அறிக்கை கிடைத்த பிறகு, அடுத்த நடவடிக்கையை அரசு எடுக்கும். வேறு பல திட்டங்களைப்பற்றி



அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை அரசு கவனத்தில்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68. திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

முற்பகல் 9-55

**68—**

**கூடுதல் பேருந்து வசதி**

***6169—திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர், ஊத்துக்கோட்டை, பொன்னேரி ஆகிய இடங்களுக்குக் கூடுதலாகப் பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) ஆம். புதியதாக 11 வழித்தடங்களில் 13 பேருந்துகள் விடப்பட்டுள்ளன. மேலும் கீழ்க்கண்ட தடங்களில் புதியதாகப் பேருந்துகள் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று விடையில் இருந்தாலும், அவைகளும் இப்போது விடப்பட்டு இருக்கின்றன.

(1) திருவள்ளூர் - இராமஞ்சேரி - 6 நடைகள்

(2) திருவள்ளூர் - ஊத்துக்கோட்டை - 6 நடைகள்

ஆகியவை புதிதாக விடப்பட்டு இருக்கின்றன.

**திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்னதற்கு நன்றி. 6 முறைகள் விடப்பட்டதை மாற்றி 12 முறைகளாக விடப்பட்டுள்ளது. அதேபோன்று ஊத்துக் கோட்டையிலேயும் பணிமனை இருக்கிறது; பொன்னேரியிலேயும்

[1999 பிப்ரவரி 23

பணிமனை இருக்கிறது; ஆகவே, ஊத்துக்கோட்டையிலிருந்து பெரியபாளையம், ஆரணி வழியாகப் பொன்னேரிக்கு நகரப் பேருந்துகள் விடவேண்டும்; விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் புதிய வழித் தடங்களில் பேருந்துகளை இயக்குகிறபோது, அது பொருளாதார ரீதியாக சரியாக இருக்குமா என்றும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பொருளாதார ரீதியாக அதற்கு வசூல் அதிகம் கிடைக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துகள் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**69—**

## நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்குதல்

***12642—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி கிளையிலிருந்து சுப்பிரமணியபுரம்வரை இயங்கிக் கொண்டிருந்து, தற்போது நிறுத்தப்பட்டுவிட்ட அரசு போக்குவரத்துக் கழக பேருந்து தடம் எண் 4-ஐ மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேராவூரணியிலிருந்து சுப்பிரமணியபுரம் வரை இயக்கப்பட்ட பேருந்து போதிய மக்கள் பயன்பாடு இல்லாததால் நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் ஜூலை 1998 முதல் பேராவூரணி-ஆவுடையார்கோவில் (வழி) ரெட்டவயல், பெருமகளூர், சுப்பிரமணியபுரம் தடத்தில் ஒரு புறநகர் பேருந்து மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, நகரப் பேருந்து தடம் எண் 4-ஐ மீண்டும் இயக்க செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சுப்பிரமணியபுரம்-பேராவூரணி வழியாக



1999 பிப்ரவரி 23]

கும்பகோணம், ஆவுடையார்கோவிலுக்கு தொலைதூரப் பேருந்தாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், பேராவூரணி, கழனிவாசல், ரெட்டவயல், குலக்குடி, மதுகாடு, கொடுவயல், சுப்பிரமணியபுரம் பகுதியிலே அதிகப்படியான மக்கள் வசிக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே எந்தவித நகரப் பேருந்துகளும் இயங்காத காரணத்தினால், மீண்டும் நகர பேருந்து வழித்தடத்தை இயக்க மாண்புமிகு அமைச்சர் மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல. இது [illegible] ரீதியாக லாபகரமாக இருக்குமானால்—லாபம் வேண்டாம் —குறைந்தபட்சம் செலவு அதிகமாக இல்லாமல் இருக்குமானால், இந்தப் பேருந்து வழித்தடத்தை மீண்டும் இயக்குவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**70—**

## கிருதுமால் நதியின் குறுக்கே பாலம் கட்டுதல்

***8774—திரு. கே. தங்கமணி**:

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருதுமால் நதியில் கொந்தகைக்குக் கீழே மராமத்து மற்றும் பாலம் கட்ட ரூ. 154 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயார் செய்து 2 வருடங்கள் ஆகியும் பணி தொடங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கொந்தகை கிராமத்திற்குக்கீழ் கிருதுமால் நதியில் பாலம் கட்டுவதற்காக 154 இலட்சத்திற்கு மதிப்பீடு எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றாலும், NABARD திட்டத்தின்கீழ் இந்தச் சாலையை மற்றும்

சாலையில் 2/6-ல் உள்ள நாம்போகியைக் கட்டும் பணியுடன் சாலையை மேம்பாடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணி தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன பதிலுக்கு மிக்க நன்றி. இந்தக் கேள்வி பொதுப் பணித் துறைக்கு திருத்துமால் நதியின் மராமத்துக்காகக் கேட்கப்பட்ட கேள்வி. கேள்வி மாறி வந்து இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**71—**

**பயணியர் மாளிகை**

***15683—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சியிலிருந்த பயணியர் மாளிகை தாலுகா அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளதால், அங்கே பயணியர் மாளிகை கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரவக்குறிச்சி பயணியர் மாளிகையில் தற்போது வட்டாட்சியர் அலுவலகம் தற்காலிகமாக இயங்கி வருகிறது. விரைவில் இது பயணியர் மாளிகையாக மாற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் இருக்கையில் இல்லை.

வினா எண் 72, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.





**72—**

**பாபநாசம் அருள்மிகு சொரிமுத்தய்யனார் கோயில் திருப்பணி**

***16008—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் ... சொரிமுத்தய்யனார் கோயிலுக்குத் திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் சிங்கம்பட்டி அருள்மிகு சொரிமுத்தய்யனார் கோயிலுக்குக் கீழ்க்கண்ட திருப்பணிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டு, திருநெல்வேலி இணை ஆணையரின் செயற்குறிப்புகள் பெறப்பட்டதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(1) திருக்கோயிலில் நான்கு பிராகாரங்களிலும் தரையில் கருங்கற்களால் தளம் அமைத்தல்;

(2) நான்கு பிராகாரங்களிலும் மேற்கூரையில் ஓட்டுக் கொட்டகையை எடுத்துவிட்டு, Concrete கூரை அமைத்தல்;

(3) அருள்மிகு பட்டவராயசாமி சன்னதி, அருள்மிகு தளவாய்சாமி சன்னதி, அருள்மிகு பிரம்மராட்சி அம்மன் சன்னதி இடையிலுள்ள இடங்களில் Cement தளம் போடுதல்;

(4) அருள்மிகு தளவாய் மாடசாமி, அருள்மிகு தூசிமாடசாமி சன்னதியின்முன் Concrete கூரை அமைத்தல்.

[1999 பிப்ரவரி 23

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட கேள்வியா இது?

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலைப் பராமரித்து வருகிற சிங்கம்பட்டி ஜமீன் குடும்பத்தில் மணம் முடித்திருக்கிற காரணத்தால் இந்தக் கேள்வியை உரிமையோடு கேட்டிருக்கிறேன். இந்தக் கோயில் பல நூற்றாண்டுகள் தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில். முண்டந்துறை வனச் சரணாலயத்தில் இருக்கிற காரணத்தால் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஆடி அமாவாசை, பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுகிறார்கள். 1993 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் முண்டந்துறை பாலம் அடித்துச் செல்லப்பட்டது. இப்போது தற்காலிகப் பாலம்தான் இருக்கிறது. இன்னும் அங்கே சீர்செய்யப்படவில்லை. அதேபோல, இந்தக் கோயிலும் வெள்ளம் வந்தால் பாதிக்கும் சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே, இந்தக் கோயிலுக்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டி, பராமரிப்புச் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்ன விடையிலே முழுவதும் அடங்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் திருக்கோயிலில் குடமுழுக்கு விழா நடத்துவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு நிதி உதவி செய்ய முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

வினா எண் 73, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1999 பிப்ரவரி 23]

**73—**

### தவிட்டைப் பயன்படுத்தி எண்ணெய் உற்பத்தி

***9728—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் தவிட்டைப் பயன்படுத்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி ஏராளமான நவீன அரிசி ஆலைகள் அடங்கிய ஒரு நகரம். அங்கேயிருந்து தவிட்டை பக்கத்தில் இருக்கக்கூடிய புதுவை மாநிலத்திற்கு எடுத்துச் சென்று அங்கே எண்ணெய் தயாரிக்கிறார்கள். அதை இந்த ஊரிலேயே செய்ய இயலுமா என்பதை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக ஏற்கெனவே எருக்கூர், புனக்குளம் என்ற இரண்டு இடங்களில் தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலையை நடத்தி, தொடர்ந்து அதை நடத்த முடியாமல் தற்போது நிறுத்தி வைத்திருக்கிறோம். இதிலே உற்பத்திச் செலவு அதிகமாக ஆகின்றதாலும், வெளியிலே விற்கின்றபோது tonne-க்கு ரூ.8,172 நஷ்டமாவதாலும் இதை நிறுத்தி வைத்திருக்கிறோம். அப்படி நிறுத்தி வைத்திருக்கின்ற ஆலைகளிலே ஒன்றை 400 tonne அரிசி ஆலையாக மாற்றுவதற்கான முயற்சிகள்கூட எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற ஆலைகளை ஓட்ட முடியாதபோது புது ஆலையைத் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

[1999 பிப்ரவரி 23

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவிட்டைப் பயன்படுத்தி எண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன? அவை எங்கெங்கே செயல்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். எருக்கூர், புனக்குளம் என்ற 2 இடங்களில்தான் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய ஆலைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக இருந்தன. இரண்டுமே தற்போது இயங்காமல் மூடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**74—**

### கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் அமைத்தல்.

***20021—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூரில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கூத்தாநல்லூரில் வாழும் மக்களது பால் தேவையை மன்னார்குடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் நிறைவு செய்து வருவதாலும், சங்க விவகார எல்லையில் உள்ளவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள சங்கம் ஆட்சேபணை தெரிவிக்காததாலும், கூத்தாநல்லூரில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த ஆட்சேபணை தெரிவித்து உள்ளதாலும், கூத்தாநல்லூருக்கென ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



1999 பிப்ரவரி 23]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூத்தாநல்லூர் பகுதி நகராட்சிப் பகுதியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சுற்றுப்புறங்களிலே ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. மன்னார்குடிக்கும் இதற்கும் தொடர்பு இல்லாத வகையிலே இந்தப் பகுதி இருக்கிற காரணத்தினால் இந்தப் பகுதியிலே கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் நிறுவுவதற்கான முயற்சிகளை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் பதிலில் குறிப்பிட்ட மன்னார்குடி பால் வழங்கும் சங்கத்தினுடைய பணியாளர்கள் சம்பள உயர்வு கோரி, கோரிக்கை வைத்து, அது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனையில் இருப்பதாக அறியப்படுகிறது. அதைப்பற்றிய தீர்வு என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூத்தாநல்லூரில் புதிய சங்கம் அமைப்பது குறித்த மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும். அதேபோன்று, மன்னார்குடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 1995 ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கை முடிக்கப்படவில்லை. தணிக்கையை முடித்தால் மன்னார்குடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் ஊதியம் குறித்த கோரிக்கையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**75—**

### மாணவ, மாணவியருக்குப் புதிய விடுதிக் கட்டடம்.

***20602—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு சட்டப் பேரவைத் தொகுதியில் நீடாமங்கலத்திலும் (திருவாரூர் மாவட்டம்), வெள்ளூரிலும் (தஞ்சை மாவட்டம்) வாடகைக்

கட்டடத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி நீடாமங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தனியார் கட்டடத்திலும், தஞ்சாவூர் மாவட்டம், வெள்ளூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அரசு கட்டடத்திலும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் சீர்மரபினர் பள்ளி மாணவியர் விடுதி தனியார் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் நீடாமங்கலம் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதிக்கும், வெள்ளூர் சீர்மரபினர் பள்ளி மாணவியர் விடுதிக்கும் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக நீடாமங்கலத்திலும், வெள்ளூரிலும் மாணவ, மாணவியர் விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 1984-ல் வெள்ளூரில் பொதுமக்கள் சார்பாக மாணவியர் விடுதி கட்டுவதற்காக இடம் வாங்கி அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று நீடாமங்கலத்திலும் இடம் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, விதிமுறைகளுக்கு உட்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.



**76—**

## விவசாயிகளுக்குப் பட்டா வழங்குதல்.

***1995—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், காரிமங்கலம் ஒன்றியம், குண்டாங்காடு, கோயிலூர், சின்னவாட்டம்பட்டி, நீலகிரி, ஜலோட்டுப்பள்ளம், போடரஉஹள்ளி, கொத்தனம்பாறை, கொட்டாய் ஆகிய கிராமப் பகுதிகளில் மூன்று தலைமுறைகளாக முந்நூறு ஏக்கர் வருவாய்க் காடுகளில் விவசாயம் செய்யும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், காரிமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட காடுகளில் விவசாயம் செய்யும் மக்களுக்கு மேற்படி வன நிலத்தை நடைமுறைச் சட்டங்களின்படி பட்டா செய்து வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்திற்குட்பட்ட பாலக்கோடு வட்டம், காரிமங்கலம் ஒன்றியம், குண்டாங்காடு, கோயிலூர், சின்னவாட்டம்பட்டி, நீலகிரி, ஜலோட்டுப்பள்ளம், போடரஉஹள்ளி, கொத்தனம்பாறை, கொட்டாய் ஆகிய கிராமங்கள் மலைப் பகுதியில் இருக்கின்ற பகுதிகளாகும். கடந்த ஆண்டு எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. முல்லைவேந்தன் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது, அந்த மக்களெல்லாம் அவர்களுடைய கோரிக்கையை வைத்தார்கள். "நாங்கள் மூன்று தலைமுறைகளாக அந்த இடத்தில் குடியிருக்கிறோம். அங்கே மாந்தோட்டமும், நெல் வயல்களும் இருக்கின்றன. ஆண்டுக்கு ஒரு முறை வன இலாகாவினரும், வருவாய்த் துறை அதிகாரிகளும் 5 ஆயிரம் ரூபாய் கொடுங்கள், 10 ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்று எங்களிடத்திலே முறையிடுகிறார்கள். எங்களுக்குத் தொல்லை தருகிறார்கள். ஆகவே எங்களுக்கு நிரந்தரமாக பட்டா வழங்க ஆவன செய்யுங்கள்" என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அரசு அவர்களுடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, அவர்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 பிப்ரவரி 23

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி ஊர்கள் தருமபுரி மாவட்டம், ஒசூர் வனக் கோட்டத்தில் உள்ள சொக்கம்பட்டி காப்பு வனப் பகுதி-2-ல் அமைந்துள்ளன. இப்பகுதி 1987-ல் காப்பு வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டு உள்ளது. காப்பு வனப் பகுதியாக அறிவிக்கும் முன், வன நிர்ணயப் பணிக்கென அரசால் நிர்ணயிக்கப்பட்ட வன நிர்ணய அலுவலர் மேற்காணும் வனப் பகுதியில் விவசாயம் செய்து வந்த நபர்களிடமிருந்து மனு பெற்று, விதிமுறைகளைப் பரிசீலித்து, 398 நபர்களுக்கு 208.27 Hectare பகுதி வன நிலத்தை பட்டா வழங்கி, மீதியுள்ள பகுதியை காப்பு வனப் பகுதியாக அறிவித்து பரிந்துரை செய்துள்ளார். வினாவில் குறிப்பிட்டுள்ள கிராம மக்கள் வன நிர்ணய அலுவலருக்குத் தேவைப்படும் ஆதாரங்களை அப்பொழுது கொடுக்கத் தவறியதால், அவர்களுடைய கோரிக்கை 1987 ஆம் ஆண்டிலேயே நிராகரிக்கப்பட்டது. மேலும், வனப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் தற்பொழுதுள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றின்படி வன நிலங்களை வனம் சாராப் பணிக்கு வழங்க இயலாது என்ற நிலை உள்ளது. எனவே, காரிமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட காடுகளில் விவசாயம் செய்யும் மக்களுக்கு மேற்படி நிலத்தை பட்டா செய்து வழங்க இயலாது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

(முற்பகல் 10-10

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று விவசாயிகள் பட்டா கேட்பது தருமபுரி மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இருக்கிறது. சென்ற முறை இது சம்பந்தமாக நான் ஒரு வினா எழுப்பினேன். திண்டுக்கல் மாவட்டத்தில், சிறுமலைப் பகுதியில் 300 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகின்ற விவசாயிகளுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். இதுவரை வழங்கப்படவில்லை. ஆனால், வருவாய்த் துறையில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டது. வனத் துறையின் அனுமதியோடு, இரண்டு இலாகாகளும் சேர்ந்து மீண்டும் Re-settlement கொண்டு வந்தால்தான் தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு மலைப் பிரதேசங்களில் வாழக்கூடிய விவசாயிகளின் குடியிருப்பு நிலங்களுக்கும், 300, 400 ஆண்டுகளாகத் தொடர்ந்து அவர்கள் விவசாயம் செய்கின்ற விவசாய நிலங்களுக்கும் பட்டா வழங்கினால்தான் விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும் என்ற அடிப்படையில் அரசு இது குறித்து தீர்க்கமான



1999 பிப்ரவரி 23]

முடிவை எடுத்து மீண்டும் Re-settlement கொண்டு வருவதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா, இது குறித்து வனத் துறை உதவுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ஆம் ஆண்டு மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வனப் பகுதிகளை வனவியல் அல்லாத இதரப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். மேற்கண்ட வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஆக்கிரமிப்பு குறித்த நெறிமுறைகளில் இச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட 25-10-1980-க்கு முன் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளாக இருந்து, அவற்றை முறைப்படுத்த மேற்படி தேதிக்கு முன்னதாக அரசு முடிவு செய்திருந்தால் மட்டுமே அவற்றை வரன்முறைப்படுத்திட இயலும். அதை விடுத்து மேற்காணும் சட்டம் ஏற்படுத்தப்பட்டபின் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த இயலாது. மேலும் ஒரு நாட்டின் செழுமைக்கு அந்நாட்டின் மொத்தப் பரப்பில் 33 சதவிகிதம் வனப் பகுதியாக இருக்க வேண்டும். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில், அதன் மொத்தப் பரப்பளவில் 17 சதவிகிதம் மட்டுமே வனப் பகுதியாக உள்ளது. எனவே, புதிதாக பட்டா செய்து கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை அமைச்சர் சொன்னதுபோல் காடுகளுக்கு உட்பட்டிருந்தாலும், மலைப் பகுதிகளிலே இருக்கக்கூடிய கிராமங்களிலே விவசாயம் செய்துவந்தாலும், அப்படிப்பட்ட மலைப் பகுதிகளிலே இருக்கக்கூடிய நிலங்களுக்குப் பட்டா வழங்க இயலவில்லை என்றாலும், மலையைச் சார்ந்து இல்லாத பகுதியாக, சம நிலப் பகுதியாக இருந்து, அங்கே 40 ஆண்டுக்காலம், 50 ஆண்டுக்காலம் அந்த விளை நிலங்களில் பயிரிட்டு வருகின்ற விவசாயிகளுக்கு, வனத் துறைக்குத் தேவை இல்லாத நிலங்களையாவது பட்டா செய்து கொடுக்க ஆவன செய்வார்களா என்றும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரம், பாலக்கோடு, அரூர், மொரப்பூர், தளி போன்ற தாலுகாக்களில் விவசாயம் செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான விவசாயிகளின் விளை நிலங்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா என்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதுடன், இதுகுறித்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்றும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 பிப்ரவரி 23

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்களுக்கு நான் அளித்த பதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுக்கும் பொருந்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன நிலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இருக்க முடியாது. ஆனால், தமிழ்நாடு முழுவதும் வனத் துறைக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் 100 ஆண்டுகள், 150 ஆண்டுகள் என்ற அளவில் தனியாரிடம் இருக்கின்றன. ஓர் ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற அளவில் அது தனியாரிடம் இருக்கிறது. குறிப்பாக, கூடலூர் தொகுதியில் 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தை அனுபவித்து வருகின்றார்கள். இதனால் வனத் துறைக்கு எந்தப் பயனும் இல்லாமலும் நடவடிக்கை எடுக்க முடியாமலும், இருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் சொன்னதுபோல Re-Survey செய்து யார் யாரிடத்தில் நிலங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து முறைப்படுத்தி ஒப்படைத்தால்தான் அரசுக்கும் சரியான வருமானம் கிடைக்கும். தனியாருக்கும் ஒரு சரியான நிலை ஏற்படும் என்பதால் இது குறித்த நடவடிக்கையை அரசு அவசர, அவசியம் கருதி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் கூடலூர் ஜென்மம் நில ஒழிப்புச் சட்டம் 1969 ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டு இதன்மூலம் வனத் துறைக்குக் கூடுதலான வனப் பரப்பு சேர்க்கப்பட்டது. இச்சட்டங்களின் மூலம் வனத் துறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பரப்பில் ஏற்கெனவே ஜமீன்தாரர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்கள் ஆக்கிரமித்த பகுதிகள் தவிர்த்து வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பினை வனச் சட்டத்தின்கீழ் காப்புக் காடாக அறிவிக்க நடவடிக்கை எடுத்த காலகட்டத்தில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டன. தமிழ்நாடு வனச் சட்டத்தின்படி காப்புக்காடாக அறிவிக்க விரிவான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருப்பதால் இப்பணியினை முடிக்கப் பல வருடங்கள் ஆகிவிடுகின்றன. இச்சமயத்தில் ஆக்கிரமிப்பாளர்கள்



1999 பிப்ரவரி 23]

நீதிமன்றங்களுக்குச் சென்று தடை ஆணை பெற்றுவிடுவதால் ஆக்கிரமிப்புகளை அகற்ற இயலாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இருந்தாலும் உறுப்பினருடைய எண்ணத்தை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் சட்டத்தைப்பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய விழுப்புரம் மாவட்டத்தில், என்னுடைய தொகுதி சங்கராபுரத்தில் கல்வராயன் மலைப் பகுதியை 1977 ஆம் ஆண்டுதான் வன இலாகா ஜமீன்தாரர்களிடமிருந்து எடுத்துக்கொண்டது. வனத் துறை மூலமாக, R.F. Territoryக்கு நிதியொதுக்குகின்றபோது. அவர்கள் பயிர் செய்கின்ற தினை. சாமை. வரகு போன்றவற்றை இந்த நிலங்களில் Plantation என்ற முறையில் அந்தப் பழங்குடி மக்கள் பயிர் செய்கிறார்கள். அவர்கள் காலந்தொட்டு, மலை எப்பொழுது உருவானதோ. அவர்கள் எப்போது அங்கே வாழ்க்கையைத் தொடங்கினார்களோ, அதிலிருந்து முழுக்க முழுக்க அங்கேயே அந்தப் பழங்குடியின மக்கள் வாழ்கின்றார்கள். ஆகவே. வனத் துறைக்கும் அந்த மலைவாழ் மக்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அவர்கள் பயன்படுத்துகின்ற அந்த நிலத்திற்குத் தனிக் கவனம் செலுத்தி, பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விழுப்புரம் மாவட்டம் பெரிய கல்வராயன் மலையில் உள்ள 57,111.24 Hectare நிலம், இனாம் எஸ்டேட் தடைச் சட்டம் 26/48 மற்றும் அரசாணை எண் 3157, வருவாய்த் துறை, நாள் 9-12-1950-ன்படி அரசால் வனத் துறை வசம் 1956 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டு, அதில் 45,225.06 Hectare நிலம் வனச் சட்டப் பிரிவு 26-ன்கீழ் அறிவிக்கப்பட்டது. இதில் ஏற்கெனவே வனச் சட்டப் பிரிவு 4-ன்கீழ் அறிவிக்கப்பட்ட 17,110.16 Hectare நிலம் தவிர்த்து, மீதமுள்ள 28,144 Hectare பரப்பிற்கான அறிவிக்கையை. வனச் சட்டத்தின் கீழ் அறிவிக்க நடவடிக்கை எடுத்தபோது, விழுப்புரம் மாவட்ட

[1999 பிப்ரவரி 23

ஆட்சித் தலைவரால், நில ஆணையர் அறிவுரையின்படி கல்வராயன் மலையில் உள்ள பழங்குடியினர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ஓர் ஏக்கர் வீதம் நில ஆர்ஜிதம் வழங்கியபின், மீதமுள்ள பகுதி வனச் சட்டத்தின்கீழ் அறிவிக்க அறிவுறுத்தப்பட்டது. இதற்கான பணி தற்போது நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சிறுமலையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேள்வி கேட்டார்கள். அந்த இடத்தை நானும் நேரில் சென்று பார்த்திருக்கிறேன். ஒரு காலத்தில் ஜமீன் காலத்தில், அந்த இடங்களெல்லாம் ஜமீன்தாரர்களால் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள். அந்த இடத்திலே பட்டா கேட்டார்கள். நான் நேரில் சென்று பார்த்த பிறகுதான் அமைச்சரிடத்திலே சொல்வேன் என்று சொல்லி, நேரில் சென்று பார்க்கச் சென்றபோது, தனியாரிட ததிலே இருக்கின்ற நிலத்திலேதான் மரங்கள் அடர்த்தியாக இருக்கின்றன. ஆனால், வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களெல்லாம் அழிக்கப்பட்டு மரங்களெல்லாம் வெட்டப்பட்டு பொட்டலாகக் கிடக்கின்றன. அதையும் இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். எங்களுக்கெல்லாம் சிறுமலையிலே மரங்கள் இருந்தால்தான் மழை பெய்யும். ஆகையினாலே, தயவுசெய்து மீண்டும் பரிசீலனை செய்து, நிலத்தை பார்வையிட்டு அவர்களுக்கு—அந்த சிறுமலைப் பகுதியிலே தனியார் அனுபவித்து வருகின்ற நிலங்களுக்கெல்லாம் ஒரு நிபந்தனையோடு பட்டா கொடுப்பதற்கு உரிய முயற்சியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பழைய அரசாங்கத்தின் காலத்திற்குச் சொந்தமானதாக இருக்கலாம். ஆனால், இப்போது அப்படி இல்லை. மரங்கள் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிறுமலை மேற்கு வனப் பகுதியிலுள்ள விராலிப்பட்டி கிராமம் க.ச.-1-ல் பட்டா கோரி ஆக்கிரமிப்பாளர் விண்ணப்பித்ததை வனப் பாதுகாவலர் மற்றும் மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் கூட்டாகத் தணிக்கையிட்டு, ஆக்கிரமிப்பாளர்கள் தனித் தனியாக வேலியிட்டு, சமவெளிப் பகுதிகளில் பணப் பயிரிட்டு



1999 பிப்ரவரி 23]

சாகுபடி செய்து வருவதாகவும், வசதிமிக்க நிலச்சுவான்தாரர்கள் பினாமிகள் பெயரில் ஆக்கிரமிப்புச் செய்து வனப் பகுதியிலுள்ள விலை மதிப்புமிக்க மரங்களை வெட்டி விற்பனை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் உள்ளதையும் கண்டறிந்து அரசு விதிமுறைகளின்படி ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, 1987 ஆம் ஆண்டு வனக் காப்புச் சட்டப்படி. சொக்கம்பட்டியில் அதிகாரிகளால் 398 நபர்களுக்கு 208 ஏக்கர் நிலம பட்டா கொடுக்கப்பட்டது என்று கூறினார்கள். அதேபோல, தற்போது இருப்பவர்களுக்கும் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். மேலும், இப்போது மாம்பழ சீசன் வர இருக்கின்ற காலம். ஆகவே, மாந்தோட்டங்களிலே பூ பிடிக்கின்றது. இப்போது வன இலாகாவினர் அந்தப் பூக்களையெல்லாம் உதிர்த்துவிடுவதாக மிரட்டுகின்றார்கள். ஆகவே, அதையும் அரசு கவனத்தில்கொண்டு கட்டுப்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு உறுப்பினர் அவர்கள் புகார் கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும். மற்றபடி நான் ஏற்கெனவே சொன்ன பதில்கள் தற்போது உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**77—**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

***11478—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 23

சாத்தான்குளம் தொகுதி, பெரியதாழையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தான்குளம் தொகுதி, பெரியதாழையில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார் இருக்கையில் இல்லை. திரு. வி.பி. இராசன்.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையின் மூலம் ஒவ்வொரு பகுதிக்கும் Visiting Centres என்று சொல்லக்கூடிய பார்வைக் கிளை நிலையங்கள் அமைக்கப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், விருதுநகர் மாவட்டத்தில் இன்னும் அந்தப் பார்வைக் கிளை நிலையங்கள் தொடங்கப்படவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? குறைந்தபட்சம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் அந்தக் கிராமங்களிலாவது உடனடியாகப் பார்வைக் கிளை நிலையங்களைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 2126 பார்வைக் கிளை நிலையங்கள் தொடங்கப்பட வேண்டுமென்று அரசு அறிவித்ததற்கிணங்க அந்தந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 5 பார்வைக் கிளை நிலையங்கள் அமைக்க இடங்களைத் தேர்வு செய்து தரலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்களும் இடங்களைத் தேர்வு செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்போது அதைக் கொஞ்சம் கொஞ்சமாக தொடங்கி வருவதாகத் துறையிலிருந்து பதில் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடம் என்று குறிப்பிடுவார்களானால், அதற்கான விளக்கத்தைத் தர முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



1999 பிப்ரவரி 23]

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தச் சட்டமன்றப் பேரவையில் அன்று பொறுப்பிலே இருந்த அமைச்சர் அவர்கள் 2169 பார்வைக் கிளை நிலையங்கள் ஆரம்பிப்பதாகக் கூறி இன்னும் அதை முழுமையாகச் செயல்படுத்தாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதை விரைவாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வைக் கிளை நிலையங்கள் ஏற்கெனவே உள்ள கிளை நிலையங்களிலிருந்து பிரித்துத் தரப்படுவது. கிளை நிலையத்தினுடைய பொறுப்பாளராக கால்நடை ஆய்வாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். 800-க்கும் மேற்பட்ட கால்நடை ஆய்வாளர்களின் பணியிடம் காலியாக இருக்கிறது. சென்ற ஆண்டு 125 பேரை நியமனம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கினார்கள். அவர்களைத் தேர்வு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**78—**

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

***14960—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின்கீழ் பணியாற்றும் பெண்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் அங்கன்வாடிப் பணியாளர்களாக 127 பேர்களும், உதவியாளர்களாக 254 பேர்களும் ஆக மொத்தம் 381 பேர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே இந்த I.C.D.S. திட்டம் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது. மாநிலம் முழுவதும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவோமேயானால் ஆயிரக்கணக்கான பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இப்போது பெண்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருந்தால் திருமணம் ஆன பிறகுகூட துரத்தப்படுகிறார்கள். எனவே, இந்த I.C.D.S. திட்டத்தை வத்தலக்குண்டு பகுதியிலே கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 113 இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதில் அங்கன்வாடி மையங்களாக 1477 இயங்கி வருகின்றன. அம்மையார் அவர்கள் வத்தலக்குண்டு பகுதிக்கு வேண்டும் என்று கேட்கிறார்கள். நிலக்கோட்டை பகுதிக்கு வேண்டாம் என்று சொல்கிறார்களா என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும்......

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வேறு Union. இது வேறு Union. இரண்டிற்கும் வேண்டும்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையங்கள் எந்தெந்த இடங்களில் தொடங்கப்படவேண்டும் என்பது குறித்து மத்திய அரசு முடிவு செய்து தமிழக அரசுக்கு அனுமதி அளிக்கிறது. எனவே, மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்குமானால் தமிழக அரசு அது குறித்துப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்தில் டாக்டர் புரட்சித் தலைவி



அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொட்டில் குழந்தைத் திட்டம் தற்போது கைவிடப்பட்டுவிட்டது என்றும், சேலத்தில் கிட்டத்தட்ட 140 கைக்குழந்தைகள் தங்களுடைய நிலைமை என்ன, கதி என்ன, என்றுகூடத் தெரியாமல் இருப்பதாகவும் 'தமிழன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அந்தத் தொட்டில் குழந்தைத் திட்டம் இந்த அரசாங்கத்தால் கைவிடப்பட்டு விட்டதா அல்லது நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு இது துணைக் கேள்வி இல்லையெனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய செய்தி தவறான செய்தி என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட தொட்டில் குழந்தைத் திட்டம்கூட முழுவதுமாக நடைபெறாமல் போய்விட்டது என்பதை நாட்டுமக்கள் நன்கு அறிவார்கள். ஆனால் தமிழக அரசின் சார்பாக அந்தத் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது ஊரறிந்த ஒன்று. இரண்டு பெண் குழந்தைகள் திட்டத்தை தமிழக அரசு புதுமையான முறையிலே நடைமுறைப்படுத்தி வருகிறது. கடந்த கால ஆட்சியிலே இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால், அந்த இரண்டாவது பெண் குழந்தைக்கு அவர்கள் உதவித் தொகை வழங்குவதாக பொய்யான தகவலை தமிழக மக்களுக்குச் சொல்லி வந்தார்கள். 5000 ரூபாய் பண உதவி செய்வதாக அறிவித்து ஒரு பாஸ் புத்தகத்தையும் கொடுத்திருந்தார்கள். ஆனால், அவர்கள் எந்த ஒரு குழந்தையின் பெயரிலும் 5000 ரூபாயை முதலீடு செய்யவில்லை என்பதை நான் ஏற்கெனவே இந்தச் சட்டப் பேரவையிலே தெரிவித்திருக்கின்றேன். இருந்தாலும், கருணை உள்ளத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆட்சியிலே இதற்காகப் பதிவு செய்து ஏமாற்றப்பட்ட அந்தப் பெற்றோர்களுக்கு மன நிறைவைத் தரும் வகையில் அந்தக் குழந்தைகள் பெயரிலே 5000 ரூபாயை தமிழக அரசு சார்பாக முதலீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை 15 சதவிகித வட்டிக்கு அரசுப் போக்குவரத்து நிதி

[1999 பிப்ரவரி 23

நிறுவனத்திலே முதலீடு செய்திருக்கிறார்கள். எனவே, உண்மையாக அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலும், இப்போது இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால முதல் குழந்தைக்கும் மற்றும் இரண்டாவது குழந்தைக்கும் சேர்த்து தலா 1500 ரூபாய் முதலீடு செய்து வருகிறார்கள். ஒரே ஒரு பெண் குழந்தை பெற்றெடுத்தால், அந்தப் பெண் குழந்தையைப் பெற்றெடுத்ததற்காக, சிறப்பாக 3000 ரூபாயை அதற்காக முதலீடு செய்கிறார்கள். எனவே, 1500 ரூபாய் முதலீடு என்று சொன்னால் அது 20 ஆண்டுகளில் அந்தக் குழந்தைக்கு உதவித் தொகையாக 29000 ரூபாய் கிடைக்கும். ஒரு பெண் குழந்தை என்றால் அதுவே 20 ஆண்டுகளில் 58,000 ரூபாய் கிடைக்கிறது. எனவே, மாநிலத்தில் நடைபெறுகின்ற இந்த அருமையான செயல் திட்டம், தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டம் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதை இந்த நேரத்திலே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

பிறந்த குழந்தைகள் கொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்காகக்கூட தற்சமயம் ஜப்பானிய அரசு மூலமாக உதவாகப்பட்ட ஒரு நிறுவனம் மூலமாக, இந்தியக் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சேலத்தில் அதற்காக ஒரு பட்டத்தை அவர்களிடத்திலே ஒப்படைத்து, அவர்கள் அங்கே இருக்கின்ற கர்ப்பிணிப் பெண்களோடு தொடர்பு கொண்டு பெண் குழந்தை பிறந்தால் அதை வளர்ப்பதற்குண்டான வழிவகைகளையும் அரசின் மூலமாகக் கடன் உதவி அளிக்கின்ற திட்டத்தையும் நடைமுறைப்படுத்துகிறார்கள்.

மேலும் ஏதேனும் குழந்தைகள் தவறான முறையிலே பிறந்துவிடும் என்று சொன்னால் அக்குழந்தைகளுக்குண்டான வாய்ப்பை வழங்க முடியாமல் சிலர் குழந்தைகளைத் தவற விட்டுவிடுகிறார்கள் என்று சொன்னால் அந்த மாதிரிக் குழந்தைகளைப் பற்றிக்கூட அருகில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக அல்லது சமூக நலத் துறை மூலமாக, தகவல் தெரிவிப்பார்கள் என்று சொன்னால் உடனடியாக அந்தக் குழந்தைகள் தமிழக அரசின் சார்பாக, பதிவு செய்யப்பட்டுள்ள 15 தத்து கொடுக்கும் நிறுவனங்களில் ஒப்படைக்கப்பட்டு, அக்குழந்தைகள் பாதுகாக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தினுடைய நிலையைப் புரிந்து கொள்ளாமல் மாண்புமிகு



1999 பிப்ரவரி 23]

உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை சபைக்குத் தெரிவிக்க வேண்டாம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திரு. மு. பன்னீர் செல்வம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**79—**

### மேல்நிலைப் பள்ளிக்கு விடுதிகள் வசதி

***4575—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் கொண்டல் ஆதிதிராவிடர் நலத் துறை மேல்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் குடியிருப்பு, ஆண், பெண் விடுதிக் கட்டடங்கள், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்ட 1998-99 ஆம் ஆண்டில் ரூ.33.00 இலட்சம் அரசால் நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு ஆசிரியர் குடியிருப்பு, மாணவர் விடுதிக் கட்டடம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றிற்கு நிதிநிலைக்கேற்ப பரிசீலித்து நிதி ஒப்பளிப்பு அளிக்கப்படும்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய மேல்நிலைப் பள்ளி முழுமையாக ஒரு கிராமத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்கு ஆசிரியர்கள் செல்ல வேண்டும் என்று சொன்னால் சீர்காழியிலிருந்து சுமார் 8 Kilometre அளவிற்கு பேருந்து மூலமாகத்தான் செல்ல வேண்டும். அங்கே தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு கட்டடம் ஒன்று போதுமான

வசதியில்லாமல் இருக்கிறது. அதேபோல மாணவியர் விடுதிக்கும் போதுமான வசதி இல்லாமல் இருந்து.. தமிழக முதலமைச்சர் அவர்களும், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் தாய் உள்ளத்தோடு, மிகப்பெரிய தொகையாக 33 இலட்சம் ரூபாயை அந்த விடுதிக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். மாணவர் விடுதிக்குப் போதுமான வசதிகள் இல்லாமல், அதுவும் கிராமப்புறத்திலே கட்டடம் இருக்கின்ற காரணத்தினால் அங்கே மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வாய்ப்பில்லை. சீர்காழி என்பது வரலாற்றுப் புகழ்மிக்க தொகுதி. பார்வதி அம்மையார் ஞானக் குழந்தைக்குப் பால் வார்த்த இடம். பெண்கள் விடுதிக்கு தாய் உள்ளத்தோடு நிதியை வழங்கிய முதலமைச்சர் அவர்கள் மாணவர் விடுதிக்கும் தாய் உள்ளத்தோடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவிற்கு வாருங்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** நிதியை ஒதுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டல் ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவியர் விடுதிககு முன்னுரிமை கொடுத்து, கட்டடம் கட்ட ரூ.33 இலட்சம் அனுமதித்து இருக்கின்றோம். சீர்காழி தொகுதி பாரம்பரியம் மிக்க தொகுதி என்று சொல்கின்றார். ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட இடம் என்று அவர் சொல்கின்றார் என்று நினைக்கின்றேன். திருஞானசம்பந்தர் பிறந்த இடம். ஆனால், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தாய்ப்பாலுக்கு அப்பால் தமிழ்ப்பால் அருந்தியவர். வாய்ப்பால் நமக்குக் கிடைத்த வள்ளுவ முப்பாலுக்குக் குறளோவியம் எழுதியவர். ஆகவே, ஞானசம்பந்தர் பிறந்த இடம் என்றாலும், கலைஞர் புகுந்த இடம். ஆகவே, அங்கே நாங்கள் பால் ஊற்றுவோம், மாணவர் விடுதிக்கு முன்னுரிமை கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

(முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் 80, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



**80—**

**மீனவர்களை மீட்கும் மையம்**

***20997—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இயற்கைச் சீற்றத்தால் அடிக்கடி காணாமல் போகும் மீனவர்களை மீட்க மையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய மீனவர்கள், மீன் பிடிக்கச் சென்று, திரும்பவும் அவர்கள் வீட்டுக்கு வர இயலாத நிலை பல காலங்களிலே ஏற்பட்டு, அந்தக் குடும்பங்கள் எல்லாம் அவதிப்படுகிற நிலையை நாம் அடிக்கடி கண்டு வருகிறோம். சில நேரங்களிலே, மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடித்துத் திரும்புவதற்கு சில நாட்கள் ஆனாலும்கூட, திடீரென்று ஏற்படும் புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களினாலே அவர்கள் மாட்டிக் கொண்டு, கடலிலே மூழ்கி விடுகிறார்கள். அவர்கள் என்ன நிலைமைக்கு ஆளானார்கள் என்றுகூட அந்தக் குடும்பம் அறியாத நிலை ஏற்பட்டு, அந்தக் குடும்பமே சூனியமயமாகிவிடும் நிலைமை எல்லாம் உண்டாகியிருக்கிறது. சமீபத்திலேகூட இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நம்புதாளை என்னும் மீனவர் கிராமத்திலிருந்தும், புதுக்கோட்டை.... மாவட்டத்திலே ஜெகதாப்பட்டினம் ஏம்பவயல் என்ற ஊரிலிருந்தும், 2-2-1999 அன்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற சின்ன வேலாயுதம் மகன் காளி என்பவரும், சின்ன வேலாயுதம் மகன் முத்துராக், சிறிய ரங்கன் மகன் பஞ்சநாதன், லட்சுமணன் மகன் கோவிந்தன், ராக் மகன் தொண்டி ஐயா ஆகிய 5 பேரும், கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றவர்கள் திரும்ப வரவேயில்லை. அவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியாமல் அந்தக் குடும்பங்களே ஏங்கிக் கொண்டிருக்கிறபோது, சில தினங்களுக்கு முன்பு Sun T.V.யிலேகூட இந்த 5 மீனவர்கள் இலங்கையிலே இருப்பதாக, செய்தி வந்ததாகச் சொல்கிறார்கள். ஆகவே, இப்படி

[1999 பிப்ரவரி 23

அடிக்கடி இலங்கைக் கடற்படையினர் நம்முடைய எல்லைக்குள் புகுந்து, அவர்களைக் கடத்திச் செல்வதையும், அவர்களைக் கொடுமைப்படுத்துவதையும், இயற்கைச் சீற்றங்களினால், சில நேரங்களிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன வினாவா? நீங்கள் இப்படிப் பேசிக் கொண்டே போனால், நான் அனுமதி அளிக்க மாட்டேன். நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இந்த நிலைமைகளிலே, இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படக்கூடிய அந்தப் பாதிப்பைப் போக்குவதற்கு கடலோரப் பகுதிகளிலே பாதுகாப்பிற்காக இந்த மையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் காணாமல் போய்விட்டால், உடனடியாக, கடலோரக் காவல் படை மூலமாகவும், வான் வழியாகவும் மற்றும் கடல் வழியாகவும் தேடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், வணிகக் கப்பல் துறை வழியாக, அங்கே கடலில் செல்லும் வணிகக் கப்பல்களைத் தொடர்பு கொண்டு, மீனவர்களைத் தேடச் செய்கிறோம். அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலுள்ள இதரப் படகுகள் மூலம் மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கிறோம். அதுமட்டுமல்லாமல், 1997-98 ஆம் ஆண்டு சென்னை, கடலூர், சின்னமுட்டம் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்குத் தொலைத்தொடர்புச் சாதனங்கள் வழங்குவதற்காக—1,500 சாதனங்கள் அளிப்பதற்காகவும், நிலையங்கள் அமைப்பதற்காகவும், 83.65 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அதற்காக, ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டு, ELCOT நிறுவனத்திற்கு அந்த ஆணை வழங்கப்பட்டது. 100 மீனவர்களுக்கு அந்தக் கருவிகள் வழங்கப்பட்டு, 30 நாட்களுக்குள் அதன் பலனை அறிந்து, மீதிக் கருவிகளை வழங்கலாம் என்ற நிலையிலிருக்கும்போது, உலகக் கடல் அபாய அறிவிப்புத் திட்டம் என்ற திட்டத்தை 1-2-1999 முதல் அமல்படுத்தி இருப்பதால், அந்த நிலைக்கு ஏற்றாற்போல் இந்தக் கருவிகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டதால் ELCOT நிறுவனம் இதுபோன்ற கருவிகளை எங்களால் வழங்க முடியாது என்று சொல்லிவிட்டது. ஆகவே, மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 1-2-1993 பிற்பகல் 3-00 மணி அளவில் ஒப்பந்தங்கள் எல்லாம் திறக்கப்பட்டன.



1999 பிப்ரவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேதி 1-2-1993 தானா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** 1-2-1999 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் குழுவிற்கு அனுப்பப்பட்டு, பரிசீலனையில் வைக்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்தத் தொலை தொடர்புச் சாதனங்கள் சென்னைக்கு 850, கடலூருக்கு 450, சின்னமுட்டத்திற்கு 200 வழங்கப்படவுள்ளன. இலங்கைக் கடற்படையினரால் கொண்டு செல்லப்படுகிற மீனவர்களை மீட்டு வருவதற்கும் அரசு உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறது. இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள் அங்கேயுள்ள இந்தியத் தூதரகம் மூலம் தகவல் கொடுக்கப்பட்டு அவர்கள் மீட்டு வரப்படுகிறார்கள். அவர்கள் தமிழகத்திற்கு மீட்டு வரப்படும்வரை அந்த வீட்டிற்கு ஒரு நபருக்கு ரூ.50 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணையின்படி இந்த உதவித் தொகை 30-7-1998 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி 26 மீனவர்களுக்கு ரூ. 50,000 வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்த மீனவர்களை நாங்கள் உடனுக்குடன் தேடிக் கண்டுபிடிக்க, மத்திய அரசு உதவியுடன் ரூ. 4½ கோடி அளவில், 5 ரோந்துப் படகுகள் பாண்டிச்சேரியில் தயாராகி வருகின்றன. சென்னை, மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி போன்ற இடங்களுக்கு இந்தப் படகுகள் எல்லாம் விடப்பட இருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களும், நீலம், பவளம், முத்து, கயல், வலம்புரி என்று படகுகளுக்குப் பெயரும் சூட்டியிருக்கிறார்கள். இவற்றின் வழியாக மீனவர்களை மீட்கமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இன்னும் 5 மீனவர்களும், ஒரு படகும் மீட்டு வரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடியவிரைவில் மீட்டு வருவதற்காக ஆவன செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[1999 பிப்ரவரி 23

முற்பகல் 10-35

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்@

(முதல் பட்டியல்)

### சுற்றுச் சுவர் கட்டுதல்

1—

வினா 14642—**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, தேரழுந்தூர், கம்பர் அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் இல்லாமல் மாணவ, மாணவியர் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சுற்றுச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தேரழுந்தூர், கம்பர் அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் அமைக்க, அரசாணை எண் 581, கல்வி, நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைப்பது தொடர்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்புகொண்டு, மேல் நடவடிக்கை எடுக்குமாறு நாகை முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2—

### கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

வினா 17930—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் நிரப்பப்படாமல் இருக்கும் கைத்தொழில் ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசு ஆவன செய்யுமா?

@ உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள், அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



1999 பிப்ரவரி 23]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1992-ல் உடற் கல்வி ஆசிரியர் மற்றும் ஓவிய ஆசிரியர் பணியிடங்களைத் தவிர, பிற கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்பத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் தடை, அரசாணை நிலை எண் 132, கல்வி, நாள் 27-4-1998-ல் ஓரளவு தளர்த்தப்பட்டு, 1998-99-ல் 100 தையல் ஆசிரியர் பணியிடங்களையும், 68 இசை ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3—

### உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வசதி

வினா 20739—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புளியரை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக வகுப்பறைக் கட்டடமும், கழிப்பறை வசதியும் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998-ன்படி திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புளியரை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.4.40 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இப்பள்ளிக்குக் கழிப்பறை கட்டித்தரும் கோரிக்கை தொடர்பாக, பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரை பெறப்பட்ட பிறகு, அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

4—

### தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனத்தின் விற்பனை நிலையம்

வினா 20777—**டாக்டர் வே. ஆல்பன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவட்டாறு மற்றும் குலசேகரம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அவ்வாறு அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**5—**

### மூன்று தொலைபேசி வசதி செய்தல்

வினா 12436—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரிலுள்ள மாவட்ட மருத்துவமனையில் உள்ளிருப்புப் பகுதியில் ஒரு தொலைபேசி வசதி மட்டுமே இருப்பதை மாற்றி, மூன்று தொலைபேசி வசதி செய்து தருமாறு அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூரிலுள்ள மாவட்ட மருத்துவமனையில் உள்ளிருப்புப் பகுதியில் மூன்று தொலைபேசி வசதி செய்து தருமாறு அரசிற்குக் கோரிக்கை இதுகாறும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**6—**

### மின்சாரம் தடையின்றி வழங்குதல்

வினா 14500—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தமிழக விவசாயிகளுக்கு, பம்ப்செட்டுகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் தடையின்றி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள தமிழ்நாடு மின் வாரிய விதிகளின்படி, விவசாயிகளுக்கு, பகலில் 4 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகின்றது. மற்ற நேரங்களில் இருமுனை மின்சாரம் வழங்கப்படுகின்றது. எனினும், தமிழ்நாட்டின் மின் கட்டமைப்பின் (Tamil Nadu Grid) நிலையினைப் பொறுத்து, மும்முனை மின்சாரம் வழங்கும் நேரம் மாற்றப்படும்.

**7—**

### தொழிற்சாலைகளுக்கு மின் அழுத்த சக்தி உயர்த்தப்படுதல்

வினா 16273—**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்த மின் அழுத்த சக்தி உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு அதிகபட்ச குதிரை சக்தி 150 என்று இருப்பதை 250 ஆக உயர்த்துவதற்கு அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோரிக்கையை ஏற்பதற்கில்லை.

**8—**

### மின் பகிர்மான வட்டம்

வினா 16278—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு திருப்பூர் மின் பகிர்மான வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**9—**

### புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்

வினா 16281—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சாரத் துறை மூலம் 1997-98-ல் புதிய மின் உற்பத்தித் திட்டங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவு எவ்வளவு?

(ஆ) ஆம் எனில், அந்த மின் உற்பத்திக்கு சராசரி ஒரு யூனிட்டுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின் வாரியத்தில் 1997-98-ல் 8 மெகாவாட் திறன் கொண்ட கீழ்பவானி வலக்கரை புனல் மின் நிலையம் உற்பத்தியை பிப்ரவரி 28 ஆம் நாள் தொடங்கியது. மார்ச் மாதத்தில் அதன் உற்பத்தி அளவு 4,86,600 யூனிட்டுகள் ஆகும்.

(ஆ) இந்த மின் உற்பத்தி இயந்திரங்கள் பரிசோதனையில் இருப்பதாலும், மேலும் வர்த்தக ரீதியாக இயக்கப்படாத காரணத்தாலும், மின் உற்பத்திச் செலவை தற்போது நிர்ணயிக்க இயலாது. விவசாயத்திற்கு விடப்படும் நீரைக் கொண்டே மின் உற்பத்தி





செய்யப்படுவதால் ஒரு வருட முழுமையான காலத்தை வைத்துத்தான் ஒரு யூனிட்டுக்கு ஆகும் செலவை நிர்ணயிக்க முடியும்.

**10—**

### மின் மாற்றி அமைத்தல்

வினா 16291—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்திலுள்ள அரங்கனூர், அரங்கனூர் ஊராட்சியிலுள்ள கொல்வேப்பிநாயக்கனூர், செம்மனூர் ஆகிய இடங்களில் குறைந்த மின் அழுத்தம் உள்ளதால், அதிக மின் அழுத்தமுள்ள மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்திலுள்ள அரங்கனூர், அரங்கனூர் ஊராட்சியிலுள்ள கொல்வேப்பிநாயக்கனூர் மற்றும் செம்மனூர் ஆகிய பகுதிகள் வெள்ளார் பிரிவு அலுவலகத்திற்குட்பட்டது. அரங்கனூர் மற்றும் கொல்வேப்பிநாயக்கனூருக்கு மரக்கோட்டை மின் மாற்றிகளின் திறன் ஏற்கெனவே உள்ள மின் இணைப்புகளின் மின்பளுவிற்குப் போதுமானதாக உள்ளது. மேலும், மின்னழுத்தம் சீராகவே உள்ளது. இப்பகுதியில் தற்போது புதிய விண்ணப்பங்கள் எதுவும் நிலுவையில் இல்லாததால் புதிய மின் மாற்றிகள் அமைக்க வேண்டிய தேவை தற்போது இல்லை. செம்மனூர் பகுதியில் இருக்கும் இரு மின் மாற்றிகளுடன், நிலுவையில் உள்ள விவசாய விண்ணப்பங்களுக்கென மேலும் புதியதாக மூன்று மின் மாற்றிகள் அமைக்க அனுமதி பெறப்பட்டு, அதில் ஒரு மின் மாற்றி அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இரண்டு மின் மாற்றிகளுக்குக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, செம்மனூர் பகுதியிலும் மின் அழுத்தம் சீரடையும்.

[1999 பிப்ரவரி 23

11—

## புற்று நோயை குணப்படுத்துதல்

வினா 16675—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புற்றுநோயை முழுமையாகக் குணப்படுத்தக்கூடிய மருந்து அரசு மருத்துவமனைகளில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) டாக்ஸோரூபிசின், சிஸ்பிளாட்டின், ஃப்ளோரோராசில், மைடோமைசின், வின்கிரிஸ்டின், சைக்ளோபாஸ்பாமைடு மற்றும் ஈடோபோசைடு ஆகிய ஊசி மருந்துகளும் சைக்ளோபாஸ்பாமைடு மற்றும் புசுல்ஃபாம் ஆகிய மாத்திரைகளும் அரசு மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைக்காக உள்ளன.

12—

## பல்ஸ் ஆக்ஸிமீட்டர் வழங்கல்

வினா 16700—**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இருதயம் மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு ஆளானவர்களின் இரத்தத்திலுள்ள பிராணவாயுவின் அளவைக் காட்டும் பல்ஸ் ஆக்ஸிமீட்டர் (Pulse Oximeter) எல்லா அரசு வட்டார மற்றும் தலைமை மருத்துவமனைகளிலும் வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில், வழங்க அரசு முன்வருமா?



1999 பிப்ரவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்ஸ் ஆக்ஸிமீட்டர் கருவி 26 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கும், 28 வட்டம் மற்றும் வட்டம் சாரா அரசு மருத்துவமனைகளுக்கும் முதல் கட்டமாக வழங்கப்பட்டு, நோயாளிகளுக்குச் சிறந்த முறையில் பயன்பட்டு வருகின்றன. மீதமுள்ள 2 மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கும் 138 வட்ட அரசு மருத்துவமனைகளுக்கும் சேர்த்து மொத்தம் 140 பல்ஸ் ஆக்ஸிமீட்டர் கருவிகள் வாங்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, இக்கருவியைத் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலம் வாங்கி விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

13—

## தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயாளிகள் விவரம்

வினா 16735—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசு மருத்துவமனைகளுக்கு வந்தவர்களின் புள்ளி விவர அடிப்படையில் தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,624 ஆகும்.

| | |
|---|---|
| ஆண் நோயாளிகள் .. | 1,314 |
| பெண் நோயாளிகள் .. | 310 |

(ஆ) மேற்கண்ட அனைத்து 1,624 நோயாளிகளும், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று, அரசு மருத்துவமனைகளில் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**14—**

**துப்புரவுப் பணியாளர்கள் நியமனம்**

வினா 18740—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் 3 துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நடைமுறையில் உள்ள அரசு ஆணைப்படி ஆறு படுக்கைக்கு ஓர் அடிப்படைப் பணியாளர் எனும் விகிதாச்சாரப்படி இப்பணியிடம் நிரப்புவது முறைப்படுத்தப்படுகிறது. அதன்படி புதியதாக இப்பணியிடத்தை நிரப்பத் தடையாணை உள்ளது. எனவே, மேலும் பணியிடங்களைத் தற்போது நிரப்ப இயலாது.

**15—**

**மருத்துவமனைப் பணியாளர் நியமனம்**

வினா 18742—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் காலிப் பணியிடத்தில் 3 மருத்துவமனைப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



நடைமுறையில் உள்ள விதிகளின்படி ஆறு படுக்கைக்கு ஓர் அடிப்படைப் பணியாளர் எனும் விகிதாச்சாரப்படி மருத்துவமனையில் இப்பணியிடம் நிரப்புவது முறைப்படுத்தப்படுகிறது. அதன்படி 32 படுக்கைகள் கொண்ட பெண்ணாகரம் மருத்துவமனைக்குத் தேவையான 6 பணியாளர்கள் உள்ளனர். எனவே, இப்பணியிடங்களைத் தற்போது நிரப்பிட இயலாது.

**16—**

**மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

வினா 18783—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998 ஆம் நிதியாண்டில் சேலம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?

(ஆ) பழைய கட்டடங்களைப் பழுதுபார்க்க எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1998 ஆம் நிதியாண்டில் சேலம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்காக, ரூ.15 இலட்சத்தில் ஒரு கலர் டாப்லர் எக்கோ சிஸ்டம் கருவி வாங்கவும், ரூ.7.59 இலட்சத்தில் பேருந்து வண்டி வாங்கவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் 14 மருத்துவப் பதவிகள் மற்றும் ஓட்டுநர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) சேலம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனைக் கட்டடங்களைப் பழுதுபார்க்க ரூ.32 இலட்சம் மற்றும் மருத்துவக் கல்லூரிக் கட்டடங்களைப் பழுதுபார்க்க ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

17—

**மின் தடையைச் சரி செய்தல்**

வினா 19479—**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளில் அடிக்கடி மின் தடையுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் தடையைச் சரி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த 1998 ஆம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் மின் உற்பத்திக் குறைவு காரணமாக தமிழ்நாடு முழுவதும் மின் விநியோகம் பாதிக்கப்பட்டு இருந்தது. மேலும், அக்கால கட்டத்தில் நாட்ராம்பள்ளி 33/11 கி.வோல்ட் துணை மின் நிலையத்தில் 5 எம்.வி.ஏ. மின் மாற்றி இருந்ததால் ஃபீடர்களில் மின் விநியோகம் பிரித்து வழங்குவதில் ஏற்பட்ட சிரமத்தால் மின் தடை ஏற்பட்டது. கடந்த 12-6-1998 அன்று 5 எம்.வி.ஏ. மின்மாற்றிக்குப் பதிலாக புதிய 8 எம்.வி.ஏ. மின் மாற்றி நாட்ராம்பள்ளி 33/11 கி.வோல்ட் துணை மின் நிலையத்தில் மாற்றப்பட்டதாலும், மின் உற்பத்தியும் நல்ல நிலையில் உள்ளதாலும், தற்பொழுது மின் விநியோகம் சீராக உள்ளது.

18—

**பணி நிரந்தரம் செய்தல்**

வினா 19499—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் அனல் மின் நிலையத்தில் நீண்ட காலமாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் தொழிலாளர்களை மின் வாரியத் தொழிலாளர்களாக மாற்றி பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அனல் மின் நிலையங்களில் வேலைப்பளு நிர்ணயம் வரையறுக்கப்பட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில், வேலைப்பளு நிர்ணயம் செய்யும் பணி, நேஷனல் புரொடக்டிவிடி கௌன்சிலிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்நிறுவனம் வேலைப்பளுவினை நிர்ணயம் செய்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பியுள்ளது. நேஷனல் புரொடக்டிவ்விடி கௌன்சில் வரையறுத்துள்ள வேலைப்பளு நிர்ணயத்தினை தொழிற் சங்கங்களுடனும், அலுவலக அதிகாரிகளுடனும் பேசி, அனல் மின் நிலையங்களுக்கான வேலைப்பளு நிர்ணயம் வரையறுக்கப்பட்டபின், அனல் மின் நிலையங்களுக்கான தேவையின் அடிப்படையில், மேட்டூர் அனல் மின் நிலையம் உட்பட அனைத்து அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஒபபந்தத் தொழிலாளர்களின் பணியை நிரந்தரம் செய்வது குறித்து முடிவெடுக்கப்படும்.

19—

**பதவி உயர்வு அளித்தல்**

வினா 19521—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில், சிவில் டிப்ளமோ படித்து இளம் பொறியாளராகப் பணிபுரிவோருக்கு, 30 ஆண்டு காலப் பணிக்குப் பிறகும் கூட எந்தவிதப் பதவி உயர்வும் வழங்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த நிலையில் உள்ள சிவில் டிப்ளமோ இளம் பொறியாளர்கள் எத்தனை பேர் உள்ளார்கள்?

(இ) அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சிவில் டிப்ளமோ படித்த இளம் பொறியாளர்கள், அவர்களுக்குண்டான

[1999 பிப்ரவரி 23

மின் வாரியப் பணியாளர்களின் கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றதும், பதவி உயர்வு அளிக்கப்படுகிறார்கள். மேலும், 30 ஆண்டு காலப் பணி முடித்தவர்கள் எவருக்கும் இதுவரையில் பதவி உயர்வு வழங்கப்படாமல் இல்லை.

**20—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்துதல்**

வினா 19626—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதியில், அரசு மருத்துவமனை எடப்பாடியிலும், சங்ககிரி வட்டத்தில் அரசு மருத்துவமனை சங்ககிரியிலும் இயங்கி வருகின்றன. மேலும், முதன்மை (Main) ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கி வரும் மகுடஞ்சாவடி அருகில், காட்டூர்-இ மற்றும் வைகுந்தம் ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருவதால் மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தற்போது மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

**21—**

**புதிய துணை மின் நிலையம் அமைத்தல்**

வினா 19743—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் புதுப்பாளையம், சமுத்திரம் பகுதிகளில் மின் அழுத்தம் மிகக் குறைவாக உள்ளதால் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1999 பிப்ரவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம், சமுத்திரம் ஆகிய பகுதிகளும், பாப்பம்பாடி இயக்கமும் பராமரிப்புப் பிரிவிற்கு உட்பட்டது. மேற்படி பகுதிகளுக்கு எடப்பாடி 110 கே.வி./22 கி. வோ. துணை மின் நிலையத்தில் இருந்து எடப்பாடி ஏகாபுரம் 22 கே.வி. உயர் மின் அழுத்தத் தொடர் மூலம் இணைக்கப்பட்டுள்ள இரு புதுப்பாளையம் மின் மாற்றிகள், சமுத்திரத்திலுள்ள மூன்று மின் மாற்றிகள் வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மின் மாற்றிகளில் தொழில் துறை, விவசாயம் மற்றும் வீட்டு மின் இணைப்புகளுக்குப் போதுமான பளு உள்ளது. மின் அழுத்தமும் சீராகவே உள்ளது.

மேலும், புதுப்பாளையம் மற்றும் சமுத்திரம் பகுதிகளுக்கு சுமார் 5 கி.மீ. அருகில் உள்ள எடப்பாடி 110 கி.வோல்ட் துணை மின் நிலையத்தில் இருந்து மின் விநியோகம் செய்யப்படுவதால் இப்பகுதியில் மின் அழுத்தம் ஒரே சீராகவே உள்ளது. எனவே, இப்பகுதிகளுக்குப் புதியதாக துணை மின் நிலையம் அமைக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

**22—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

வினா 21263—**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வலையங்குளத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[1999 பிப்ரவரி 23

(அ) மற்றும் (ஆ) இல்லை. வலையங்குளத்திற்குத் தற்சமயம் பசுமலை 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தின் மூலமாக மின் பகிர்மானம் செய்யப்பட்டு வருகிறது. வலையங்குளத்திற்கு அருகிலுள்ள அவியூரில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று ரூ. 963.32 இலட்சம் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துணை மின் நிலையம் இயக்கப்பட்டதும், வலையங்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் குறைந்த மின் அழுத்தம் வெகுவாக மேம்பாடடையும்.

**23—**

### கூடுதலாக மின் மாற்றி அமைத்தல்

வினா 21289—**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை துணை மின் நிலையத்தில் கூடுதலாக மின் மாற்றி அமைத்து மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உளுந்தூர்பேட்டை துணை மின் நிலையத்தில் கூடுதல் திறன் கொண்ட மின் மாற்றி அமைக்கும் பணி—ஒன்பதாவது (1997-2002) ஐந்தாண்டிற்கான பெருந் திட்டத்தில் 110 கே.வி. உளுந்தூர் பேட்டை துணை மின் நிலையத்தில் உள்ள 10 எம்.வி.ஏ. மின் மாற்றியை, கூடுதல் திறன்கொண்ட 16 எம்.வி.ஏ. மின் மாற்றியாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

**24—**

### நில வரியை ரத்துச் செய்தல்

வினா 15109—**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் மற்றும் தென்கரை பிர்க்காக்களில் விவசாயிகளிடம் நில வரி வசூல் செய்வதை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



1999 பிப்ரவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

6-4-1998ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த பருவ காலத்தில் பெய்த பெரு மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக இந்த ஆண்டுக்கான நில வரி தமிழ்நாடு முழுவதும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். இதன்படி அரசாணை (நிலை) எண் 459, வருவாய்த் துறை, நாள் 4-6-1998-ல் அந்த ஆண்டுக்கான (பசலி 1407) நில வரி ரூபாய் 43 கோடியே 33 இலட்சத்தை தமிழ்நாடு முழுவதற்கும் ரத்துச் செய்த பின்னர், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் மற்றும் தென்கரை உள்வட்டங்களில் உள்ள கிராமங்களில் நில வரி வசூல் எதுவும் செய்யப்படவில்லை.

**25—**

### தொடக்கப் பள்ளி மேற்கூரையைச் சீர் செய்தல்

வினா 14324—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திரவிய நகர் ஒன்றியத் தொடக்கப் பள்ளி மேற்கூரை கறையானால் சேதப்படுத்தப்பட்டு கீழே விழும் அபாய நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுது நீக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அரசு அறியும்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், திரவிய நகர் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் ரூ. 10,000 மதிப்பீட்டில் 10-7-1998-இல் பழுது நீக்கம் செய்யப்பட்டுவிட்டது.

[1999 பிப்ரவரி 23

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு ஊராட்சியிலுள்ள தாய்-சேய் நலவிடுதியில் செவிலியர் தங்குவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு ஊராட்சியிலுள்ள தாய்-சேய் நல விடுதியில் செவிலியர் தங்குவதில்லை. மேற்படி சுகாதார நிலையம் பழுதடைந்துள்ளதால் அருகில் உள்ள பகுதியில் தங்கிப் பணிபுரிந்து வருகிறார்கள்.

**30—**

## நெல் களம் அமைத்தல்

வினா 15865—**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், கஸ்பா முதலைக்குளம், முண்டுவேலம்பட்டி, கள்ளப்பட்டி, கொடிக்குளம், கொ. வடுகப்பட்டி, ஒத்தப்பட்டி, நடுவூர் ஆகிய ஊர்களில் நெல் களம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் (அரிசி) கீழ் 1996-97 ஆம் ஆண்டு, சிறந்த கிராமப் பஞ்சாயத்துக்களுக்குப் பரிசு வழங்கும் இனத்தின்கீழ், 140 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில், ஒவ்வொரு வட்டாரத்திலும் ரூ. 50,000/-க்கு மிகாத வண்ணம், ஒரு சமுதாய நெற்களம் அமைக்க முடிவு எடுக்கப்பட்டு, அதன்படி, நெற்களம் அமைக்கும் பணியினை வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்த அரசு



1999 பிப்ரவரி 23]

ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்கள், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின்கீழ் அமையப்பெற்றுள்ளன.

2. எனவே, மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டி தொகுதி ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் (அரிசி) கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் இடம் பெறாததால், நெற்களம் அமைக்கும் திட்டம் உசிலம்பட்டி தொகுதி கிராமங்களில் செயல்படுத்த தற்பொழுது வாய்ப்பு இல்லை.

3. மேலும், 1997-98, 1998-99 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் மத்திய அரசு, ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் (அரிசி) கீழ், சிறந்த கிராமப் பஞ்சாயத்துக்குப் பரிசு வழங்கும் இனத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே, நெற்களம் அமைக்க இத்திட்டத்தின்கீழ் வாய்ப்பு இல்லை.

**31—**

## விலை நிர்ணயம் செய்தல்

வினா 15872—**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல், கரும்பு, பருத்தி போன்ற பொருட்களுக்கு விவசாயிகளே விலையை நிர்ணயிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெல், கரும்பு, பருத்தி போன்ற பயிர்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price) மாநில அரசின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசு விலை நிர்ணயம் செய்கிறது. எனவே, விவசாயிகளே நெல், கரும்பு, பருத்தி போன்ற பொருட்களுக்கு விலை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் இல்லை.

[1999 பிப்ரவரி 23

32—

**செண்டுமல்லி உற்பத்தி**

வினா 21335—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் செண்டுமல்லி உற்பத்தியை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அதற்கு உண்டான செடி (நாற்று) மானிய விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 1998-99ஆம் ஆண்டில் மல்லிகைப்பூ, ரோஜா, கனகாம்பரம், சாமந்தி, செண்டுமல்லி ஆகியவற்றின் பரப்பளவை அதிகரிக்கும்பொருட்டு, மாநில மற்றும் மைய அரசுத் திட்டங்களின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து புதியதாக சாகுபடிக்குக் கொண்டுவரப்பட உள்ளன. செடிகள் மற்றும் விதைகள், 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்படவுள்ளன. மைய அரசு திட்டத்தின் மூலம் செடிகள், உரங்கள், பூச்சி மருந்துகள் 0.1 எக்டேர் அளவிற்கு ரூ. 6000 பெறுமான இடுபொருட்களுக்கு நிதியுதவி அளித்து செயல் விளக்கப் பாத்திகள் அமைப்பதின் மூலம் பரப்பு விரிவாக்கம் செய்யப்படுகிறது. செண்டுமல்லியினை அதிக அளவில் உற்பத்தி செய்து ஆந்தோசைனின் என்ற "ஆரஞ்சு நிறமிகள்" உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்திட தனியார் முதலீட்டாளர்கள் ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்குத் தோட்டக்கலைப் பணியாளர்களின் உதவியுடன், விதைகள் விநியோகம் செய்து, பூக்கள் கொள்முதல் செய்கின்றனர். இதனால் செண்டுமல்லி பரப்பு சுமார் 1000 எக்டேர் அளவில் அதிகரித்துள்ளது.

33—

**ரெகுலேட்டர் அமைத்தல்**

வினா 3289—**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 23]

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், விளாங்காடு ஊராட்சியில் மின் இறவைப் பாசனத்திற்கு ஓவரூர் வடிகால் வாய்க்காலில் ரெகுலேட்டர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இல்லை.

34—

**சிமெண்ட் ஸ்லாப் அமைத்தல்**

வினா 13875—**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, வெறையூர் அருகே உள்ள குறிஞ்சலாற்றின் குறுக்கே இருக்கும் காடகமான் அணைக்கட்டுக் கால்வாய்க்கு சிமெண்ட் ஸ்லாப் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காடகமான் அணைக்கட்டுக் கால்வாய் கடந்த வருடம் வெள்ள நிவாரணத்தின்கீழ் சரிசெய்யப்பட்டு கால்வாயில் தண்ணீர் நன்றாகச் செல்கிறது. எனவே, கால்வாயில் சிமெண்ட் ஸ்லாப் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

35—

**விவசாயிகளின் நிலத்தை ஆயக்கட்டில் சேர்த்தல்**

வினா 16869—**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சங்கம்பட்டி விவசாயிகளின் 250 ஏக்கர் நிலத்தை ஆயக்கட்டில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 பிப்ரவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**36—**

**வாய்க்கால் தூரெடுத்தல்**

வினா 17231—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தெக்கூர் கிராமத்தில் உள்ள நாட்டு வடிகால் வாயக்காலைத் தூர் எடுத்து அகலப்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தெக்கூர் கிராமத்திலுள்ள நாட்டு வடிகால் தூர் வாரும் பணி, வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் 9.10 கி.மீட்டர் நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

**37—**

**நசுவினி காட்டாற்றைச் செப்பனிடல்**

வினா 19578—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சங்கரனார்குடிகாடு ஊராட்சியில் உள்ள நசுவினி காட்டாற்றைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

சங்கரனார்குடிகாடு ஊராட்சியில் உள்ள நசுவினியாற்றின் மேல்புறம் உள்ள காட்டாற்றில் தூர் வாரும் பணி இந்த வருடம் (1998-99) இயந்திரங்களின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.



1999 பிப்ரவரி 23]

**38—**

**வாய்க்காலை ஆழப்படுத்திச் செப்பனிடுதல்**

வினா 19579—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், காட்டுக்குறிச்சி ஊராட்சியிலுள்ள கல்லணைக் காய்வாயில் இருந்து பிரியும் 6 ஆம் எண் வாய்க்காலை விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் ஆழப்படுத்திச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், காட்டுக்குறிச்சி கிராமத்தில் உள்ள கல்லணைக் கால்வாயின் 6 ஆம் எண் பிரிவு வாய்க்கால் 3250 மீட்டர் நீளமுள்ளது. இவ்வாண்டு (1998-99) வாய்க்கால்கள் முழுவதும் ரூ. 26,000 செலவில் தூர் வாரும் பணி செய்து முடிக்கப்பட்டு உள்ளது. மதகுகள் மற்றும் கட்டுமானங்கள் பழுது பார்க்கும் பணிகள் ரூ. 91,000 செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**39—**

**பூங்கா அமைத்தல்**

வினா 19587—**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகூர் கடற்கரையில் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

நாகூர் கடற்கரையில் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[1999 பிப்ரவரி 23

40—

### இ. காட்டூர் வரை பேருந்தை இயக்குதல்

வினா 12536—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, சித்தர்கோயில் வரை வரும் பேருந்துகளை அதன் அருகிலுள்ள இ. காட்டூர்வரை நீட்டித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்தும், சங்ககிரியிலிருந்தும் சித்தர்கோயில் வரை இயக்கப்படும் பேருந்துகளை, தட நீட்டிப்பு செய்து இ. காட்டூர் வரை இயக்கினால் அதன் தட நீளம் முறையே 34 கி.மீட்டர், 32 கி.மீட்டர் வருகிறது. மேலும், தட நீட்டிப்பு கேட்கப்பட்ட சித்தர்கோயில், கொசவம்பட்டி, இ. காட்டூர் தடப் பகுதியை உள்ளடக்கிய சேலம் வின்னம்பட்டி வழித் தடத்தில் இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 18 நடைகள் இயக்கப்பட்டு பயணிகளின் தேவை நிறைவு செய்யப்பட்டு வருகிறது.

மோட்டார் வாகன விதிப்படி, ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும் இத்தடப் பகுதியில் 30 கி.மீட்டருக்கு மேல் நகரப் பேருந்து இயக்க அனுமதியில்லை.

எனவே, மேற்கண்ட காரணங்களால், கோரிக்கையில் கேட்கப்பட்ட வழித் தடத்தில் பேருந்தினை நீட்டித்து இயக்குவது சாத்தியமில்லை.

41—

### பேருந்து இயக்குதல்

வினா 12630—**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கு அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?



1999 பிப்ரவரி 23]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேராவூரணி-மதுரை தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-4)-ன் மூலம் ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. பேராவூரணி-அறந்தாங்கி, அறந்தாங்கி-காரைக்குடி, காரைக்குடி-மதுரை என பகுதிப் பகுதியாகப் புறநகர் பேருந்து வசதி உள்ளது. பேராவூரணி-திருச்சி தடத்தில் பெருமகளூர்-திருச்சி (வழி) பேராவூரணி, புதுக்கோட்டைக்கு ஒரு பேருந்து ஆகஸ்ட் 1997 முதல் இயக்கப்படுகிறது. மேலும், பேராவூரணி-புதுக்கோட்டை, புதுக்கோட்டை-திருச்சி என பகுதிபகுதியாகப் புறநகர்ப் பேருந்து வசதி உள்ளது. எனவே, கூடுதலாகப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

42—

### போக்குவரத்துக் கழகப் பணிமனை ஏற்படுத்துதல்

வினா 15542—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் பணிமனை ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

### அரசுப் பேருந்து இயக்குதல்

வினா 17193—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 23

நாமக்கல் முதல் சங்ககிரி, கொங்கணாபுரம், கோரணம்பட்டி, புதுப்பாளையம், சமுத்திரம் வழியாக மேட்டூர் செல்ல ஓர் அரசுப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் கேட்கப்பட்டுள்ள வழித்தடம் கிராமப்புறங்களின் வழியாகச் செல்லும் வழித்தடமாதலால், நேர் வழிப் பயணிகள் இதனைத் தேர்தெடுக்கவில்லை. அதாவது, நாமக்கல்லிலிருந்து மேட்டூர் செல்லும் பயணிகள் இதில் பயணம் செய்வதில்லை. குறுந்தொலைவுப் பயணிகளும் எதிர்பார்த்த அளவு இல்லை. ஏனெனில், இவ்வழித்தட அனைத்துப் பகுதிகளும் கீழ்க்கண்டவாறு போதுமான அளவு பேருந்து வசதி பெற்றிருக்கின்றன.

நாமக்கல்-திருச்செங்கோடு-சங்ககிரி தடத்தில் ஒவ்வொரு 3 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதமும், சங்ககிரி-கொங்கணாபுரம் தடத்தில் ஒவ்வொரு 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதமும் பேருந்து வசதியுள்ளது. தவிரவும், எடப்பாடி-ஜலகண்டாபுரம் (வழி) கொங்கணாபுரம், கோரணம்பட்டி, புதுப்பாளையம், சமுத்திரம் தடத்தில் 2 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 10 நடைகள் பேருந்து வசதியும், மேட்டூர்-ப.வேலூர் செல்லும் 4 பேருந்துகள் மூலம் கொங்கணாபுரத்திற்கு தினசரி 8 நடைகள் பேருந்து வசதியும் உள்ளன.

எனவே, வினாவில் கேட்கப்பட்டுள்ள இவ்வழித் தடத்தில் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**44—**

## அரசுப் பேருந்தை நீட்டித்தல்

வினா 17198—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், எருமபாளையம் டிப்போவிலிருந்து 30 சி வெள்ளையம்பாளையம் வரை வரும் அரசுப் பேருந்தை கொங்கணாபுரம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**



1999 பிப்ரவரி 23]

தடம் எண் 30சி கீழ்க்கண்ட கால நேரங்களில் கொங்கணாபுரம் வரை நீட்டித்து 26-4-1998 முதல் இயக்கப்பட்டு வருகிறது:

சேலம் கொங்கணாபுரம் (வழி) மகுடஞ்சாவடி வெள்ளையம்பாளையம்

| சேர். | புறப்படும். | சேர். | புறப்படும். |
|---|---|---|---|
| .. | 06.36 | 07.55 | .. |
| 09.28 | .. | .. | 08.05 |
| .. | 17.53 | 19.08 | .. |
| 20.28 | .. | .. | 19.10 |

**45—**

## புதிய பேருந்து இயக்குதல்

வினா 20235—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலத்திலிருந்து போளூர் வழியில் சர்க்கார் நாட்டாமங்கலம் குருமாபுரம் வழியாக ஆத்தூர் செல்ல புதிய பேருந்து இயக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதிய பேருந்து இயக்க கோரியுள்ள வழித்தட தூரம் 30.0 கி.மீ.-க்கு அதிகமாக இருப்பதால் புறநகர் பேருந்து வழித் தடமாகக் கருதப்படும். ஏற்கெனவே, சேலத்திலிருந்து ஆத்தூருக்கு நேர்வழியில் அயோத்தியாப்பட்டினம், கருமாபுரம், பிரிவு ரோடு, வாழப்பாடி, புத்திரகவுண்டம்பாளையம், பெத்தநாயக்கன்பாளையம் வழியாக புறநகர் பேருந்துகள் போதிய அளவு இயக்கப்பட்டு வருகின்றன. இயக்க தூரம் 58 கி.மீ.

கேட்கப்பட்டுள்ள ஊர்கள் வழியாக சுற்று வழித் தடத்தில் புறநகர் பேருந்து இயக்கினால் சேலத்திலிருந்து ஆத்தூர் செல்லும் நேரடிப் பேருந்து பயணிகளிடம் பயணக் கட்டணம் அதிகம் வசூலிக்க நேரிடும். மேலும் பயண தூரமும், பயண நேரமும் கூடுதலாகும். இதனால் சேலத்தில் இருந்து ஆத்தூர் செல்லும் நேரடிப் பயணிகளுக்குச் சிரமங்கள்

[1999 பிப்ரவரி 23

ஏற்படும். கருமாபுரம், சர்க்கார் நாட்டாமங்கலம், போளூர் போன்ற ஊர்களுக்குப் போதிய நகரப் பேருந்து வசதி உள்ளதால் அவற்றின் மூலம் வந்தடைந்து, நேர்வழித்தடத்தில் செல்லும் பேருந்துகள் வழியாக சேலம் மற்றும் ஆத்தூர் செல்லலாம். எனவே, தற்போது மேற்கூறிய வழித்தடத்தில் புறநகர் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

46—

### தரைப் பாலம் அமைத்தல்

வினா 15915—**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடம்பத்தூர் ஒன்றியம், மணவாளநகர் முதல் திருவள்ளூர் ரயிலடி வரை மற்றும் ஏகாட்டூர் முதல் அதிகத்தூர் வரை தரைப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடம்பத்தூர், மணவாளநகர் முதல் திருவள்ளூர் ரயிலடி வரை தரைப்பாலம் அமைக்கும் பணி அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை அண்மைக்காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும், ஏகாட்டூர் அதிகத்தூர் சாலை, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்தின் வாயிலாக இத்திட்டத்தை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

### சாலையைப் புதுப்பித்தல்

வினா 16851—**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஓலக்கூர் ஒன்றியத்தில் உள்ள தானங்குப்பம் - ஓங்கூர் சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?



1999 பிப்ரவரி 23]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது புதுப்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொருளில் கண்டுள்ள சாலை கடந்த ஆண்டின் பெரும் மழையினால் பாதிக்கப்பட்டு, அது தற்பொழுது போக்குவரத்திற்கு ஏற்றவாறு சரி செய்யப்பட்டுள்ளது. நிரந்தரமாக மேம்பாடு செய்ய ரூ. 45 இலட்சம் தேவைப்படுவதால் நிதிப் பற்றாக்குறை காரணமாக தற்பொழுது மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

### திருமண மண்டபம் அமைத்தல்

வினா 11393—**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கண்டியூர் அருள்மிகு பிரம்மசிர கண்டீஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

49—

### அறங்காவலர்கள் நியமனம்

வினா 18859—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 23

(அ) தமிழக திருக்கோயில்களில் கோயில் வளர்ச்சியிலும், ஆன்மீகத்திலும் அக்கறையுள்ள முக்கியஸ்தர்களை அறங்காவலர்களாக நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு திருக்கோயில்களுக்கு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் (திருத்திய சட்டம் 39-96) விதிகளின்படி, 47,48 மற்றும் 49 சட்டப்பிரிவுகளின்படி, இந்து சமயத்தைச் சார்ந்தவர்களும், சட்டப்பிரிவு 26(1)-ல் வரையறை செய்யப்பட்ட விதிகளின்படி தகவின்மை இல்லாத நபர்களும், திருக்கோயில் வளர்ச்சியிலும் ஆன்மீகத்திலும் அக்கறையுள்ளவர்களாகக் கருதப்படுகிறவர்களும் அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

**50—**

## பெண் அறங்காவலர்கள் நியமனம்

வினா 19653—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கோயில் அறங்காவலர் குழுக்களில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்காவது பெண்கள், உடல் ஊனமுற்றோர்களை நியமிக்கலாம் என்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் அறங்காவலர்கள் நியமனம் 1959ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம், பிரிவு 26(1)-ல் கூறப்பட்ட தகுதிகளின் அடிப்படையிலும், சட்டப்பிரிவுகள் 47, 48, 49-ன்படியும் செய்யப்படுகிறது. இதனடிப்படையில் பெண்களும், உடல் ஊனமுற்றோர்களும் தகவின்மை இல்லாதவர்களாக இருப்பார்களேயானால் அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.



1999 பிப்ரவரி 23]

**51—**

## கோவில் விவசாய நிலங்கள்

வினா 19661—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள கோயில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களிலிருந்து எவ்வளவு ரூபாய் குத்தகையாகக் கிடைக்கப்பெற்றது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் (1-7-1997 முதல் 30-6-1998 வரை) தமிழகத்திலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நன்செய், புன்செய் விவசாய நிலங்களிலிருந்து முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவையில் ரூ.492.16 இலட்சமும், 1997-98-க்கான குத்தகைத் தொகையில் ரூ.526.78 இலட்சமும், ஆக ரூ.1018.94 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**52—**

## அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம்

வினா 20414—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், குளிச்சம்பட்டு ஊராட்சி, குளிச்சம்பட்டு கிராமத்திலுள்ள அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், குளிச்சம்பட்டு ஊராட்சியிலுள்ள குளிச்சம்பட்டு கிராம நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடப்பு ஆண்டில் செயல் திட்டம் ஏதுமில்லை.

**53—**

**நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம்**

வினா 20420—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம், ஒன்றியம், மானத்தான் ஊராட்சியிலுள்ள கங்காணிப்பட்டி, தாரமங்கலம் ஒன்றியம் அமரனத்தி, ராமிரெட்டிப்பட்டி, ஆரூர்பட்டி ஊராட்சியிலுள்ள கணக்குப்பட்டி ஆகிய நியாய விலைக் கடைகளுக்குப் புதிதாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நடைபெறுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கங்காணிப்பட்டி, அமரனத்தி, ராமிரெட்டிப்பட்டி, ஆரூர்பட்டி ஊராட்சியிலுள்ள கணக்குப்பட்டி ஆகிய நியாயவிலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க மேற்படி நியாய விலைக் கடைகளை நடத்தும் மானத்தான் மற்றும் தாரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நட்டத்தில் இயங்கி வருவதால், சொந்த நிதியில் கட்டடம் கட்ட இயலாது. மேலும், 'நமக்கு நாமே திட்டத்தில்' கட்டிக் கொள்ளவும், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கினைச் செலுத்த வங்கியில் போதிய நிதி வசதி இல்லாததால், மேற்கண்ட கடைகளுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க இயலாத சூழ்நிலை உள்ளது.



(ஆ) வினா எழவில்லை.

**54—**

**பொது விநியோக முறையைச் சீராக்குதல்**

வினா 20435—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நியாய விலைக் கடைகளில் பொது விநியோகம் சீராக நடைபெற 'பொதுமக்கள் கண்காணிப்பு குழு' அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நியாய விலைக் கடையளவில் இயங்கி வந்த கண்காணிப்பு குழுவைக் கலைத்துவிட்டு பொது விநியோக முறை செயல்பாட்டினைக் கண்காணிக்க மாவட்ட அளவிலும், வருவாய்க் கோட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். நியாய விலைக் கடை அளவில் கண்காணிப்புக் குழு ஏற்படுத்த தற்போது அரசிடம் செயற்குறிப்புகள் இல்லை.

**55—**

**நியாய விலைக் கடைகளைக் கணினி மயமாக்குதல்**

வினா 20440—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எத்தனை நியாய விலைக் கடைகளில் கணினிமயமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகளில் கணினிமயமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நியாய விலைக் கடைகளைக் கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் சோதனை அடிப்படையில் சென்னையில் 4 நியாய விலைக் கடைகளில் கணினியில் பதிவு செய்து சோதனை செய்யப்பட்டது. அதனடிப்படையில் தற்போது சென்னையிலுள்ள 1,200 கடைகளையும், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி வட்டத்திலுள்ள நியாய விலைக் கடைகளையும் கணினியில் பதிவு செய்து முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தலாம் என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது

(ஆ) தற்போது இல்லை.

**56—**

**அமுதம் அங்காடிகளுக்குச் கட்டடம்**

வினா 20481—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சங்கரனார் குடிகாடு கிராமம், தஞ்சாவூர் வட்டம், மாப்பிள்ளைநாயக்கன்பட்டி கிராமம் ஆகிய இடங்களில் உள்ள அமுதம் அங்காடிகளுக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சங்கரனார் குடிகாடு கிராமம் மற்றும் தஞ்சாவூர் வட்டம், மாப்பிள்ளை நாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு நடப்பு ஆண்டில் கட்டடம் கட்டச் செயல்திட்டம் ஏதுமில்லை.





**57—**

**முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுதல்**

வினா 20570—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் முழுநேர நியாய விலைக் கடைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) அரசு விதிகளின்படி ஒரு முழுநேர நியாய விலைக் கடை தொடங்க வேண்டுமெனில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், பெண்ணாகரம் தொகுதியில் தற்போது இயங்கி வரும் 18 பகுதிநேர நியாய விலைக் கடைகளில் 500 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாகவே உள்ளன. எனவே, மேற்கண்ட 18 பகுதிநேர நியாய விலைக் கடைகளை முழுநேர நியாய விலைக் கடைகளாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**58—**

**புதிய நியாய விலைக் கடை அமைத்தல்**

வினா 20578—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாலவாடியிலிருந்து, நியாய விலைக் கடையைப் பிரித்து காணப்பட்டிக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



22063

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாலவாடியிலிருந்து நியாய விலைக் கடையைப் பிரித்து காணப்பட்டியில் புதிய பகுதிநேரக் கடை 14-4-1998 தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**59—**

## பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்குதல்

வினா 20721—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க குறைந்தபட்சம் எத்தனை குடும்ப அட்டைகள் இருக்கவேண்டுமென்ற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம். இந்த நிபந்தனைகள் பூர்த்தியாகாத பட்சத்தில் அரசின் முன் அனுமதி பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பகுதிநேரக் கடைகளைத் திறக்கலாம்.

1. இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் குறைந்தது 2 கிலோமீட்டர் இருக்க வேண்டும்.

2. பகுதிநேர அங்காடி அமைவதற்கு வாடகை இல்லாமல் இலவசமாக கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும்.





3. தாய் அங்காடி விற்பனையாளரே பகுதிநேர நியாய விலைக் கடையையும் வாரத்தில் குறைந்தது மூன்று நாட்களாவது கவனித்துக் கொள்ள வேண்டும்.

4. பகுதிநேரக் கடைகளுக்கு அரசு மானியம் எதுவும் வழங்காது.

5. பகுதிநேரக் கடையில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளாவது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. பகுதிநேர நியாய விலைக் கடையை நடத்தும் கூட்டுறவுச் சங்கம் எந்தவிதமான செலவினத்தையும் பகுதிநேர நியாய விலைக் கடை நடத்துவதற்காக கோரக்கூடாது.

**60—**

## கிராம அங்காடிகளுக்குச் சொந்தக் கட்டடம்

வினா 20784—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, சங்கரனார் குடிகாடு கிராம அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, சங்கரனார் குடிகாடு கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு நடப்பு ஆண்டில் கட்டடம் கட்ட செயல் திட்டம் ஏதுமில்லை.

**61—**

## அமுதம் அங்காடிக்குப் புதிய கட்டடம்

வினா 20785—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 23

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, வெங்கரை சந்தைப் பேட்டையில் உள்ள அமுதம் அங்காடிக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வெங்கரை சந்தைப் பேட்டை கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு நடப்பு ஆண்டில் புதிய கட்டடம் கட்ட செயல் திட்டம் ஏதுமில்லை.

**62—**

**பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா 16213—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலும், எடப்பாடி தொகுதியிலும், கொங்கணாபுரம் ஒன்றியம் மற்றும் சங்ககிரி வட்டத்திலும் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் புதிய வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**63—**

**தீயினால் சேதம் அடைந்த வீடுகளுக்கு நிவாரணம்**

வினா 18650—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் மட்டும் 1998 ஆம் வருடம் மே மாதம் முடிய எவ்வளவு குடிசை வீடுகள் தீயினால் சேதமடைந்தன?



1999 பிப்ரவரி 23]

(ஆ) தீயினால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளருக்கு அரசு என்னென்ன நிவாரணம் வழங்கியது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகரில் மட்டும் 1998 ஆம் வருடம் மே மாதம் வரை ஆறு குடிசைப் பகுதிகளில் வெவ்வேறு காலக் கட்டங்களில் தீ விபத்து ஏற்பட்டு 4,493 குடிசைகள் தீயினால் சேதமடைந்தன.

(ஆ) சென்னை மாநகரில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 4,493 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ரூ. 5,500 செலவில் தீப்பிடிக்காத கல்நார் தகடுகூரை (ஆஸ்பெஸ்டாஸ்) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக அரசு ரூ. 247.115 இலட்சத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கியுள்ளது. மேற்கூரை வேயும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், 4,493 குடும்பங்களுக்கும், குடும்பம் ஒன்றுக்கு ரூ. 6,000 வீதம் வீட்டுச்சுவர்கள் அல்லது தக்கைக்கல் (Hollow Blocks) கொண்டு சுவர்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 269.58 இலட்சத்தையும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அரசு வழங்கியுள்ளது. இது தவிர குடும்பம் ஒன்றிற்கு 5 கிலோ அரிசியும், ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்கு புடவையும் மற்றும் பண உதவியும் தீ விபத்து நடந்த அன்று அரசினால் வழங்கப்பட்டது.

**64—**

**தமிழகத்தில் சிறார் தொழிலாளர்களின் விவரம்**

வினா 19731—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறார் தொழிலாளர்கள் அதிகம் உள்ள மாவட்டம் எது?

(ஆ) சிறார் தொழிலாளர்கள் இளமைக் காலத்தில் படிப்பதற்கு அரசு செய்து வரும் திட்டம் என்ன?

[1999 பிப்ரவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) உச்ச நீதிமன்ற உத்தரவின்படி குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி தொழிற்சாலை ரீதியாக ஏப்ரல் 1997-ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி குழந்தைத் தொழிலாளர் அதிகம் உள்ள மாவட்டம் சேலம் ஆகும். இதில் அபாயகரமான தொழில்களில் 1,503 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழில்களில் 1,881 குழந்தைகளும் இருந்ததாக கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) சிறார் தொழிலாளர்கள் இளமைக் காலத்தில் படிப்பதற்கு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், விருதுநகர், தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், தர்மபுரி ஆகிய எட்டு மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. அம்மாவட்டங்களில் 362 பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு 16,600 குழந்தைகள் கல்வி கற்று வருகின்றனர். இந்தத் திட்டததின்கீழ் குழந்தைத் தொழிலாளர்களுக்குக் கல்வி கற்பதற்கு வேண்டிய அனைத்து புத்தகங்கள், நோட்டுகள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுவதுடன், மதிய உணவும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழந்தைத் தொழிலாளியின் பெற்றோருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 நிதி உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத் தொகை முழுமையாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மேலும் 1996-ல் உச்ச நீதிமன்ற உத்தரவின்படி கணக்கெடுப்பில் காணப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளரின்கீழ் குழந்தைத் தொழிலாளர்கள் மறு சீரமைப்பு மற்றும் நல சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்குக் கல்வி, நலம் மற்றும் மறுவாழ்வு காண செயல் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. அபாயகரமான தொழில்களில் உள்ள குழந்தைகளை தொழிற்சாலைகளிலிருந்து அறவே நீக்கியும், கல்வி அளிக்கவும் அபாயகரமற்ற தொழில்களில் உள்ள சிறார் தொழிலாளர்களுக்குப் பகுதிநேரக் கல்வி அளிக்கவும் திட்டம் தீட்டப்பட்டு அமல் செய்யப்பட்டு வருகிறது.



1999 பிப்ரவரி 23]

**65—**

**மாணவிகள் விடுதிக்குச் சொந்தக் கட்டடம்**

வினா 20493—**திரு. மா. இராமச்சந்திரன்**: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, கிளாமங்கலம் உயர்நிலைப் பள்ளி மாணவிகள் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, கிளாமங்கலம் அரசு மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**66—**

**மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் தங்கும் விடுதி**

வினா 20589—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, சமுத்திரத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் தங்கும் விடுதி ஒன்று தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, சமுத்திரத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[1999 பிப்ரவரி 23

67—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

வினா 20665—**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்திற்குட்பட்ட உவரியில் பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் விடுதி வாடகைக் கட்டடத்தில் செயல்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் உவரியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி இயங்கவில்லை. இருப்பினும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) அவ்விடுதிக்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தொடங்குதல்**

வினா 20666—**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, நல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 பிப்ரவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வந்தவாசி தொகுதி, நல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

69—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

வினா 20670—**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம், பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் இயங்கவில்லை. மாணவியர் விடுதிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. எனினும், மாணவியர் விடுதிகட்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

70—

**மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை**

வினா 20677—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998 ஆம் நிதியாண்டில் அரசுக் கல்லூரியில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக எவ்வளவு உதவித் தொகை வழங்கப்படுகிறது?

(ஆ) அதனால் பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

[1999 பிப்ரவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1998 ஆம் நிதியாண்டில் அரசுக் கல்லூரிகள் மட்டுமல்லாது மேல்நிலைப் பள்ளிகள், தொழில் கல்வி கற்பிக்கும் கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்துக் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பப் பட்டயப் படிப்பு பயிலகங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக கல்வி உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வி உதவித் தொகைகள் வழங்க ரூ. 13,59,86,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

(ஆ) அதனால் 3,29,700 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியர் பயன்பெறுவர்.

**71—**

**மாணவர் விடுதி அமைத்தல்**

வினா 20679—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, சித்தூர், கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஆகிய இடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம் ஆகிய இடங்களில் ஏற்கெனவே மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் இயங்கி வருகின்றன. சித்தூர் மற்றும் சமுத்திரம் ஆகிய இடங்களில் விடுதிகள் திறப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 பிப்ரவரி 23]

**72—**

**மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்தல்**

வினா 20863—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, செல்லமுடி அரசு உயர்நிலைப் பள்ளி, பண்டஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளி, நெருப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளி, ஏரியூர் உயர்நிலைப் பள்ளி, இண்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி, பெரும்பாலை அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றிற்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில், பெண்ணாகரம், பெரும்பாலையில் ஏற்கெனவே மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் இயங்கி வருகின்றன. பெண்ணாகரம் தொகுதி, செல்லமுடி அரசு உயர்நிலைப் பள்ளி, பண்டஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி, நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளி, ஏரியூர் அரசு உயர்நிலைப் பள்ளி, இண்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றிற்கு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**73—**

**கணினிப் பயிற்சி மையம் தொடங்குதல்**

வினா 20872—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் தமிழகத்தின் மையப் பகுதியில் நவீன கணினிப் பயிற்சி மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில், 1,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு 1997-98 ஆம் ஆண்டு முதல் (1) சென்னையிலுள்ள Madras Institute of Technology (அண்ணா பல்கலைக்கழகம்), (2) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், (3) காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை, (4) பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி, (5) பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய பல்கலைக்கழகங்கள் மூலம் கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி பெறும் மாணவ/மாணவியருக்கு பயிற்சிக் கட்டணமாக தலா ரூ. 4,500 மற்றும் உண்டி உறையுள் கட்டணமாக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 193 வீதம் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆனால், இத்துறை மூலம் கணினிப் பயற்சி மையம் எதுவும் நேரடியாக நடத்தப்படவில்லை. இதற்கான திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**74—**

### வனத் துறையின் வளர்ச்சிப் பணிகள்

வினா 14616—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில், ஜப்பான் நாட்டு நிதி உதவியோடு வனத்துறை செய்துள்ள வளர்ச்சிப் பணிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் 1997-98-ஆம் ஆண்டு மலை அடிவாரங்களில் உள்ள வடபுதுப்பட்டு, பாலூர், நாகல், செங்காநத்தம், கல்புதூர் ஆகிய ஐந்து கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 82.015 இலட்சம் செலவில் காடுவளர்ப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.





**75—**

### மிருகக்காட்சிச் சாலை ஏற்படுத்துதல்

வினா 17819—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் நகரில் பெரிய பூங்கா ஒன்று அமைத்து ஒரு மிருகக்காட்சிச் சாலை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

சேலத்தில் ஏற்கெனவே வனத் துறையினரால் குரும்பம்பட்டி என்ற இடத்தில் ஒரு சிறிய வன உயிரினப் பூங்கா மற்றும் மிருகக்காட்சிச் சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனை மத்திய மிருகக்காட்சிச் சாலை ஆணையர் அறிவுரைப்படி மேம்படுத்த செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆகையால், ஏற்கெனவே உள்ள உயிரியல் பூங்காவை மேம்படுத்தினாலே போதுமானதாகும். சேலம் நகரிலேயே பெரிய பூங்கா அமைத்து மிருகக்காட்சிச் சாலை ஏற்படுத்த போதுமான இடம் மற்றும் நிதிநிலைத் தேவை, பராமரிப்பிலுள்ள சிக்கல்கள், நடைமுறையிலுள்ள சட்டங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு சேலம் நகரில் பூங்கா மற்றும் மிருகக்காட்சிச் சாலை ஏற்படுத்தும் திட்டம் தற்போது இல்லை.

**76—**

### சந்தனக் கடத்தலில் பிடிபட்ட வாகனங்கள்

வினா 19707—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் சந்தனக் கடத்தலில் ஈடுபட்ட லாரிகள், கார்கள், மோட்டார் சைக்கிள்களில் பிடிபட்டவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டு பிடிபட்ட வாகனங்கள் விவரம்:—

[1999 பிப்ரவரி 23

| | | |
|---|---|---|
| லாரிகள் | .. .. .. | 5 |
| கார்கள் | .. .. .. | 5 |
| மோட்டார் சைக்கிள்கள் | .. | 4 |
| மொத்தம் | .. .. | **14** |

**77—**

**புதிய சாலை அமைத்தல்**

வினா 20857—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட அஜ்ஜிப்பட்டி காளேநாயக்கனூர் வரை வனத் துறையின் மூலம் புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூரர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) அஜ்ஜிப்பட்டியிலிருந்து காளேநாயக்கனூர் வரை சுமார் 6 கிலோமீட்டர் உள்ள பகுதியில் தோராயமாக 600 மக்கள் புஞ்சை நிலங்களில் மானாவாரி விவசாயம் செய்து வாழ்கிறார்கள். இதில் வரும் விளைபொருட்கள் மிகவும் சொற்பமே. அவர்கள் தேவைக்கு மட்டுமே பயன்படும் நிலையில், அதிக அளவிலான விவசாய விளைப் பொருட்களை விற்பனைக்கு வேண்டி எடுத்துச் செல்லும் பிரச்சினை இக்கிராமத்திற்கு இல்லை. இச்சூழ்நிலையில் வனப் பாதையை பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையாக மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**78—**

**கயிறு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணி**

வினா 13912—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 23]

(அ) தென்காசியில் கயிறு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணி தாமதப்பட்டு வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், தேவையான இடத்தை மத்திய அரசின் கதர் கிராமத் தொழில் ஆணையத்திற்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) தகுந்த இடத்தினைத் தேர்வுசெய்து, கயிறு ஆராய்ச்சி நிலையத்தை நிறுவிட கயிறு வாரியம் உரிய முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. இதன் பயனாக, ஆக்கப்பூர்வ பணிகள் விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, கதர் கிராமத் தொழில் ஆணையத்திற்குத் தேவையான நிலம் வழங்க தனியே நடவடிக்கை தேவையில்லை.

**79—**

**கூட்டுறவுப் பஞ்சு அரவை ஆலை தொடங்குதல்**

வினா 16561—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் ஒரு கூட்டுறவுப் பஞ்சு அரவை ஆலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

[1999 பிப்ரவரி 23

80—

**மீன்வலை தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்**

வினா 18879—**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள மீனவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு மீன்வலை தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள மீனவர்கள் பயன்பெறும் வகையில் மீன்வலை தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

81—

**தொழிற்பேட்டை அமைத்தல்**

வினா 20152—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதியான கொளத்தூர் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 பிப்ரவரி 23]

82—

**தொழில் தொடங்குவதற்கு மானியம்**

வினா 20152—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பின்தங்கிய பகுதியான பெண்ணாகரம் வட்டத்தில் தொழில் தொடங்குவதற்கு மானியத்துடன் கூடிய கடன், இலவச மின்சாரம், இடம், ஆகியவற்றை உடனடியாக வழங்கி ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

1. பின்தங்கிய பகுதியான பெண்ணாகரம் வட்டத்தில் அமைக்கப்படும் தொழில்களுக்கு 15% முதலீட்டு மானிய உதவி வழங்கப்படுகிறது.

2. 150 குதிரைத்திறன் மின் இணைப்புக்கு குறைவான தொழில் நிறுவனங்களுக்கு, மின் மானியம், முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 40, 30, 20 விழுக்காடு அளவில் வழங்கப்படுகிறது.

3. இத்துறை மூலம் செயல்பட்டுவரும், பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் பெற்று தொழில் தொடங்கும் நிறுவனத்திற்கு, அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மானியத்துடன் கூடிய கடன் அளிக்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

4. இலவச மின்சாரம், இலவச இடம் வழங்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

83—

**தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் வருவாய் விவரம்**

வினா 20441—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை தீப்பெட்டித் தொழிற்சாலைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இயங்குகின்றன?

(ஆ) இதனால் அரசுக்கு 1997-98 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 13 தீப்பெட்டி சிறு உற்பத்தியாளர் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 85 'டி' வகுப்பு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அங்கம் வகித்து வருகின்றன.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் 'டி' பிரிவு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் 1 யூனிட்டுக்கு (100 சிறிய பெட்டிகள்) 50 பைசா வீதம் மத்திய அரசுக்கு கலால் வரி செலுத்தி வருகின்றன.

தமிழக அரசு குடிசை தீப்பெட்டித் தொழிலுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959 பகுதி 'அ' அட்டவணை III வரிசை எண் 76-ன்படி 17-7-96 முதல் விற்பனை வரிவிலக்கு அளித்துள்ளதால் தமிழக அரசுக்குத் தற்போது வருவாய் ஏதும் இல்லை.

**84—**

### தலைவர்களின் உருவச் சிலை

வினா 1995—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகரத்தில் எந்தெந்தத் தலைவர்களுக்கு உருவச் சிலை வைக்க அரசு முடிவு செய்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

சென்னையில் புதிதாகத் தலைவர்களின் உருவச் சிலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.





**85—**

### கால்நடை மருத்துவ நிலையத்திற்குக் கட்டடம்

வினா 12595—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், சுரங்கலூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவ நிலையத்திற்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், ஓமலூர் கோட்டத்தில் அரங்கலூர் என்ற கிளை நிலையம்தான் உள்ளது. சுரங்கலூர் என்ற கிளை நிலையம் இல்லை. கால்நடை மருத்துவ நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட இலவச நிலம் மற்றும் ஊராட்சி ஒன்றிய நிதி தேவைப்படுவதால் தற்பொழுது கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**86—**

### திருப்பூர் கால்நடை மருத்துவமனை

வினா 12876—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பழைய பேருந்து நிலையத்திற்கு எதிரிலுள்ள கால்நடை மருத்துவமனை எத்தனை ஏக்கர் பரப்பளவில் உள்ளது?

(ஆ) அவை பயனற்றுக் கிடப்பதை அரசு அறியுமா?

(இ) அதை வேறு அரசுத் துறைப் பணிகளுக்குப் பயன்படுத்தும் நோக்கம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர், பழைய பேருந்து நிலையத்திற்கு எதிரிலுள்ள கால்நடை மருத்துவமனை 2.60 ஏக்கர் பரப்பளவில் உள்ளது.

(ஆ) 2.60 ஏக்கர் பரப்பளவில் கால்நடை மருத்துவமனை அலுவலகம், அறுவைக் கூடம், சிகிச்சைக் கூடம், கருவூட்டல் திடல், காளை நிலையம் மற்றும் திருப்பூர் கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும், கால்நடைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் கோழி நோய் ஆய்வு மற்றும் பயிற்சி நிலையம் 0.30 சென்ட் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவர் மற்றும் கால்நடைப் பராமரிப்பு உதவியாளர் குடியிருப்புகளும் உள்ளன. தற்போதுள்ள குடியிருப்புகளுக்கு அருகில் கால்நடை அலுவலர்களுக்கு (முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் மற்றும் கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்களுக்கு) குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன. உதவி இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிதாக நிரந்தரக் கட்டடம் கட்டப்படவுள்ளது. மீதமுள்ள இடம் சிகிச்சைக்கு வரும் கால்நடைகள் கட்டிவைக்கப் போதுமானதாக உள்ளது.

(இ) வேறு அரசுத் துறைப் பணிக்குப் பயன்படுத்துவதற்கு உபரியாக இடம் இல்லை.

87—

### கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்

வினா 14794—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, அக்கடைப்பட்டியில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் ஏற்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



88—

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா 17942—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், பாரக்கல்லூரை தலைமையிடமாக வைத்து கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

89—

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா 19863—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நடுவூர் கிராமத்தில், கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1999 பிப்ரவரி 23

**90—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

வினா 19963—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், வல்லம்புதூர் ஊராட்சி பிரிவு சாலையின் அருகிலுள்ள செம்பூண்டி கேட்டில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**91—**

**கால்நடை மருத்துவமனை கட்டுதல்**

வினா 20337—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வாண்டையார் இருப்பு ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சாத்தியக்கூறுகள் இல்லை.

**92—**

**கால்நடை மருந்தகம் அமைத்தல்**

வினா 20614—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 23]

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தாண்டவன்குளம், புதுப்பட்டினம், நாற்கால் மற்றும் சொடியம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதுப்பட்டினத்தை மையமாகக் கொண்டு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்பொழுது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**93—**

**இலவசச் சீருடைத் திட்டம்**

வினா 16173—**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியில் நடப்பாண்டில் இலவசச் சீருடைத் திட்டத்தின் மூலம் பயன் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதியில் நடப்பாண்டில் இலவசச் சீருடைத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றவர்கள் விவரம் வருமாறு:—

| மாணவர்கள் | மாணவிகள் |
|---|---|
| 11,373 | 10,973 |

**94—**

**இலவச வீட்டுமனைகள்**

வினா 19103—**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை கேட்டு விண்ணப்பித்தோர் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா அளிக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) குன்னூர் தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பித்தோர் .. 2,045

(ஆ) குன்னூர் தொகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. .. 1,275

**95—**

**ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல்**

வினா 21592—**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் பகுதி-2 திட்டத்தின்கீழ் புதியதாக ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விற்கு இடமில்லை. ஏனெனில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் புதிய ஊராட்சி





ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படுவதில்லை. பள்ளிக் கல்வித் துறையின் மூலம் பகுதி-2 திட்டத்தில் புதிய ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன.

**96—**

**அரசு சுற்றுலாப் பொருட்காட்சி விவரம்**

வினா 17709—**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-ல் சென்னையில் நடைபெற்ற அரசு சுற்றுலாப் பொருட்காட்சி மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) இதனை எத்தனை பார்வையாளர்கள் கண்டு களித்துள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) 1998-ல் சென்னையில் நடைபெற்ற அரசு சுற்றுலாப் பொருட்காட்சி மூலம் கிடைத்த வருமானம் ரூ.143.54 இலட்சம் ஆகும். இதில் செலவு ரூ. 103.25 இலட்சம் போக நிகர லாபம் ரூ. 40.31 இலட்சம் ஆகும்.

(ஆ) 1998-ல் சென்னையில் நடைபெற்ற அரசு சுற்றுலாப் பொருட்காட்சியினைக் கண்டு களித்தவர்கள் மொத்தம் 13,02,051 ஆகும்.

**97—**

**புனித நீராடும் இடத்தை விரிவுபடுத்துதல்**

வினா 19990—**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி ஒன்றியம், கொடையாச்சி பாலாற்றில் புனித நீராடும் இடத்தை விரிவுபடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

[1999 பிப்ரவரி 23

நாட்ராம்பள்ளி ஒன்றியம், கொடையாச்சி பாலாற்றில் புனித நீராடும் இடத்தை விரிவுபடுத்திடும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**98—**

**அகஸ்தியர் அருவியை சுற்றுலாத் தலமாக்குதல்**

வினா 20005—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் மலையில் அமைந்துள்ள அகஸ்தியர் அருவியை சிறந்த சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் மலையில் அமைந்துள்ள அகஸ்தியர் அருவியை சிறந்த சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை. இருப்பினும், மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பினைப் பெற்று, அடுத்த நிதியாண்டில் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கும், அகஸ்தியர் அருவியை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**99—**

**காதி கிராஃப்டை தொடர்ந்து நடத்துதல்**

வினா 17963—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் நீண்டகாலமாக இயங்கி வந்த காதி கிராஃப்ட், தற்போது மூடியிருப்பதால் தொடர்ந்து நடத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**



1999 பிப்ரவரி 23]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் உள்ள காதி கிராஃப்ட் 15-09-1994-ல் தொடங்கப்பட்டு இன்றுவரை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இடையில் எப்பொழுதும் இவ்வங்காடி மூடப்படவில்லை.

**100—**

**தனியாருக்குக் கடன் உதவி**

வினா 20020—**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மீன்வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் தனியாருக்கு அரசு கடன் நிதி உதவி அளிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மீன்வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் தனியாருக்கு நேரடியாக அரசு கடன் உதவி வழங்கும் திட்டம் ஏதுமில்லை. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் தனியார் மீன் பண்ணை அமைக்க விரும்பினால் முகமையின் மூலம் திட்ட அறிக்கை மட்டும் தயார் செய்து கொடுக்கப்படுகிறது. இதனைக் கொண்டு தனியார் தனது சொந்த முயற்சி மற்றும் செக்யூரிட்டியின் பேரில் வங்கி மூலம் கடன் பெற வாய்ப்புள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

*[1999 பிப்ரவரி 23*

## 2. தகவல் கோரல்

### (அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீகாரில் 22 தலித் மக்கள் மற்றும் சிறுபான்மை மக்கள் படுகொலை மற்றும் மத்திய அரசின் விலைவாசி உயர்வைக் கண்டித்து புதிய தமிழகத்தினுடைய சார்பாக எனது தலைமையில் கடந்த 16-2-1999 ஆம் நாள் ஆளுநர் மாளிகைக்கு ஒரு பேரணி செல்வதற்கு அனுமதி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தீர்மானத்தைத்தானே சொல்கிறீர்கள்? அந்தத் தீர்மானத்தை நான் மறுத்ததற்கு உண்டான காரணத்தைச் சொல்லிவிட்டு, மறுத்துவிட்டேன். அதை மறுத்ததனால் நீங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டுமானால் செய்யுங்கள். காவல் துறை உங்களுக்கு, அந்த ஊர்வலத்திற்கு அனுமதி கொடுக்கவில்லை, தடை போட்டு விட்டார்கள். அதனால் முதலமைச்சர்மீது உரிமைப் பிரச்சினை என்றீர்கள். காவல் துறை போட்ட உத்தரவிற்கு முதலமைச்சர் மேலே உரிமைப் பிரச்சினை கொடுக்க முடியாது. ஆகவே, உங்கள் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்கிறேன் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் அதை மீறி வெளிநடப்புச் செய்வதென்றால், உங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு வெளிநடப்புச் செய்யுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அது என்னவென்று சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதன் சாராம்சத்தைத்தான் சொல்லிவிட்டேனே, பிறகு புதியதாக என்ன சொல்லப் போகிறீர்கள்? நீங்கள் ஊர்வலம் போக வேண்டுமென்று சொன்னீர்கள், அதற்குத் தடை போட்டுவிட்டார்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பீகாரில் தலித் மக்கள் படுகொலை என்று சொல்லி ஓர் அரசையேகூட நீக்கியிருக்கிறார்கள். ஆளுநர் மாளிகையை நோக்கி ஒரு பேரணி 1000 பேர், 2000 பேர் போவதனால் என்ன சட்டம்-ஒழுங்கு கெட்டுவிடும்? அதற்கு ஏன் தடை போட வேண்டும்? மத்திய அரசின் விலைவாசி உயர்வைக் கண்டித்து எல்லாத் தரப்பிலும்....



*1999 பிப்ரவரி 23]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது விவாதப் பொருள் இல்லை. நீங்கள் கொடுத்தத் தீர்மானத்திற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். அதற்கு வேண்டுமானால் நீங்கள் எனக்கு எதிர்ப்பு தெரிவித்துவிட்டு, வெளிநடப்புச் செய்யலாம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சொல்லிவிடுகிறேன். தலித் மக்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை. இது விவாதப் பொருள் இல்லை. நீங்கள் அந்தப் பொருள் பற்றிப் பேசக்கூடாது. நீங்கள் கொடுத்தத் தீர்மானத்தை நான் மறுத்துவிட்டேன். பேரவைத் தலைவர் உத்தரவை எதிர்த்து நீங்கள் வெளிநடப்புச் செய்யலாம். நான்தான் இது விவாதப் பொருள் இல்லை என்று சொல்லிவிட்டேன். நீங்கள் ஆளுநர் மாளிகைக்கு ஊர்வலம் போக வேண்டுமென்றீர்கள். Commissioner of Police உங்களுக்குத் தடை உத்தரவு போட்டிருக்கிறார்கள். நீங்கள் போகக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் அதை வைத்து முதலமைச்சர்மீது உரிமைப் பிரச்சினை என்று எழுதிக் கொடுத்தீர்கள். அதற்கும் முதலமைச்சருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அது உரிமைப் பிரச்சினை ஆகாது, ஆகவே, அனுமதி மறுக்கிறேன் என்று சொல்லி மறுத்துவிட்டேன். அதற்கு மேலே நீங்கள் வெளிநடப்புச் செய்வதானால், என் உத்தரவை எதிர்த்து வெளிநடப்புச செய்யுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சரி. வெளிநடப்புச் செய்கிறேன். தலித் மக்கள், சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதை....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக உங்களிடத்திலே கொடுக்கப்படுகின்ற ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும் அல்லது வேறு எதுவாக இருந்தாலும் அதை நீங்கள் தள்ளுபடி செய்தால், அதற்குப் பிறகு அதை இந்த அவையிலே எழுப்பக்கூடாது என்பதுதான் நடைமுறை. ஆனால், எதற்காக நீங்கள் தள்ளுபடி செய்தீர்களோ, அதையெல்லாம் இந்த அவையிலே எழுப்பி பதிவு செய்து ஒரு பிரச்சினையாக்குவது முறை அல்ல. எனவே இதை அனுமதிக்கக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அந்த இடத்திற்கே போகவில்லை. டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் என்னை வந்து கேட்டீர்கள். அந்தத் தீர்மானம் முறையில்லை, நான் அதை அனுமதிக்கவில்லை என்று சொன்னேன். உங்கள் உத்தரவை எதிர்த்து

நான் வெளிநடப்புச் செய்கிறேன், அதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டீர்கள். நான் கொடுக்கிறேன் என்று சொன்னேன். இப்போது வெளிநடப்புச் செய்வதாக இருந்தால் தயவுசெய்து நீங்கள் வெளியே போங்கள், அவ்வளவுதான் பிரச்சினை. (குறுக்கீடு) நீங்கள் வெளிநடப்புச் செய்யுங்கள். (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம், நீங்களும் வெளிநடப்புச் செய்கிறீர்களா? திரு. பி.ஆர். சுந்தரம்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி வெளிநடப்புச் செய்தார்)

முற்பகல் *10-40*

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் சுமார் 100 ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் மூடப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் கிழங்கு அறுவடை செய்ய முடியாமல்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி நீங்கள் என்னுடைய அறையில் கேட்டீர்கள். அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன். பிறகு இப்பொழுது என்ன பிரச்சினை? (குறுக்கீடு) அவர் அதை அவையிலே தான் பேசினால்தான் record ஆகும் என்று நினைக்கிறார்; பேசிவிட்டார்; நான் சொல்லிவிட்டேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடரும். திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது நிலவுகிற அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளின்பால் மாநில அரசின் பார்வை என்ன, அணுகுமுறை என்ன என்பது பற்றிய விவரங்களை வெளியிட்டுள்ள இந்த ஆளுநர் உரைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.





### (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாநில அரசு, தமிழ்நாட்டில் நிலவுகிற சமூகப் பிரச்சினைகளில், பொருளாதாரப் பிரச்சினைகளில் எத்தகைய அணுகுமுறைகளை மேற்கொள்கிறது என்பதைப் பரிசீலிப்பதற்கு முன்னால், தற்போது தமிழ்நாட்டில் நிலவுகிற இந்தப் பிரச்சினைகள், தமிழ்நாட்டின் தனித்தன்மை வாய்ந்த பிரச்சினைகளா அல்லது இந்தியாவின் பொதுவான பிரச்சினைகளின் பிரதிபலிப்பா என்பதையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

இங்கே தமிழகத்தில் நடைபெறுகிற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எனக்கு முன்னால்கூடப் பேசினார்கள். பல்வேறு உறுப்பினர்கள் சமூக வாழ்வில் ஏற்பட்டிருக்கிற பல்வேறு பதட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தொழிலில் ஏற்பட்டிருக்கக்கூடிய பல்வேறு நசிவுகளைப் பற்றியெல்லாம், பல்வேறு உறுப்பினர்களும், அவரவர் நிலைக்குத் தக்கபடி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய ஆளுநர் உரையிலேகூட, 'பொருளாதாரத்தில் நிலவும் மந்த நிலையுடன், அதிகரித்து வருகின்ற அரசுச் செலவும் சேர்ந்து, மாநில அரசின் நிதி ஆதாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன' என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஏன் பொருளாதாரத்தில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது, அரசுச் செலவுகள் அதிகரிப்பதற்கு என்ன காரணம் என்கிற விவரங்களைப் பற்றி விரிவாக ஆளுநர் உரை குறிப்பிடவில்லை.

தொழில் துறை நசிந்திருக்கிறது, சமூகத்திலே ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது, இத்தகைய நிலைமைகள் எல்லாம் ஏற்படுவதற்கு எது மூலகாரணமாக இருந்திருக்கிறது என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். தமிழ்நாட்டிலே கைத்தறித் தொழில் நசிந்து கொண்டிருக்கிறது. கைத்தறியை நம்பி வாழ்கிற இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் தங்கள் பிழைப்பிலே மண் விழுந்துவிட்டதாகத் துடிக்கிறார்கள். அதேபோல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பஞ்சாலைத் தொழில்கள் அநேகமாக மூடப்படுகிற நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு சிறு தொழில்கள், குறுந்தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சமூக வாழ்விலே அமைதி இன்மையும், தொழில் துறையிலே நசிவும், ஒரு நெருக்கடியான சூழ்நிலையை இங்கே ஏற்படுத்தியிருக்கிறது என்றால் இது தமிழ்நாட்டில் மட்டும் ஏற்பட்டுள்ள பிரச்சினை அல்ல என்பதை இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை ஏன் வந்தது என்று

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன்.

எப்போதுமே குருட்டு அடி அடித்தால் ஜெயிக்க இயலாது. பிரச்சினையின் குறி எதுவோ அதைப் பார்த்து அடிக்க வேண்டும். கைத்தறி நசிகிறது, பஞ்சாலை நசிகிறது, தொழில்கள் நசிந்து கொண்டிருக்கின்றன என்றால், இந்தத் தொழில்களை நசிக்க வைக்கிற சக்தி எது என்பதை அடையாளம் கண்டால்தான் அதை எதிர்த்து நாம் போராட முடியும். இந்த நெருக்கடிகள் தோன்றியமைக்கு மிக முக்கிய காரணம், 1991 ஆம் ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கைதான். இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கைதான் இன்றைக்கும் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடிகளைப் பெற்றெடுத்த தீய தாய் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இத்தகைய நிலைமைகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்த அந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை ஏன் இத்தகைய நிலையை ஏற்படுத்துகிறது என்பதையும் நான் வெறும் விவேகமற்றுச் சொல்லவில்லை; வேக நிலையில் இருந்து சொல்லவில்லை. அறிவுப்பூர்வமாக அறிஞர்கள், பொருளாதார மேதைகள் அறிவுப்பூர்வமாக ஆதாரபூர்வமாக நிரூபித்துக் காட்டியிருக்கிற பல்வேறு விவரங்களை என்னால் இங்கே பட்டியலிட்டுச் சொல்ல முடியும். ஆனால், அதற்குரிய கால வாய்ப்பு இல்லை என்பதால் நான் ஒரு சில விஷயங்களை மட்டுமே குறிப்பிட விரும்புகிறேன்.

புதிய பொருளாதாரக் கொள்கை என்று சொல்கிறபோது, இந்தியாவில் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு வந்தது 1991 ஆம் ஆண்டு. இதைக் கொண்டு வந்தவர்கள் யார் என்றால், உலக வங்கியும், I.M.F.-ம்தான். இவை இரண்டும்தான் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டுவர வேண்டும் என்று நிர்பந்தித்தன. இந்தியாவிற்குக் கடன் கொடுத்த World Bank I.M.F. இரண்டும் தாங்கள் கடன் கொடுக்க வேண்டுமானால் பொருளாதாரத் துறையில் என்னென்ன கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நிர்பந்தித்து நிபந்தனைகளையிட்டன. அதை அன்றைய மத்திய அரசு ஏற்றுக்கொண்டது. அதன் காரணமாகத்தான், இப்போது பல நெருக்கடிகள் வருகின்றன. அப்படியொரு நிலைமையை நிர்பந்தத்தை ஏன் அந்த உலக வங்கியும், I.M.F.-பும் ஏற்படுத்துகின்றன என்றால், உலகத்தில் வளர்ச்சியடைந்த 10 நாடுகளின் கைகளிலேதான் உலக வங்கியிலேயும் சரி, I.M.F.-பிலேயும் சரி, 85 சதமானப் பங்குக இருக்கின்றன. 85 சதமானப் பங்குகளின் ஆதிக்கத்தைப் பெற்றிருக்கி



உலகின் வளர்ந்த 10 நாடுகள், உலகத்தின் பிற பல பகுதிகளின் சந்தைகளைத் தங்கள் பொருளாதார எல்லைக்குள் கொண்டு வருவதற்காக, தம்முடைய விற்பனைப் பொருள்களையெல்லாம் அந்தந்த நாடுகளில் விற்றுக்கொள்கிற புதிய காலனிகளாக உருவாக்குவதற்காகத்தான், கடன் என்பதை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி, கடன் கொடுப்பதன் மூலம் கடன் பொறியிலே சிக்க வைத்து, அவர்களின் தொழில்களை அந்தந்த நாடுகளில் இறக்கி தொழில் நடத்தி, அந்தந்த நாட்டின் வளத்தைத் தங்கள் தொழில்களால் கொள்ளையடிப்பதற்கான ஒரு முயற்சிதான் புதிய பொருளாதாரக் கொள்கை. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் வெறுமனே, இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றியோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் என்று மட்டுமோ சுருக்கிப் பார்த்துப் பயனில்லை. இவற்றைக் கொண்டு வந்தது புதிய பொருளாதாரக் கொள்கை. இந்தத் தொழில் நசிவடையும் நெருக்கடிகளை மாற்ற வேண்டுமானால், அந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை மாற்றப்பட வேண்டும். இது நீடிக்கிற வரை இந்த நெருக்கடி நீடிக்கும் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

ஓர் உதாரணத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னால் நம்முடைய பிரதமர் திரு. வாஜ்பேயி அவர்கள் இனிமேல் மானியங்கள் நீடிக்காது, மானியங்கள் குறைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இது என்ன, வாஜ்பேயி என்கிற தனிப்பட்ட பிரதமரின் அறிவிப்பா? அல்லது, பாரதிய ஜனதா கட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி ஆட்சியின் அறிவிப்பா? இந்த அறிவிப்பை வெளியிட்டவர்கள் யார்? உலக வங்கி கடன் கொடுத்தபோது, இந்த நிபந்தனையை இட்டிருக்கிறது. அதாவது, 2002 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் அனைத்து மாநிலங்களும் மானியங்களை இரத்து செய்ய வேண்டுமென்று நிபந்தனையிட்டு, அந்த நிபந்தனை மத்திய அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் மானியங்கள் இரத்து செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நாம் மானியம் வழங்குவதை இரத்து செய்யச் சொல்லி கட்டளையிட உலக வங்கிக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? I.M.F.-க்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? நம்முடைய குடுமி அவர்களுடைய கையிலே இருப்பதால்தான் நம்முடைய பொருளாதாரத்தை நாசப்படுத்துகிறார்கள்.

இங்கே நான் மாண்புமிகு உறுப்பினர்களின் நினைவுக்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கும் இந்தியாவில், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, பஞ்சாலைகளில் நெருக்கடி என்று சொன்னால், சென்ற வாரம் குஜராத்திலே என்ன நிலை? குஜராத்தின் தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்படுகிற அபாயத்தில் இருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் வருகின்றன. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் தொழில்கள் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் நான் குறிப்பிட்டேன், இவை தமிழ்நாட்டின் தனித்த பிரச்சினைகள் அல்ல, இந்தியாவின் பொதுப் பிரச்சினைகள். தமிழ்நாட்டுக்குத் தீர்வு காண வேண்டுமானால், இந்தியாவின் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், தமிழ்நாட்டில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்வது, அடி மனதில் எழுகிற அரசியல் அரிப்பைத் தீர்த்துக்கொள்ள உதவுகிற மலிவான அரசியல் உத்தியே தவிர வேறொன்றும் அல்ல. எனவே, நான் இங்கே குறிப்பிட விரும்புவது, மத்திய அரசு நிகழ்காலத்தில் கடைபிடிக்கிற அந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையில் சாரமாக இருப்பது,—இன்றைக்கு நீங்கள் பார்க்கலாம் சுங்க வரி, வெளிநாடுகளிலேயிருந்து கொண்டு வரக்கூடிய பொருள்களுக்கான—சுங்க வரி பல இனங்களில் இரத்து செய்யப்பட்டுவிட்டது, பல இனங்களில் பெருவாரியாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு என்ன காரணம்? மறைந்த ஜவஹர்லால் நேரு அவர்கள், இந்திய சரித்திரத்தில் மறக்க முடியாத அந்த மகத்தான மனிதர் தலைமையேற்று வழி நடத்தியபோதுதான், இந்தியாவின் பொருளாதார இறையாண்மையைக் காப்பாற்றுவதற்காக, இந்தியாவின் பொருளாதாரத் தற்சார்பை உறுதிப்படுத்துவதற்காக அன்னியத் தொழில்கள் இந்தியாவில் ஆதிக்கம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக அன்னியத் தொழில்களுக்குச் சுங்க வரியை அதிகமாகப் போட்டு, ஒரு வளையம் போட்டு, பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தி இந்திய சுயசார்பு, சொந்தக் காலில் நிற்பதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்தினார்கள். இன்றைக்கு அவற்றின் நிலை என்ன? ஜவஹர்லால் நேரு அவர்களின் பெயராலேயே நேருவின் கொள்கைகள் தீயிட்டு எரிக்கப்பட்டன, அவை விலக்கிக் கொள்ளப்பட்டன. அப்படி விலக்கிக் கொள்ளப்பட்டதன் மூலம் என்ன ஆயிற்று? ஜப்பானிலேயிருந்து, கனடாவிலேயிருந்து, அமெரிக்காவிலேயிருந்து, பிரிட்டனிலேயிருந்து, வேறுபல மேற்கத்திய நாடுகளிலேயிருந்து கம்பெனிகள் இங்கே வந்து இறங்குகின்றன. அவை இறங்குவதன் மூலம் இந்தியச் சந்தையை அன்னிய கம்பெனிகள் கைப்பற்றுவதற்காக இந்தியச் சந்தையில் இன்றைக்கு இருக்கிற பாரம்பரியமான இந்தியத் தொழில்களை



அழிப்பதற்குரிய கொள்கைகளை மத்திய அரசையே மேற்கொள்ள வைத்து, நம்முடைய கையைக் கொண்டே நம்முடைய கண்ணைக் குத்தி காட்சியைக் கெடுக்கிற வேலையைச் செய்து கொண்டிருப்பது, உலக வங்கியும், I.M.F.-ம், W.T.O.-ம் மற்றும் பன்னாட்டு மூலதனக் கம்பெனிகளும்தான்.

இன்றைக்குப் புதிய பொருளாதாரக் கொள்கையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற இந்த 4 தூண்கள் தகர்க்கப்படுகிறவரை நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம், அன்னிய முதலீடுகள் நம்மைக் காப்பாற்றும் என்று. நான் அன்னிய முதலீடுகளை முற்றிலும் எதிப்பவனும் அல்ல; அன்னிய முதலீடுகளே கூடாது என்பவனும் அல்ல.

*முற்பகல் 10-50*

நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு எந்த அன்னிய தொழில்நுட்பம் தேவையோ, நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு எந்த அன்னிய முதலீடு தேவைப்படுகிறதோ அவற்றை மட்டுமே நாம் இறக்குமதி செய்ய வேண்டும். நம்முடைய சொந்தத் தொழிலை, பாரம்பரியத் தொழிலை அழிக்கின்ற ஒன்றை நாம் இறக்குமதி செய்யக்கூடாது. எனவேதான், இந்தியரிடம் வாக்கு பெற்றவர்கள், இந்தியரிடம் ஓட்டு பெற்று மந்திரியானவர்கள், மத்தியிலே அதிகாரத்திற்கு வந்ததற்குப் பின்னர் இந்திய மக்களின் பொருளாதார, அரசியல் நலன்களைப் பலியிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் ஏன் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இத்தகைய நிலைமைதான் இன்றைய சிக்கலுக்குக் காரணம் என்பதால் இவற்றை நாம் எதிர்க்க வேண்டும். இவற்றையெல்லாம் நான் ஏன் குறிப்பிட விரும்புகிறேன் என்றால் தமிழ்நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டிருப்பது பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல, அரசியல் பிரச்சினையும்தான். கிறிஸ்துவர்கள் போராடுகிறார்கள். இன்றைக்கு தெருக்களிலே வந்து கிறிஸ்துவர்கள் போராடுகிறார்கள். நான் அறிய, என் நினைவறிய எனக்கு முன்னவர்கள் இருந்த வரையிலும் கிறிஸ்துவர்கள் யாருமே மிக அமைதியாக வாழுகிறவர்கள், தெருக்களிலே வந்து போராடியதில்லை. இன்றைக்கு தமிழ்நாட்டிலே, தெருக்களிலே உட்கார்ந்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள்; தர்ணா போராட்டம் நடத்துகிறார்கள்; ஊர்வலம் போகிறார்கள். இப்படிப் போக வேண்டிய நிர்பந்தம் அவர்களுக்கு ஏன் வந்தது? அவர்களாகப் பிரியப்பட்டதல்ல. அவர்கள்மீது வலிந்து திணிக்கப்பட்ட ஒரு போராட்டம்தான்

இன்றைக்கு தமிழ்நாட்டில் கிறிஸ்துவர்களின் போராட்டம். நான் சொல்ல விரும்புவது, நீங்கள் போலீஸை வைத்து என்ன செய்ய முடியும்? ஒரு கிறிஸ்துவ ஊர்வலம் போகிறது. எந்த ஒன்றையுமே, கலகம் செய்ய வேண்டும் என்று விரும்புகிற தமிழ்நாட்டில், கலகத்தின் தீக்கங்குகளான இந்து முன்னணியின் தலைவர் ராமகோபாலன் என்கிறவர் தன்னுடைய நபர்களைத் தூண்டிவிட்டு இந்த ஊர்வலத்தில் கலகத்தைத் தொடங்கி வைத்தால் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு நிலை குலைந்துபோகும். வெறும் போலீஸ் அவ்வளவுக்கும் பயன்படுமா? போலீசார் முழுவதும் தமிழ்நாட்டை ஒழுங்குபடுத்திவிட முடியுமா என்றால் முடியாது. அவ்வளவு Force இல்லை. எனவே, இத்தகைய நிலைமைக்கு, இந்தக் கிறிஸ்துவர்கள் போராட்டத்திற்குக் காரணமாக நம்முடைய ஒரிசாவில், மத்தியப் பிரதேசத்தில், குஜராத்தில் நடைபெற்ற கலவரங்களைப் பற்றி நான் விரித்துப் பட்டியலிட விரும்பவில்லை. ஆனால், ஒன்றேயொன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்து மதத்தைப்பற்றி தஞ்சாவூரில் இந்து எழுச்சி மாநாடு நடத்திக் கொண்டிருக்கிற இந்து மத அடிப்படைவாதிகளை நான் கேட்க விரும்புகிறேன். தஞ்சாவூரிலே எழுச்சி மாநாடு நடத்துகிறார்களே, இங்கே இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான வருஷ காலம், அவனுடைய மேனியில் பட்ட காற்று இவன் மேனியில் பட்டுவிடக் கூடாது என்று, தீண்டத்தகாதவர்கள் என்று மனிதர்களால் இழிவை ஏற்படுத்தி ரிக் வேதத்திலேயே, ரிக் வேதத்தின் புருஷசுத்தத்திலேயே மனிதர்கள் நான்கு வருணம் படைத்தவர்கள் என்று தெய்வ சம்பந்தத்தை உத்தரவாதம் காட்டியது, வேத ரீதியாகவே ஒப்புக்கொள்ளப்பட்டதாகச் சொல்லி, மனிதர்களை இழிவுபடுத்தக் கற்றுக்கொடுத்த அந்த இந்து மதத்தால் எட்டி உதைத்து புறக்கணிக்கப்பட்ட அந்த ஆதிதிராவிடர்களை—அவர்கள் மத்தியிலேயே வேலை செய்த அந்த கிறிஸ்துவக் கன்னியாஸ்த்திரிகள் கற்பழிக்கப்பட்டார்கள். இரக்கத்தின் சின்னம் இந்து மதம் என்கிறார்களே, அந்த இரக்கத்தின் சின்னம் இந்து மதம் என்று சொல்லிக்கொண்டு அந்த இந்து மதத்தின் பெயராலேயே இரக்கமற்று, ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்தவர்களைக் கொலை செய்தார்கள். அந்தக் கொலையின் விளைவு தமிழ்நாட்டில் எதிரொலிக்கிறதா இல்லையா? தமிழ்நாட்டில் எதிரொலிக்க வைத்தது மத்திய அரசின் கொள்கையா இல்லையா? நாடாளுமன்றத்திலே பா.ஜ.க.-அண்ணா தி.மு.க.-வினுடைய கொள்கைதானே இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இந்த நெருக்கடியை தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. அதை யாராலும் மறுக்க முடியாது. அங்கே, பிஞ்சுக் குழந்தையோடு



தூங்கிக் கொண்டிருந்தவர்களை தீ வைத்துக் கொளுத்திவிட்டு, அந்தக் கொடுமை நடந்தபோது - நம்முடைய இந்தியாவினுடைய துரதிருஷ்டம் ஒரு வேளை ஆண்டவன் இருந்தால் அவனால்கூட காப்பாற்ற முடியாது, நமது துரதிருஷ்டம் இந்தியாவினுடைய உள் துறை அமைச்சர் சொல்கிறார் — அங்கே பஜ்ரங் தள் என்று சொல்கிற அந்த அமைப்பு — பஜ்ரங் தள் என்றால் என்ன? கழிசடைகளின் வடிகால் பஜ்ரங் தள். பல பகுதிகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றை வடித்துக்கொண்ட வடிகால்தான் பஜ்ரங் தள். அந்த பஜ்ரங் தள் ரவுடிகள் அங்கே கிறிஸ்துவப் பாதிரியாரை, அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது பிஞ்சுக் குழந்தைகள் என்றுகூடப் பார்[illegible] அந்தக் குழந்தைகளையும் தீ வைத்துக் கொளுத்திக் [illegible]ர்கள். அந்த நிகழ்ச்சி நடந்தவுடன் பஜ்ரங் தள் அப்படியெல்லாம் செய்யாது என்று மத்திய உள் துறை அமைச்சர் சொன்னால், அவர் ஒரு விசாரணை commission போட்டால் குற்றவாளிகளை போலீசார் எப்படிப் பிடிப்பார்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சம்பவத்தை உள் துறை அமைச்சர் வன்மையாகக் கண்டித்தது மட்டுமல்ல, அதை யார் செய்தாலும் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அழுத்தந்திருத்தமாகப் பேசியிருந்தார். யாரையும் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வோடு இதை நான் பேசவில்லை என்றுகூட அவர் சொல்லியிருந்தார். அதுமட்டுமல்ல யார், எங்கே கொலை செய்யப்பட்டாலும்—சமீபத்தில் காஷ்மீரிலே 22 பேர் கொல்லப்பட்டார்கள்—எந்த அரசியல்வாதியும் வேதனைப்படவில்லை. இந்துவானாலும், முஸ்லீமானாலும், கிறிஸ்துவர்களானாலும் அனைவருடைய உயிரும் ஒன்று என்று எப்போது வேதனைப்படுகிறார்களோ, எப்போது அந்த எண்ணம் வருகிறதோ அன்றுதான் மனிதனுடைய உயிருக்கு உண்மையான பாதுகாப்பு கிடைக்கும்.

*முற்பகல் 10-55*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்லவில்லை. மதன்லால் குரானா அவர்கள், நம்முடைய பா.ஜ.பி. கட்சியினுடைய, மாண்புமிகு உறுப்பினரின் கட்சியைச் சார்ந்தவர், அமைச்சராக இருந்தவர் சொல்கிறார், நானும் இருந்து கூட்டுப் பொறுப்பாகச் செயல்படுகிற இந்த அமைச்சரவையில், ஒரிசாவில் நடைபெற்ற கொடுமைகளுக்கு

பா.ஜ.க.-வைச் சார்ந்திருக்கிற சங் பரிவார்தான் காரணம் என்று சொல்லி தன்னுடைய பதவியை இராஜினாமா செய்தார் என்பதை திரு. வேலாயுதன் அவர்கள் மறுக்கிறாரா? மறுக்க இயலாது.

அத்வானியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் என்றால், நான் இப்பொழுதும் சொல்கிறேன். அத்வானி தெளிவாகச் சொன்னார். பஜ்ரங் தள் நல்ல அமைப்பு, பஜ்ரங் தள்ளைச் சார்ந்தவர்கள் அப்படிச் செய்ய மாட்டார்கள் என்று சொன்னார். ஆனால் ஒரிசா காவல் துறையினுடைய புலனாய்வில், பஜ்ரங் தள்ளைச் சார்ந்த தொண்டர்கள்தான் அதைச் செய்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியுமா? ஆனால், மத்திய உள் துறை அமைச்சர் இப்படிச் சொன்னார் அல்லவா? தான் சொன்னதற்கு எதிராக ஒன்று நிகழ்ந்து விட்டது என்பது குறித்து அவர் கவலைப்படவில்லை. ஏனென்றால் ஆசை எப்பொழுதுமே வெட்கம் அறியாது, நாணம் அறியாது. அவருக்குப் பதவி ஆசை. பதவி ஆசை இருப்பதனாலேதான் வாஜ்பேயியும் சரி, அத்வானியும் சரி, தமிழ்நாட்டில் ஊழலிடம் மண்டியிட்டுக் கிடக்கிறார்கள். ஊழலிடம் உலகில் மண்டியிட்ட அமைச்சரவை இந்தியாவில்தான் இருக்கிறது. ஊழலிடம் மண்டியிடலாமா? நான் தனிப்பட்ட ஒரு நபர் பற்றிக் கவலைப்படவில்லை. தனிப்பட்ட நபர்கள் தோன்றுவார்கள், வாழ்வார்கள், மறைந்து மண்ணோடு மண்ணாகி விடுவார்கள். ஆனால் ஊழலிடம் மண்டியிட்ட ஓர் ஆட்சி உண்டு என்றால் அது பா.ஜ.க. அண்ணா தி.மு.க. கூட்டாட்சிதான். அது உண்மையா இல்லையா? அப்படித்தான் நிகழ்ந்திருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் உலகத்தில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின்மீதும் ஊழல் குற்றச்சாட்டு வந்தது. ஆனால், என்மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்வரை நான் பொறுப்பில் இருக்க மாட்டேன் என்று பதவியை இராஜினாமா செய்து, என்னை ஊழல் குற்றவாளி இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறினால்தான் நான் தேர்தலில் போட்டியிடுவேன் என்று சொன்ன ஒரே அரசியல்வாதி எல்.கே. அத்வானி அவர்கள். எனவே, பாரதிய ஜனதாக் கட்சியினுடைய தலைவர்கள் ஊழல்வாதிகள் என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதட்டத்தில் இருக்கிறார். அத்வானி அவர்கள்



நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டதே, அவர் ஊழல் செய்யவில்லை என்று விடுதலை செய்யப்படவில்லை; அவர் ஊழல் செய்தார் என்பதை C.B.I. நிரூபிக்கத் தவறி விட்டது என்ற doubt லேதான் விடுவிக்கப்பட்டாரே தவிர, அவர் குற்றவாளி அல்ல என்று நீதிமன்றம் கூறவில்லை என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு) யார் வேண்டுமானாலும் சொல்லலாம் என்பது வேறு விஷயம். ஆகவே, பா.ஜ.க.-யைப் பொறுத்தவரையிலும் கிறிஸ்துவ சமுதாயத்தை வேட்டையாடுகிறார்கள்; இஸ்லாமியர்களை வேட்டையாடுகிறார்கள்.

இதேபோல இஸ்லாமியர்களைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கிறிஸ்துவர்கள் பாதிக்கப்பட்டபொழுது என் ... பா.ஜ.க. என்ன செய்தது தெரியுமா? பா.ஜ.க. சங் பரிவார் மற்றும் பிரபல அமைப்புகளெல்லாம் சேர்ந்து என்ன செய்தன என்றால்—இவர்கள் சொல்வது இந்து மதத்தின் சாரம் என்று யாரும் கருதி விட வேண்டாம் — நான் minority கிறிஸ்துவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் — இஸ்லாமிய சமுதாயத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பா.ஜ.க.-வோ, சங் பரிவாரோ நடத்துகிற இந்தச் செயல் இந்து மதத்தின் சாரத்தைச் சார்ந்தது அல்ல. ஏனென்றால் இந்து மதத்தின் சாரம் என்னவென்பதை விவேகானந்தர் தெளிவாக உறுதிபடக் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, விவேகானந்தரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் இவர்கள். காவி தரித்தவனெல்லாம் சன்னியாசிகள் அல்ல. காவி தரித்தவர்களெல்லாம் சன்னியாசி என்று கருதினால், தவறு செய்துவிடுவோம் என்று இதிகாசம் சொல்கிறது. காவி தரித்தவர்கள் மட்டும் சன்னியாசிகள் அல்ல. சன்னியாசிகள் அல்லாதவர்கள் காவி தரிப்பார்கள் என்பதற்கு பா.ஜ.க.வும் ஓர் அடையாளம்தான். பா.ஜ.க.-தான் ஒரு தெளிவான அடையாளம். எனவே, அவர்கள் இதைப் பயன்படுத்தி இப்படிச் செய்தார்கள். நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மண்ணில் இந்து மதத்தின் சாரத்தையும், இந்தியக் கலாச்சாரத்தையும் சிலுவையில் அறைந்த அமைப்புதான் பா.ஜ.க. என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) மணியடித்துவிட்டீர்கள்.

விலைவாசியேற்றம் பற்றி நான் இங்கே இரண்டொரு விஷயங்களைக் கூறி மிக விரைவில் முடித்துக்கொள்கிறேன். நான் அந்த விஷயங்களுக்குள்ளே போனால் காலம் அதிகமாகிறது. நான் கேட்கிறேன். கொஞ்சமாவது அரசியலில் நேர்மை இருக்க வேண்டுமா இல்லையா? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்கூட விலைவாசியை எதிர்க்கிறது. அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழகம்தானே மத்தியில் நாடாள்கிறது. மத்தியில் நாடாள்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையிலேதானே விலைகளை ஏற்றுகிற அதிகாரம், கட்டுப்படுத்துகிற அதிகாரம் இருக்கிறது. தன் கையிலே அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், பா.ஜ.க.-வுக்கும் தமிழ்நாட்டில் விலைவாசிகளைப் பற்றிப் பேசுகிற தார்மீக அருகதை உண்டா? நான் கேட்க விரும்புகிறேன், உண்மையிலேயே விலைவாசி ஏறியிருக்கிறது என்றால் இந்த ஏற்றத்தை உருவாக்குகிறவர்கள் யார்? நாடாளுமன்றத்தைப் பற்றிக் கவலைப்படாமல் ஒரு நிர்வாக உத்தரவின் மூலம்தானே இவர்கள் விலையேற்றினார்கள். இது ஒரு வகை. இன்னொரு வகை எப்படித் தெரியுமா? இது நேரடியாக நிர்வாக உத்தரவின் மூலம் உயர்த்தப்படுகிற விலைவாசி என்றால் இன்னொரு விலைவாசி உயர்வு மறைமுக விலைவாசி உயர்வு. உத்தரவு போடாமலேயே விலை ஏறுகிறது. பொருளாதாரக் கொள்கை தடுமாற்றத்தால் விலை ஏறுகிறது. அப்படி ஏற்றப்படுகின்ற விலைவாசி அல்லது உயர்த்தப்படுகின்ற விலைவாசி என்பது, நடைமுறையில் வழிப்பறி செய்வது மாதிரி. வழிப்பறிக்காரர்களைப்போல விலைகளை ஏற்றி, பொதுமக்கள் மத்தியில் வழிப்பறி செய்கிறார்கள். இந்த நிலைமையையும் நாம் இன்றைக்குப் பார்க்கிறோம்.

*முற்பகல் 11-00*

இன்னொரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 50 நிமிடங்களுக்கு ஒரு கொலை நடக்கிறது. 45 நிமிடங்களுக்கு ஒரு கற்பழிப்பு நடைபெறுகிறது. மூன்று மணி நேரத்திற்கு ஒரு கடத்தல் நடைபெறுகிறது. 20 நிமிடங்களுக்கு ஒரு திருட்டு நடைபெறுகிறது. இங்கல்ல. உத்தரப்பிரதேச மாநிலத்தில். இதுகுறித்து பாரதிய ஜனதா கட்சியோ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ கவலைப்பட்டதுண்டா? அதுமட்டுமல்ல, லக்னோ யாருடைய தொகுதி? நமக்கு எல்லாம் தெரியும். யாரும் இரவில் தனித்து நடமாடாதீர்கள் என்று பொறுப்பான காவல் துறையின் D.G.P. அறிவிக்கிறார் என்றால், பிரதமரின் தொகுதியில் இரவு நேரங்களில் நீங்கள் நடமாட வேண்டாம் என்று அறிவிக்கிற அளவுக்கு சட்டம்-ஒழுங்கைப் பாழ்படுத்தியிருக்கிற ஓர் ஆட்சிக்கு, தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கைப் பற்றிப் பேச யோக்கியதை உண்டா? பேசலாமா? அப்படிப் பேசுகிறார்கள் என்றால் யார் காரணம்? பேசுவதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை அவர்கள்தான் விளக்க வேண்டும்.



அதேபோல இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். பாரதிய ஜனதா கட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பற்றிச் சொன்னார்கள். விலைவாசியை ஏற்றினார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அதிகாரத்தில் இருக்கிறார்களா இல்லையா? நீதிமன்றங்களில் தங்களைத் தண்டிக்க இருக்கின்ற வழக்குகளிலிருந்து தப்பித்துக்கொள்ள, சட்டத்தின் சந்து பொந்துகளை, இண்டு இடுக்குகளைத் தேடி மண்டியிடுகின்ற இந்த அ.இ.அ.தி.மு.க. இன்றைக்கும் மத்தியில் அதிகாரத்தில் இருக்கிறபோது, வங்கிகளிலிருந்து வாராக் கடன் ரூ. 41,000 கோடியாக அல்லவா இருக்கிறது? அந்த ரூ. 41,000 கோடி ரூபாயைக் கைப்பற்றுவதற்கு மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

இன்னொன்றையும் தெரிந்துகொள்ளுங்கள். 1996-97 ஆம் ஆண்டில் மட்டும் வங்கிகளால் கைவிடப்பட்ட கடன் 1,253 கோடியே 2 லட்சம் ரூபாய். 1997-98-ல் 1,608 கோடியே 79 லட்சம் ரூபாய் வாராக் கடன் என்று கைவிடப்பட்டதே! யாரிடமிருந்து வாராக் கடன்? ஏன் கைவிடப்பட்டது என்பதைப் பகிரங்கமாக நாட்டுக்கு அவர்கள் அறிவிக்கத் தயாரா? மறைக்கப்பட்டிருக்கின்ற உண்மைகளை வெளியிடத் தயாரா? வெளியிடமாட்டார்கள். நான் கேட்க விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா தி.மு.க.விற்கு நேர்மை இருந்தால், நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையைக் கிளப்பத் தயாரா? இவற்றை வெளியிட வேண்டும் என்று சொல்லி இராஜிநாமா செய்யத் தயாரா? வாராக் கடனாக இருக்கிற 41,000 கோடி ரூபாயைக் கைப்பற்ற நடவடிக்கை எடுக்கத் தயாரா? மாட்டார்கள். ஏன்? அவர்கள் அடிமடியில் கனத்துக்கிடப்பதால் அவர்கள் எல்லாம் செய்யமாட்டார்கள் என்பதை நான் மிக நன்றாக அறிவேன்.

தமிழ்நாட்டின் ஒருசில பிரச்சினைகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு விஷயங்களில் இத்தகைய கண்ணோட்டங்களோடு மாற்றங்களைக் கொண்டுவரப் பெரிதும் விரும்புகிறார்கள். அவர்களோடு அமைச்சரவை முழுவதும் சமநடை பயிலவேண்டும். முதலமைச்சரைப்போல, முதலமைச்சரோடு சமநடை அமைச்சரவை முழுமொத்தமாக அதே உணர்வு நிலையில் பிரச்சினை பயிலுமானால் உண்மையில் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் பிரச்சினை இல்லாத நிலை ஏற்படும் என்பதோடு, இன்னொன்றையும் செய்ய வேண்டும். நீங்கள் என்ன முயற்சி செய்தாலும், பல அமைச்சர்கள்

பல இடங்களில் சேவையில் விறுவிறுப்பு காட்டுகிறார்கள், சுறுசுறுப்புடன் செயல்படுகிறார்கள் என்றாலும், அதிகாரிகள் மட்டத்தில், தாலுகா அலுவலகங்கள் collector அலுவலகங்கள் ஆகியவையும் அந்தச் சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டும். Town and Country Planning Department இருக்கிறது பாருங்கள், புத்தர் போய் நின்றால்கூட அவருக்குக் கோபம் வந்துவிடும். புத்தருக்கும் கோபம் வருகின்ற ஒரு துறை எதுவென்றால், அதுதான் Town and Country Planning துறை. அங்கே எதுவுமே நடக்காது. எல்லா விஷயங்களிலும் ஏதாவது நிகழ்ந்தால்தான் நடக்கும். இதை ஏதோ குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. இத்தகைய நிலைமைகளை மாற்ற நீதிபதி இராமானுஜம் கமிஷன் அமைக்கப்பட்டது. அவர்களும் பரிந்துரைகள் தந்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளில் நான் முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, மாநில அரசுக்குத் தெரிவிக்க விரும்புவது, உங்களின் இருதயத்தில் இருக்கிற நல்ல நோக்கத்தை, மக்களிடம் சென்றடையாதவாறு தடுக்கிற சீன மதில் சுவர் இந்த அதிகார வர்க்கம்தான். இந்த அதிகார வர்க்கத்தின் மலட்டுத்தனம், இந்த அதிகார வர்க்கத்தினுடைய ஊழலில் புரையோடிப் போய் மூழ்கிய நிலை, உங்களின் நல்ல செயலாற்றலைப் பாழ்படுத்துகின்றன என்பதை நீங்கள் புரிந்துகொண்டு, ஊழலற்ற கீழ்மட்ட நிர்வாகத்தை உறுதிப்படுத்தாதவரை, மக்களின் முணுமுணுப்பை மாற்றவே முடியாது, மறைக்கவே முடியாது. வேறு விஷயங்களே இல்லை. உண்மையிலேயே சொல்கிறேன். எல்லா இடங்களிலும் நன்றாக வேலைகள் நடக்கின்றன. சாலைகள் போடுகிறார்கள். பல இடங்களில் வடிகால் கட்டுகிறார்கள். பல்வேறு வேலைகள் நடக்கின்றன. ஆனால் மக்கள் ஏனோ ஆதரித்து எழவில்லை. ஏன் தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல நல்ல வேலைகள், நல்ல திட்டங்கள் நடைபெறுகின்றன. ஆனால், இந்த நல்ல திட்டங்களின்பால் ஈர்த்து இழுக்கப்பட வேண்டிய வெகுஜனங்கள் இதிலிருந்து கொஞ்சம் அன்னியப்பட்டு நிற்கக் காரணம், கீழ்மட்டத்தில் மக்களோடு உறவு கொள்கின்ற, நேரடி தொடர்பு கொள்கின்ற அதிகார வர்க்கம் ஊழலில் தெப்பமாக நனைந்து கிடக்கிறது. அதை மீட்க முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு நனைந்து கிடக்கிறது. அதை நாம் சீர்திருத்தியாக வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-05*

நிறைவாக உள்ளாட்சி அமைப்புகள். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். *73, 74* ஆவது அரசமைப்பு



சாசனத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எதற்குத் தெரியுமா? உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவதற்காக. ஆனால் என்ன நிலைமை தெரியுமா? இன்னமும் மத்தியில் *80* சதவிகித அதிகாரமும், மாநில அரசிடம் *20* சதவிகித அதிகாரமும் தேங்கிக் கிடக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு எந்த அதிகாரமும் இல்லை. எனவே, அரசமைப்புச் சட்டம் மறுபடியும் திருத்தப்படாதவரை — இப்போது *29* அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றி விரிவாகச் சொல்ல முடியும். *29* அதிகாரங்களே அல்ல அவை. *29* கடமைகள். தீர்மானிக்கப்பட்ட அந்தக் கடமைகளை அவர்கள் நிறைவேற்றுகிற கருவிகளே தவிர—அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

ஜனநாயகத்தைப் பொறுத்தவரையில், ஜனநாயகக் கட்டமைப்பு காப்பாற்றப்பட வேண்டும். எனக்கு நிறைய மனக் காயங்கள் உண்டு. பல்வேறு தொழிற்சங்கப் போராட்டங்களில் காவல் துறை தூண்டுகிற காரணத்தினால், முதலாளிகளுக்கு ஆதரவாகச் சில இடங்களில் காவல் துறை செயல்படுகின்ற நிலைமைகள் ஏற்பட்டுவிடுகின்ற காரணத்தினால் ஏற்பட்ட மனக் காயங்கள் பலவற்றை என்னால் உள்ளபடியே வெளிப்படுத்த முடியவில்லை. உண்மையிலேயே, ரணப்பட்டிருக்கிற பல பிரச்சினைகளை என்னால் பட்டியலிட முடியும். ஆனால், அதற்குரிய நேரம் இல்லை. தொழிலாளர்கள் போராடுகின்றபோது, weaker section-க்கு எதிராகப் பத்து வழக்குகளைப் போட்டு விடுகின்றார்களே! அவன் வேலையையும் இழந்து, மன உளைச்சலுக்கும் ஆளாக்கப்படுகிறான். இதற்கெல்லாம் எங்கே தீர்வு இருக்கிறது என்று பார்த்தால், ஒன்றுமில்லை. எனவே, நேரடியாக நான் குறிப்பிட விரும்புவது, ஜனநாயகக் கட்டமைப்பு காப்பாற்றப்பட வேண்டும். நம்முடைய அரசமைப்பு ஜனநாயக அரசமைப்பு. இந்த ஜனநாயக அரசமைப்பில் ஜனநாயகக் கட்டமைப்பைக் காப்பாற்ற ஜனநாயகரீதியான போராட்ட வடிவங்கள் மதிக்கப்பட வேண்டும். அவற்றை நிறைவேற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—Petition என்பது ஜனநாயக அரசமைப்பில் ஒரு சக்திமிக்க கருவி.—இந்தப் petition-களை முறைப்படி disposal செய்வதற்குரிய வழிவகைகளை உருவாக்குவது பொருத்தம் என்று கூறி, பிற பல விஷயங்கள் நிறைய இருந்தாலும் அவற்றை நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தின்போதும், இன்ன பிற மானியக் கோரிக்கைகளின்போதும் பேசலாம் என்று கருதி, இத்துடன் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமில்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலை பத்திரிகையிலே வந்த செய்தியினை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். நல்ல தமிழறிஞரும், தேசபக்தரும், நல்ல நாவலாசிரியருமான கல்கி அவர்களுடைய தபால் தலை வருகின்ற ஒரு நல்ல செய்தி இன்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதித்தான் வந்திருப்பதாக இன்று இந்து பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்த்தேன். ஏற்கெனவே தலைவர் மூப்பனார் அவர்களுடைய தலைமையில் நூற்றாண்டு விழாக் குழு ஏற்படுத்தி, அவர்கள் இதற்காகப் பரிந்துரை செய்து, நம்முடைய இரு தலைவர்களும் சேர்ந்து மிகப் பெரிய தலைவருடைய தபால் தலை வருகின்ற நல்ல செய்தியை இன்று பத்திரிகையிலே பார்த்தபோது, தமிழனுக்கு ஓர் ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய கல்கி அவர்களுக்கு வருகின்ற 9-9-1999 அன்று நூற்றாண்டு விழா நடைபெறவிருக்கிறது. அதற்குள்ளாக, அவர்களுக்கு ஒரு மணி மண்டபம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டை கணினி என்று சொல்லக்கூடிய Computer ஆண்டாக அறிவித்து, அதற்கான ஒரு மாநாடு நடத்திய பெருமை பெற்றது நம்முடைய அரசாங்கம். நானும் அந்த விழாவிலே கலந்து கொண்டேன். உலகத்திலே இருக்கின்ற தமிழறிஞர்கள் எல்லாம் கலந்துகொண்டு சிறப்பான முறையில் கணினியைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் கணினி எல்லா மட்டத்திலேயும் வர வேண்டுமென்று நம்முடைய அரசு விரும்புகிறது. முதலில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கணினி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனெனில், நாடாளுமன்றத்திலே நாடாளுமன்ற உறுப்பினர்கள்



அனைவருக்கும் கணினி கொடுத்திருக்கிறார்கள். அதோடு தட்டச்சுப் பொறி ஒன்றையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் பொது மக்களுடைய கோரிக்கைகளை எல்லாம் பதிவு செய்து உடனுக்குடன் அரசுக்கு, அதிகாரிகளுக்குத் தெரிவிக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வரும். அதோடு எங்களுடைய தொகுதிகளுக்கு நாங்கள் செல்கின்றபோது, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கின்ற மக்களுக்கு உடனே அந்த கணிப் பொறியைத் தட்டி இதை இதைச் செய்திருக்கிறோம் என்று நாங்கள் சுட்டிக்காட்ட முடியும். அந்த நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும். அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள் கணிப் பொறியைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியையும் தர வேண்டும். வருகின்ற 17 ஆம் தேதி நம்முடைய பட்ஜெட் கூட்டம் தொடங்கவிருக்கிறது, இரண்டு மாதகாலம் நாங்கள் உங்களோடு இருக்கபோகிறோம், அந்த நேரத்தில் மாலை வேளைகளில் எங்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய கோரிக்கை மட்டுமல்ல, 234 சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

தொழில் துறையில் மிகப் பெரிய சாதனை என்று இந்த ஆண்டு, நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. 45,497 கோடி ரூபாயில், இந்த 32 மாதங்களில் தமிழகத்தில் புதிய தொழில்கள் வருவதற்கு அன்னிய முதலீடுகளாக நாங்கள் பெற்றிருக்கிறோம் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்திருக்கிறார்கள், அதை நான் வரவேற்கிறேன். ஆனால், முந்தைய ஆட்சியில், 5 ஆண்டுக்காலத்தில் 44,925 கோடி ரூபாய் முதலீட்டில், 3,177 திட்டங்களைக் கொண்டு வந்தோம் என்று முந்தைய ஜெயலலிதா அரசு அறிவித்தது. மாநிலத் திட்டக் குழு அறிக்கையில் அது சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், 8-வது திட்ட அறிக்கையில் பார்க்கின்றபோது 44,925 கோடியிலே, 3,177 திட்டங்களில் வெறும் 24 சதவிகிதம்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 76 சதவிகிதம் நிறைவேற்றப்படவில்லை என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், அவர்கள் 5-வது இடத்திற்கு வந்து விட்டோம் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். ஆனால், அறிக்கையைப் பார்க்கின்றபோது 8-வது

இடத்திற்குப் போய் இருப்பதாக நமக்குத் தகவல் வந்திருக்கிறது. இதுமாதிரி ஒரு சூழ்நிலை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது அதற்கெல்லாம் சில காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், சென்ற பட்ஜெட்டில் Co-power Generation கொண்டுவரப் போகிறோம் என்று அறிவித்தீர்கள். Co-power Generation என்பது என்னவென்று சொன்னால், நம்முடைய சர்க்கரை ஆலைகளில் இருக்கின்ற கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி, molasses-ஐப் பயன்படுத்தி, மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று சென்ற ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டது. இதில் தனியார் துறையாக இருக்கின்ற Parry & Company போன்றவை எல்லாம் நல்லமுறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆளுநர் உரையிலே சொன்னதோடு சரி, என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. அடுத்தது, Pilkington என்ற இங்கிலாந்து நிறுவனம், தானியங்கி கண்ணாடித் தொழிற்சாலையை 100 கோடி ரூபாயில் மறைமலை நகருக்குப் பக்கத்தில் அமைப்போம் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது அது கைவிடப்பட்டது என்ற தகவல் வந்திருக்கிறது. அதுபோன்று, Kumho Tyres என்ற கொரியா நிறுவனம் 500 கோடி ரூபாயில் டயர் செய்யப் போகிறோம், ஹூண்டாய் கம்பெனிக்குக் கொடுக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், அதையும் கைவிட்டுவிட்டார்கள். அதிலே என்ன ஒரு கொடுமை என்று சொன்னால் — இது போனாலும் போகட்டும், ஏற்கெனவே M.R.F. இருக்கிறது, அங்கிருந்தாவது வாங்கி இருக்கலாம், அவர்கள் அதையும் விட்டுவிட்டு வடநாட்டிலிருந்து டயர்களை வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஹூண்டாய் மாதிரி, பெட்ரோ கெமிக்கல் தொழில் பூங்கா தொடங்கி விட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பூங்காவில் Norsk Hydro Company என்ற ஒரு நார்வே கம்பெனி, 500 கோடி ரூபாயில் PVC Resin Project-ன்கீழ் பொருட்களைத் தயார் பண்ணுகிறோம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு முன்னால், 1997 ஆம் ஆண்டு கையெழுத்துப் போட்டு, எல்லாம் ஆரம்பித்து இடம் எல்லாம் வாங்கியாகிவிட்டது. இப்போது 11-2-1999 அன்று இதை நாங்கள் கைவிட்டு விட்டோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் 17-2-1999 அன்று இந்தச் சட்டமன்றத்தில் ஆளுநரது உரையில், அது வரும் என்று சொல்லியிருக்கிறார்கள்.



முற்பகல் 11-15

அதேமாதிரி Pilot Sando Reynold என்ற பிரான்ஸ் கம்பெனி மூலம் Commercial Vehicles Project கொண்டுவரப் போகிறோம் என்று சென்ற ஆண்டு சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அது கைவிடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், பழைய அரசாங்கம் 44,000 கோடி ரூபாயில் தொழிற்சாலைகளைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி, வெறும் 24 சதவீதத்திற்குப் போனது மாதிரி, நம்முடைய அரசாங்கமும் அப்படி வந்துவிடக் கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன். தயவுசெய்து இதில் கவனமாக இருந்து நம்முடைய தொழில்களையெல்லாம் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும். ஏற்கெனவே நம்முடைய தொழில்கள் எல்லாம் ரொம்பப் பாதித்துப் போய் இருக்கின்றன. உதாரணமாக ஸ்டாண்டர்ட் மோட்டார் மற்றும் டன்லப் கம்பெனிகள். இவற்றை மறுபடியும் திறப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். ஸ்டாண்டர்ட் மோட்டார் நிறுவனத்தில் கடைசியாக இருந்த பொது மேலாளர் அவர்களை நான் பார்த்துப் பேசினேன். அரசாங்கம் உதவிப் பணம்கூட கொடுக்க வேண்டாம், திறப்பதற்கு அனுமதி கொடுத்தால் போதும். 300 ஸ்டாண்டர்ட் வேன்கள் உள்ளே அருமையாக இருக்கின்றன. அவற்றை ரிப்பேர் செய்து வெளியே விட்டாலே, தொழிற்சாலையை நடத்த முடியும் என்று அப்போது அவர் சொன்னார். ஆகவே நம்முடைய முதல்வர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்ட் மோட்டார் நிறுவனம் மற்றும் டன்லப் தொழிற்சாலைபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டாக, உண்மை நிலையைத் தெரிந்திருந்தும், சொல்கிறார்கள். BIFR நிறுவனம் அதை மீண்டும் நடத்த முடியாது என்று சொல்லி, அங்கே இருக்கக்கூடிய கடன்காரர்களுக்கெல்லாம் பணத்தைக் கொடுத்து விடுங்கள் என்றும், தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளங்கள் எல்லாம் அங்கே இருக்கக்கூடிய சொத்துக்களை விற்று கொடுத்து விடுங்கள் என்றும் சொல்லி, அது இப்போது சென்னை, உயர் நீதிமன்றத்தில் Liquidation-ல் இருக்கிறது. இருந்தாலும்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் Promoter வந்தால் அதைத் திறப்பதற்குச் சிந்திக்கலாம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்

பலமுறை Promoter வருகிறார் வருகிறார் என்று சொல்கிறாரே தவிர யாரும் வரவில்லை. இப்போதும் அதே பிரச்சினையைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்லாமல், அந்தத் தொழிற்சாலையைத் திறக்கச் செய்ய வேண்டுமென்பதற்காக 3 கோடி ரூபாய் தருகிறேன் என்று சொல்லி, உண்ணாவிரதம் இருந்து கொண்டிருந்தவர்களை, உண்ணாவிரதம் செய்யாமல் நிறுத்தியவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது என்னவென்றால், ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனியில் 300 வேன்கள், அதாவது பயன்படுத்தக் கூடிய அளவுக்கு நல்ல வேன்கள் இப்போது தயாராக இருக்கின்றன. நீங்கள் கொஞ்சம் பணம் கொடுத்தால், அந்த வேன்களை வெளியே கொண்டுவந்து இந்தத் தொழிற்சாலையை நடத்த முடியும் என்று அங்கே உள்ள பொது மேலாளர் சொல்கிறார். ஆகவே அதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 300 வேன்களையும் வெளியே எடுப்பதற்கு அனுமதி கொடுத்தால், தொழிற்சாலையை நடத்துவதாக, ஒருவர் பொறுப்பேற்றுக்கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார். அந்த முழுப் பொறுப்பையும் எதிர்க்கட்சித் தலைவரிடத்திலே கொடுத்துவிடுகிறேன். அதை உடனடியாகத் திறந்து என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தயவுசெய்து என்னிடத்தில் அந்தப் பொறுப்பைச் சுமத்தாதீர்கள். ஸ்டாண்டர்ட் மோட்டார் நிறுவனத்தில் கடைசியாக இருந்த பொது மேலாளரை நம்முடைய முதல்வர் அவர்களிடம் அழைத்து வருகிறேன் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெள்ள நிவாரணம். இந்த நாட்டில், இந்தத் தடவை, குறிப்பாக தென் மாவட்டங்களில் வெள்ளம் அதிகமாக இருந்தது. வெள்ள நேரத்தில் வைகையில் 1 இலட்சம் கன அடி தண்ணீர் உடனே திறந்துவிட்டார்கள். திறந்துவிட்டது நியாயம்தான், அதில் ஒன்றும் தப்பு இல்லை. திறந்து விடாமல் இருந்திருந்தால் வைகை அணையே உடைந்து போய் இருக்கும். 1 இலட்சம் கன அடி



தண்ணீர் வந்ததன் காரணமாக வைகைக் கரையில் இருந்த விவசாயிகள், நிலம் வைத்திருப்பவர்கள், வீடு வாசல்கள் இழந்து பரிதாபத்திற்கு ஆளானார்கள். அக்காள் பொன்னம்மாள் தொகுதியில் சித்தர்கள் நத்தம் என்ற பஞ்சாயத்து ஒன்று இருக்கிறது. அங்கு எல்லோரும் வசதியாக இருக்கிறார்கள். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஆனால் அவர்களுடைய நிலைமை பரிதாபமாக இருக்கிறது. கிட்டத்தட்ட 3,4 தினங்கள் வெள்ளத்தில் மிதந்து இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், அக்காள் பொன்னம்மாள் அவர்களும் படகிலே சென்று அந்த மக்களுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அவர்கள், அந்த இடத்திலிருந்து அவர்களை மேடான இடத்திற்குக் குடியமர்த்துகின்ற பொறுப்பினை நம்முடைய அரசு ஏற்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-[illegible]0

இராமநாதபுரம் நகரம். இராமநாதபுரம் நகருக்குப் பக்கத்தில் சக்கரைக்கோட்டை கண்மாய் என்று சொல்லக்கூடிய கண்மாயினுடைய பகுதியில் இரண்டாயிரம் வீடுகள் கட்டி வசித்துக்கொண்டிருக்கிற மக்கள் முழுமையாக ஒரு மாத காலத்திற்கு மேலாக வெள்ளத்திலே மிதந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகளுக்குச் செல்வதற்குப் பாதையும் கிடையாது. இராமநாதபுரம் நகரத்தினுடைய சாக்கடைத் தண்ணீர் பூராவும் அங்கேதான் போகிறது. மருத்துவமனைக் கழிவுகளெல்லாம் போகின்றன. மிகப் பெரிய ஒரு மோசமான சூழ்நிலையில் வாழ்கின்ற அந்த மக்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், எங்களுடைய வீட்டுப் பகுதியில் ஒரு கரை போட்டு தண்ணீர் உள்ளே வராமல் தடுங்கள் என்று சொல்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று பொதுப் பணித் துறையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

Ration கார்டுகள். Ration கார்டுகள் பற்றி எல்லோரும் பேசியாகிவிட்டது. நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏதாவது ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள், சும்மா சொல்லாதீர்கள் என்று நேற்று சொன்னார்கள். அதனால், ஓர் ஆதாரத்தோடு பேசலாம் என்று வந்திருக்கிறேன். எங்களுடைய தொகுதியில் பெருநாழி என்று ஒரு கிராமம். முஸ்லிம் சமுதாய மக்கள் IFTAR விருந்துக்கு என்னை அழைத்தார்கள். IFTAR விருந்துக்கு நான் போனவுடன் 50, 60 பெண்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு, எங்களுக்கு Ration card

கொடுக்கவில்லை, பழைய card-க்கு Ration பொருட்கள் கொடுக்கமாட்டோம் என்று சொல்கிறார்கள், இதற்குப் பதில் சொல்லிவிட்டு IFTAR விருந்துக்குப் போங்கள் என்று அவர்கள் பிடித்துக்கொண்டார்கள். பிறகு, ஒருவழியாக நான், சட்டமன்றம் கூடவிருக்கின்ற காரணத்தினால் அங்கே பேசுகின்றேன் என்று சொல்லி தப்பித்து வந்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Ration card விநியோகம் என்பது சரியாக இல்லையென்று பலவாறாக புகார்கள் இருக்கின்றன. இதைத் தயவுசெய்து, சரி செய்ய வேண்டும்.

ஆரணி அருகே வடுகசாத்து என்ற கிராமத்தில் மகளிர் கூட்டுறவு நியாய விலைக் கடையில் கோதுமை 5 ரூபாய் என்பதை 7 ரூபாயாக ஆக்கிவிட்டார்கள். சென்னையிலும்கூட அப்படித்தான் இருக்கிறது. சர்க்கரை 11 ரூபாயாக இருந்தது, இப்போது 12 ரூபாய். ரவை 8.50 ரூபாயாக இருந்தது, 10.50 ரூபாய் ஆக்கிவிட்டார்கள். மைதா 8 ரூபாய் இருந்தது, 10 ரூபாய் ஆக்கிவிட்டார்கள். இதனால் விலைவாசி கூடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 160 கோடி ரூபாய் மானியம் கொடுத்தும்கூட, இந்த விலைகள் எல்லாம் ஏறியிருக்கின்றன.

இதோடு இன்னொரு மிக முக்கியமான கோரிக்கை என்னவென்று சொன்னால், சர்க்கரை வியாதிக்காரர்கள் பெருத்துப்போய்விட்டார்கள். எந்த மருத்துவரிடம் போனாலும், அரிசியே சாப்பிடாதீர்கள் என்று சொல்கிறார்கள். கோதுமையைத்தான் சாப்பிடச் சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 40 ஆயிரம் டன் கோதுமை மத்திய அரசாங்கத்திடமிருந்து உங்களுக்கு வருகிறது. அதில் P.D.S.-க்கு 15 ஆயிரம் டன் கொடுத்துவிடுகிறீர்கள். ரவை, மைதா செய்வதற்கு 15 ஆயிரம் டன் கொடுத்துவிடுகிறீர்கள். மீதம் இருக்கின்ற கோதுமையை என்ன செய்கிறீர்கள் என்றால், National Consumer Co-operative Federation என்ற ஒன்று இருக்கிறது, National Agricultural Co-operative Federation என்ற ஒன்று இருக்கிறது. இந்த இரண்டுக்கும் சேர்த்து 4 ஆயிரம் டன் கொடுத்துவிடுகிறீர்கள். இந்த 4 ஆயிரம் டன்னை, போன டிசம்பர் கணக்குப்படி, 40 இலட்சம் ரூபாய் விலை வைத்து, லாபம் சம்பாத்தியம் பண்ணி கேரளாவிற்கு இந்த இரண்டு துறைகளும் விற்றிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும், கோயம்புத்தூரிலிருந்து இந்த வியாபாரம் நடந்துகொண்டிருக்கிறது என்று ஏராளமான தந்திகள் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனக்கு copy வந்திருக்கிறது. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஏனென்றால் ஒரு மாதத்திலேயே 40 இலட்சம் ரூபாய் என்றால், மாதா மாதம் இந்தமாதிரிப் போனால்



என்ன ஆகும் என்பதை நான் இந்த அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) எனக்கு வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்பாவு, நீங்கள் உங்கள் இருக்கையில் போய் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது அமைச்சர்கள் கவனித்துப் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இதையெல்லாம் இந்தமாதிரி Agriculture Department, consumer-களுக்கு எல்லாம் கொடுப்பதற்குப் பதிலாக Mill-களுக்குக் கொடுக்கலாம், அல்லது Hotel-களுக்குக்கூட நேரடியாகக் கொடுத்து குறைந்த விலையில் நீங்கள் கோதுமைப் பண்டங்களைத் தயார் செய்யுங்கள் என்று நாம் சொல்லலாம்.

காவல் துறையைப் பொறுத்தவரை, மிகுந்த வேதனையான பல நிகழ்ச்சிகள் நாட்டிலே நடந்துகொண்டிருக்கின்றன. உதாரணமாக, நம்முடைய சென்னை நகரத்தில் ஏகாம்பரம் என்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய முக்கியமான ஒரு பிரமுகர், நல்ல வசதி உள்ளவர். அதேநேரத்தில், நல்ல மனம் படைத்தவர். அன்னை இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, காமராஜர் போன்றவர்களுடைய பிறந்த நாளில் எல்லாம், அவரே ஏழைகளுக்குச் சேலை, வேட்டி, அதோடு ஏழைகளுக்குக் கண்ணாடி போன்றவற்றையெல்லாம் அவருடைய சொந்தப் பணத்திலிருந்து வழங்கக்கூடிய பெருந்தன்மையுடைய மனிதர். அவருடைய மனைவி கடந்த நவம்பர் மாதம் வெளியே போனவர் திரும்பி வரவில்லை. பத்திரிகையில் செய்தி கொடுத்தார்கள். திருவள்ளூர் காவல் நிலையத்தில் ஒரு பிணம் கிடக்கிறது என்று தெரிந்து போய்ப் பார்த்தால், நகை இல்லாமல் அந்தப் பிணம் போடப்பட்டு இருந்தது. கிட்டத்தட்ட நவம்பர், டிசம்பர், சனவரி 3 மாதம் ஆகிறது. இதுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. பட்டப்பகலில் கொலை, காலை 9 மணிக்கு வீட்டைவிட்டு வெளியேறியவர் வரவில்லை. இதற்குக் காரணம்—அவருக்கு வேறு எந்தவிதமான எதிரியும் கிடையாது; எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லாத, நல்ல தர்ம சிந்தனையுள்ள குடும்பம்; ஒரே ஒரு குறை, உடம்பில் நகை போட்டு இருந்தார்; கையில் பணம் வைத்து இருந்தார் என்பதைத் தவிர, வேறு எந்த விதமான குறையும் இல்லாத அந்தத் தாயை அவர்கள் இழந்து, அந்தக் குடும்பமே தவித்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-25

இதேமாதிரி ஏராளமான நிகழ்ச்சிகளை உதாரணமாகச் சொல்ல முடியும். நேரம் கருதி சொல்லவில்லை. இது குறித்து நான் காவல்

துறை அதிகாரிகளிடம் கேட்டேன். ஏன் case-ஐ ஒன்றும் சரியாக கவனிக்கமாட்டேன்கிறீர்கள் என்று பெரிய அதிகாரியைப் பார்த்துக் கேட்டேன். அவர் என்ன சொன்னார் என்றால், இப்போது புதிதாக ஒரு சட்டம் போட்டு இருக்கிறோம். அதாவது 10 cases இந்த மாதம் நடந்தது என்றால், 10 cases லும் F.I.R. போட்டுவிட்டால், 8 Case-ஆவது பிடிக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம் என்றார். அதனால் F.I.R. யாரும் போடுவது கிடையாது என்று சொல்கிறார்கள். இந்தக் குறியீடு மற்ற துறைகளுக்கு இருக்கலாம். வருவாய்த் துறையில் 10 கோப்புகள் பார்க்காவிட்டால், உனக்கு fine என்று சொல்லலாம். ஆனால் காவல் துறையில் 10 Cases F.I.R. போட்டதில் 8 cases பிடிக்கவில்லை என்றால், உனக்கு Zero Mark என்று சொன்னால், யாரும் F.I.R. போடமாட்டார்கள். ஆகவே, இதையும் serious ஆகப் பார்க்க வேண்டும்; ஏனென்றால், காவல் துறை என்பது மற்ற எல்லா துறைகளையும்விட தனித் தன்மை வாய்ந்த துறை. அது ரொம்ப தீவிரமாக பார்க்க வேண்டிய துறை. அவர்களுக்குப் பரிசு வழங்கலாம்; promotion கொடுக்கலாமே தவிர, punishment என்று சொல்லி அவர்களுடைய வேலையையே கெடுத்து விடக்கூடாது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

உதகை நீதிமன்றம் பற்றி நேற்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். எனக்கு வந்த தகவல்படி, உதகையிலிருந்து 5 kilometre தூரத்தில் ரொம்பக் கடுமையான காட்டுப் பகுதியில் அந்த நீதிமன்றம் கட்டப்போவதாக அறிந்து மக்கள் எல்லாம் கொதித்துப் போய் இருக்கிறார்கள். இப்போது இருக்கிற இடத்திலேயே 2 Acre-க்கு மேலே இடம் இருக்கிறது; அங்கேயே கட்டலாம் என்று சொல்கிறார்கள். உதகையைச் சேர்ந்த 3 சட்டமன்ற உறுப்பினர்களும், நம்முடைய கொறடா உட்பட கையெழுத்து போட்டு இந்த இடத்திலேயே கட்டுங்கள் என்று எழுத்து மூலம்கூட கொடுத்து இருக்கிறார்கள். அதனால், தயவுசெய்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகையில் புதிய நீதிமன்றம் கட்டுவது குறித்த பிரச்சினை எழுந்தபோது, நானும், உதகை சட்டமன்ற உறுப்பினர், குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகிய 3 பேரும் அங்கு சென்றோம். வழக்கறிஞர்களைப் போராட்டம் நடத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதோடு, இதே இடத்தில் நீதிமன்றம் கட்டுவதில் எங்களுக்கும் ஆட்சேபணை



இல்லை. என்றும் நீதிமன்றத்தால்தான் இந்த இடம் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் கொடுத்த அதே விளக்கத்தைக் கொடுத்துவிட்டு, நீதித் துறையிலிருந்து இது தேவையில்லை என்று சொன்னால், வேண்டுமானால், நாங்கள் உதவி செய்கிறோம் என்றும், மேலும் இந்தப் பழைய இடத்தில் விரிவுபடுத்துவதை நாங்கள் ஆதரிக்கிறோம் என்றும்தான் அவர்களிடத்திலே சொன்னோம். இதுகுறித்து சட்டத் துறை அமைச்சரிடத்திலேயும் அதேமாதிரி பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலேயும் நாங்கள் பேசி இருக்கிறோம். ஆகவே, இப்போது புதிதாக வந்து இருக்கிற தலைமை நீதிபதி, நீலகிரிக்கு முன்னால் சென்று பார்வையிட்டு இருக்கிறார்கள். நீதித் துறையிலிருந்து என்ன சொல்கிறார்களோ, அதேமாதிரிதான் நடப்போம் என்று நாங்கள் உறுதி கூறி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுவதைப் போன்று, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் 5 kilometre தூரத்தில் இல்லை; 3 kilometre தூரத்திற்குக் குறைவாகத்தான் இருக்கிறது. மற்றும், சென்னை உயர் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டு, வழக்கறிஞர் சங்கத்திற்கெல்லாம் தெரிந்துதான் அந்த இடம் நிர்ணயிக்கப்பட்டது. இப்போது வழக்கறிஞர்களிலே சிலர் தங்களுடைய கருத்துக்களை மாற்றிக்கொண்டார்கள். அவர்கள் மாற்றிக்கொண்டார்கள் என்பதற்காக, அரசு மாற்றிக்கொள்ள வேண்டுமா; உயர் நீதிமன்றம் மாற்றிக்கொள்ள வேண்டுமா என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவருக்கு, இதை நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே சொல்கிறேன். இரண்டு பக்கமும் வந்து என்னைப் பார்த்தார்கள். இதிலே அரசியலே பண்ணக் கூடாது. இப்போது கட்டப்போகிற இடத்திலே 10 கோடி ரூபாயை அரசாங்கம் செலவு செய்கிறது. நீங்கள் கேட்கிற பழைய இடத்திற்கு 2 கோடி ரூபாய்தான் செலவு. அதனால் அரசாங்கத்துக்கு ரொம்ப செலவு மிச்சம். ஆனால், நியாயமாக வரவேண்டியது 10 கோடி ரூபாய் செலவு செய்கின்ற அந்த 3 kilometre-ல்தான் வர வேண்டும். இதிலே அரசியலே இருக்கக் கூடாது. இதிலே அரசியல் பண்ணப் பார்க்கிறார்கள். அதற்கு நீங்கள் தயவுசெய்து இடம் கொடுக்காதீர்கள்.

*முற்பகல் 11-30*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்**: தலைவர் அவர்களே, பொது மக்கள் வந்து என்னிடம் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் 2½ ஆண்டு காலமாக சட்ட அமைச்சராக இருக்கிறேன். இதுவரை நீதிமன்றம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து ஒரு மனுவைக்கூட நான் பெற்றதேயில்லை. நீதிமன்றம் அங்கே அமைய வேண்டும், இங்கே அமைய வேண்டுமென்ற பிரச்சினைகளெல்லாம் வழக்கறிஞர் பெருமக்களிடமிருந்துதான் வருகின்றதே தவிர, பொதுமக்களிடமிருந்து அல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மறுபடியும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் பேச அனுமதிக்க வேண்டும். அரசாங்கத்திடம் இதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஏனென்றால் இடத்தைத் தேர்வு செய்தது Judiciary. அதற்குப் பிறகு பிரச்சினை வந்தபோது Bar Council-ல் இருந்தவர்களையெல்லாம் இரண்டு இடங்களுக்கும் நான் அழைத்துப் போய் பார்த்துவிட்டு வந்து, இங்கேயிருந்து 2 நீதிபதிகள் வந்து பார்த்து அவர்கள் தீர்ப்பு சொல்வார்கள் என்று சொன்னார்கள். அந்தத் தீர்ப்பின்படிதான், இந்தப் புதிய இடத்தைத் தேர்வு செய்து, வேலை ஆரம்பித்து நடந்து கொண்டிருக்கிறது. பாதியிலே திரும்பவும் அந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தீர்கள் என்றால் எப்படி? அதற்குப் பிறகு இப்போது தலைமை நீதிபதி போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், நேற்றைக்கு உங்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியன் அவர்கள் அங்கே போய் எங்கள் பொறியாளரைப் பார்த்து you are bluffing, நான் பேசுகிறேன், வாருங்கள் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். எனவே இந்த விஷயத்திலே யார், எப்படியிருந்தாலும், பேரவைத் தலைவர் சொன்னதைப்போல, எல்லா வசதிகளுடன் கூடிய இடம்தான் இது. மேலும் உயர் நீதிமன்றம் ஒத்துக்கொண்ட ஒன்று. அரசு இதில் குறுக்கிடுகிறது என்ற எண்ணத்தை உருவாக்குவது நல்லதல்ல என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, உதகை என்பது ஒரு மலைப் பிரதேசம். அதனால் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதைத் தள்ளிப் போடக்கூடாது என்று நினைக்கிறார்கள். 10 கோடி தேவையில்லை, 2 கோடியிலே கட்டுங்கள் என்று சொல்கிறார்கள். மறுபடியும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடியிலே சார்பு நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்திலே ஒரே ஓர் இடத்தில்தான் சார்பு நீதிமன்றம் இருக்கிறது. பரமக்குடியிலே வேண்டுமென்று கேட்கிறார்கள். எல்லா ஊர்களிலும் நிருபர்கள் குடியிருப்பதற்கு வீடு கொடுத்திருக்கிறீர்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நம்முடைய முதல்வர் நீதிமன்ற வளாகத்தைத் திறக்க வந்தபோது நிருபர்கள் அதுசம்பந்தமாக ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். உடனே உங்களுக்குத் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார்கள். அவர்களுக்கு இதுவரை கொடுக்கப்படவில்லை என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து மதுரைக்குப் புறப்பட்டு வருகின்றபோதே, வண்டியிலேயே அதற்கான கடிதத்திலே ஒப்புதலைத் தந்தார்கள். நானும் அடுத்த நாளே மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துக் கொடுத்திருக்கிறேன். இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் உடனடியாக வழங்கப்படும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் எல்லோரும் உத்தரவு கொடுத்தும்கூட, சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி கொடுக்காததுபோல, அதிகாரிகள் செய்ய மறுக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் சொல்லியும் இந்த இடத்தைத் தர மறுக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சுப்பராயன் அவர்கள் நேற்றைக்கு முந்தைய தினம் பருத்தி நோயைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது தென்னைக்கும் பயங்கரமான நோய் வந்திருக்கிறது. கோவை மாவட்டத்தில் புதிதாக ஒரு நோய் ஏற்பட்டிருக்கிறது. தேங்காய் சிறு குறும்பைகளை வெள்ளைச் சிலந்தி தாக்குகிறது. தேங்காயின் அடிப்பாகத்தைத் தாக்கும்போது

தேங்காய் சிறுத்துவிடுகிறது. குலையிலிருந்து காய் விழுந்து விடுகிறது. இந்தச் சிலந்திப் பூச்சியை ஒழிக்க நம்முடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், அரசும் மிகத் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தேங்காய் என்பது இன்றைக்கு மிக முக்கியமான ஒன்று. தெளிப்பான் ஒன்று கொடுத்திருக்கிறார்கள். 200 ரூபாய் வாடகைக்கு விடுகிறார்கள். 200 ரூபாய் வாடகை விவசாயிகளுக்குத் தாங்காது. அதைப் பாதியாகக் குறைக்க வேண்டும்.

அந்தமானுக்கு நான் போயிருந்தேன். நம்முடைய தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூட அந்தமானுக்குச் சென்றுவந்து, பயண நூல் என்கிற பெயரில் ஒரு நூலை எழுதியிருக்கிறார்கள். நம்முடைய தமிழர்கள் அங்கே பாதிப் பேர் இருக்கிறார்கள். 5 இலட்சம் பேர் அங்கே இருக்கிறார்கள் என்றால் தமிழர்கள் அதில் 2 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு மிகப் பெரிய சோதனை ஒன்றிருக்கிறது. S.S.L.C. வரை பள்ளிகள் இருக்கின்றன. அங்கே ஆங்கிலத்தில் கேள்வி கேட்கப்பட்டிருக்கும். அவர்கள் தமிழில் பதில் எழுத வேண்டுமாம். இதைப் பற்றிக் கேட்டால் மத்திய சர்க்காருடைய உத்தரவு என்று சொல்கிறார்கள். ஆங்கிலத்தில் வினாத்தாள் வரும், தமிழில் பதில் எழுதலாம். இந்தச் சூழ்நிலையின் காரணமாக தமிழர்கள் பரிட்சையில் தேர்வு பெற முடியாத மோசமான நிலையில் உள்ளார்கள். நம்முடைய தமிழக அரசு அங்கிருக்கிற தமிழர்களுடைய நலனைக் கருதி, இதிலே கவனம் செலுத்தி, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தமிழிலேயே அவர்களுக்கு வினாக்கள் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அதோடு அவர்கள் அங்கிருந்து கப்பலில் வருகிறார்கள். கப்பல் மாதத்திற்கு ஒரு தடவை, இரண்டு தடவைகள்தான் வருகிறது என்று சொல்கிறார்கள். அங்கு எல்லோரும் கூலி வேலை செய்து பிழைக்கக் கூடிய ஏழை மக்கள். அவர்கள் கப்பலில்தான் வரமுடியும். Plane-இல் வர முடியாது. இங்கு வந்தால் துறைமுகத்திலிருந்து வெளியே வருவதற்குள் அவர்கள் கொண்டு வந்த பொருட்களையெல்லாம் பறிகொடுக்க வேண்டியிருக்கிறது என்று குறைபட்டுக் கொள்கிறார்கள். எனவே நாம் ஏன் சென்னைக்கும் போகிறோம் என்று வருத்தப்படுகிறார்கள். ஆகவே அப்பிரச்னையைத் தீர்க்க ஒரு வழி காண வேண்டும். அவர்கள் இங்கே வந்து தங்குவதற்கான அப்பிரச்னையைத் வாய்ப்பளிக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*முற்பகல் 11-35*

சிறுபான்மைப் பள்ளிகளில் B.Ed. படித்தவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு அரசு உத்தரவு கொடுத்தும்கூட, அவர்களுக்குச் சம்பளம் வருவதில்லை என்று சொல்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாக்காளர் அட்டை. பல இடங்களில் Photo எடுக்கவில்லை. எப்படி driving licence கொடுக்கிறோமோ அதேமாதிரி Mobile Van மாதிரி வைத்து ஊர் ஊராகப் போய், Photo எடுத்து அட்டைகளையெல்லாம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமான ஒன்று. நம்முடைய சென்னை மாநகர Mayor அவர்கள் இங்கு இருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் 26ஆம் தேதிக்குப் பிறகு மாடு வைத்திருக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். உத்தரவு பிறப்பித்து 5, 6 மாதம் இருக்கும். இருந்தாலும்கூட, நான் போய் மாடு வளர்ப்பவர்களையெல்லாம் பார்த்தேன். அவர்கள் சென்னையில்தான் இருக்கிறார்களா என்பது எனக்கே சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால், அவ்வளவு மோசமான சூழ்நிலையில் மாடுகளும், சகதியும், சாணியும் அவர்களுடைய குடும்பமும் ஒன்றாக இருக்கின்றன. படிப்பே கிடையாது. கையெழுத்து போட ரொம்பப் பேருக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு மோசமான சூழ்நிலையில் வாழ்கின்ற அந்த மக்களுக்கு ஒரு நல்ல வசதியான இடத்தை ஏற்பாடு செய்துவிட்டு பிறகு அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக சாத்தான்குளம் தொகுதி, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி நாடார் தொகுதியில் செய்துங்கநல்லூர் என்ற இடத்தில் நேற்று லாரி விபத்து ஏற்பட்டு, 19 தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இவ்வளவு நேரம் பேச வாய்ப்புக் கொடுத்த நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது இதுவரையிலே இந்த அவையில் 38 உறுப்பினர்கள், ஏறத்தாழ 9 மணி நேரம் விவாதம் நடத்தி, அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகளின் அடிப்படையில்,

எல்லாவற்றுக்கும் அல்ல, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

இந்த உரை குறித்து இங்கே கருத்துக்களைச் சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன செய்திகளை இந்த அரசு, தான் கொண்டுள்ள பண்பாட்டின்படி நிச்சயமாக அலட்சியப்படுத்தாது என்பதைத் தெளிவாக முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றையெல்லாம் தொகுத்து, இங்கே திரு. திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்குத் தேவையான ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து, அதற்கேற்ப இந்த அரசு தன்னுடைய செயல்முறைகளை வகுக்கும், இயன்ற வரையிலே நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் என்பதையும் நான் முதலிலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன். பாராட்ட வேண்டியவற்றை பாராட்டி, இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றையெல்லாம் தீர்த்து வைக்க வேண்டுமென்ற முறையிலே ஆக்கபூர்வமாகப் பல உரைகள் இங்கே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-40

எடுத்த எடுப்பில், பொத்தாம் பொதுவாக இது என்ன உரையா என்று கேட்கின்ற அளவில் உள்ளேயும் சிலர், வெளியிலேயும் சிலர் இந்த உரை பற்றிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆளுநர் உரை வெறும் காகிதம், இது கவைக்கு உதவாது என்றெல்லாம்கூட கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. பொறுப்பாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அல்ல. ஆனால், பொறுப்பிலே இருந்தவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்கள்.

இந்த உரையிலேதான், நீண்டகாலமாக நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் வலியுறுத்தி வருகின்ற, விவசாயிகளுடைய குறைந்தபட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத் தொடரிலே வைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மிக முக்கியமான சமுதாயத் தொண்டாகக் கருதப்படுகின்ற மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும், சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை



அகற்ற சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆண்டைக் கணினி ஆண்டாகவே கொண்டு இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு, அதற்கேற்ப அண்மையில் வெற்றிகரமாக நடைபெற்ற தமிழ் இணைய மாநாடு குறித்து பாராட்டும், வாழ்த்தும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒன்றே ஒன்றுதான்—எல்லா உறுப்பினர்களுக்கும் கணினி வழங்க வேண்டும் என்பதுதான்—சற்று சிக்கலான விஷயம். ஏனென்றால், கணினியும் வழங்கி, கற்றுத் தருகின்ற பயிற்சியும் அவர்களுக்குக் கொடுத்து, அதைப் பொறுமையோடு இருந்து நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள் கற்றுக்கொள்வார்களானால், நிச்சயமாக அடுத்தத் தேர்தலிலே, அவர்களுடைய தொகுதிகளிலே அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதை இப்போதே என்னால் உறுதியாகக் கூற முடியும். ஏனென்றால், அவ்வளவு அக்கறை கணினியிலே அவர்களுக்கு வருமேயானால், எதிர்க்கட்சித் தலைவரைவிட நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் வரி வடிவங்கள் ஒரே சீராகத் தொகுத்துத் தரப்படுவதற்கும், தமிழ் கணினி விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதற்கும் 'தமிழ் இணையம் 99' என்று நடத்தப்பட்டு, இந்த உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளில், தமிழர்கள் வாழுகின்ற நாடுகளில் இருந்து வந்துள்ள தமிழ் மேதைகள் அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி,—ஒன்றுபட்ட கருத்து உருவாகுமா என்று எதிர்பார்த்த நிலையில் ஒன்றுபட்ட கருத்து உருவாகிட—Internet என்று சொல்லப்படும் தமிழ் இணையத்தில் இனிமேல் வேறு மொழிகள் இடம் பெற்றாலும்கூட தமிழ் மொழி தலையாய இடம் பெறும்—உலகத்தில் எந்தக் கோடியில் இருக்கின்ற தமிழனும் தமிழ் வாயிலாகச் செய்திகளை அறிந்துகொள்ள முடியும், தகவல்களைப் பெறமுடியும் என்ற நிலையை நாம் உருவாக்கவிருக்கிறோம். இந்தியாவிலேயே இந்த முயற்சியை முதன் முதலாகத் தொடங்கி, அதிலே வெற்றி காணவிருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை எண்ணும்போது நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

தகவல் தொடர்பு என்பது இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், ஒரு காலத்தில் ஆப்ரகாம் லிங்கன் கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துத்தான் லண்டனுக்கே தெரிய வந்தது என்பார்கள். அப்போது தந்தி என்ற சாதனம் இருந்தும்கூட லிங்கன் கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துத்தான் லண்டனுக்கே வந்து சேர்ந்ததாகச் சொல்லுவார்கள். ஆனால், இன்றைக்கு அப்படி அல்ல, ஆஸ்திரேலியாவில் ஆடுகின்ற கிரிக்கெட் ஆட்டத்தில் இப்போது யார் out ஆனார்கள் என்பதை உடனடியாக, நேரிலேயே தெரிந்துகொள்ளுகின்ற அளவுக்குத் தகவல் தொடர்பு பெருகியிருக்கின்ற விஞ்ஞான உலகத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இது மேலும் வளர்ந்து, உலகம் என்பது ஒரு சிறிய குக்கிராமம், குக்கிராமத்தைவிட இன்னும் சிறிய அளவுக்குச் சுருங்கிவிட்ட ஒரு வடிவம் என்ற நிலையை எதிர்காலத்திலே இந்தத் தகவல் தொடர்பு உருவாக்க இருக்கிறது. அந்த நேரத்திலே நம்முடைய தமிழ் அதிலே ஆக்கம் பெற வேண்டும், இடம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பெருமுயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

இந்த உரையிலே மகளிருக்கான சிறு வணிகக் கடன் திட்டம் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு வரியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனுடைய விளைவு, பயன் மகத்தானதாக எதிர்காலத்திலே இருக்கத்தான் போகிறது. மகளிர் தாங்கள் நடத்த விரும்புகின்ற சிறுசிறு தொழில்களுக்காகக் கடன் வாங்குவதற்கு வங்கிகளுக்குச் சென்றால், அதிக வட்டி தர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அல்லது, யாராவது வியாபாரிகளிடத்திலே, வட்டிக்கடைக்காரர்களிடத்திலே சென்று கடன் பெற்றால், அதற்கு அளவுக்கு மீறிய வட்டி தர வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கணக்கிலேகொண்டு, கூட்டுறவு வங்கிகள் மூலமாக, ஒரு ரூபாய் வட்டிக்கு, 500 ரூபாய் முதல், 2000, 3000 ரூபாய் வரை சிறு கடைகள், காய்கறி வியாபாரம் போன்ற சிறிய வியாபாரங்களில் ஈடுபடுகின்ற மகளிருக்குக் கடன் தருவதற்கான ஒரு வழிவகை உருவாக்கப்பட்டு, சென்னை மாநகரத்திலே, முதலில் சேப்பாக்கத்திலே இது தொடங்கப்பட்டு, அண்ணா நகரில் அது தொடர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் இந்தச் சிறு வணிகக் கடன் திட்டம் மகளிருக்காகப் பரப்பப்பட இருக்கிறது. மாநகரங்களுக்கு மாத்திரமில்லாமல், எல்லா நகரங்களிலும் இந்தத் திட்டத்தை நாம் பரவலாக நடத்த இருக்கிறோம். நகரங்களில் முடிவுற்ற பிறகு, கிராமங்களிலேகூட இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. எனவே,



இந்தத் திட்டம் மகத்தானதாக, எல்லோராலும் பாராட்டக்கூடியதாக, இந்தியாவிலே முதன்முதலாகத் தமிழகத்திலே உருவாக்கப்பட்ட திட்டமாக அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

*முற்பகல் 11-45*

அதைப்போல, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், ஏற்கெனவே இருக்கின்ற மாவட்டங்கள் அன்னியில், மேலும் ஏழு மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது. பத்தாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலேதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. விரைவுபடுத்தப்பட்ட தோட்டக்கலைப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காவிரி கழிமுகப் பகுதிகளிலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலும் தூர்வாரும் பணிக்கு அதிக நிதி எதிர்காலத்திலே ஒதுக்கப்படும் என்றும் இந்த உரை கூறுகின்றது. சென்னை, தரமணியில் 320 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்திலான கணினி மென்பொருள் பூங்கா (Software Park) அமைகிறது என்ற செய்தியையும் இந்த உரைதான் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தொழில் வளர்ச்சியில் 1996 ஏப்ரலில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 1998 அக்டோபரில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி இருக்கின்ற செய்தியையும் இந்த உரைதான் விளக்கியிருக்கிறது. ஆயிரக்கணக்கான மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் பற்றிய குறிப்புகளும் இந்த உரையிலே இடம்பெற்றிருக்கிறது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கும், நகர்ப்பகுதி அமைப்புகளின் வசதிக்கும் கணிசமான நிதி உதவி கிடைத்திட, தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கு ஆரச் சாலைகளை அகலப்படுத்தி, வலுவூட்டும் பணி, முக்கியமான சந்திப்புகளில் 10 சிறு மேம்பாலங்கள் கட்டும் பணி, பெருநகர்ப் பகுதிக்கான வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப் பணி இந்த உரையிலே இடம்பெற்றிருக்கிறது. ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரப் பகிர்வு தரப்படும் என்ற உறுதியும் இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறது. நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய அனைவரும் பாராட்டக்கூடிய இந்தத் திட்டங்களை மேலும் மேம்படுத்துவோம் என்ற உறுதிமொழியும் இந்த உரையின் வாயிலாக

வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்குவதை மேம்படுத்த *500* கோடி ரூபாயிலே திட்டம் தயார் என்று இந்த உரையிலே அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் ஆஸ்திரிய அரசின் உதவியோடு கடல்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம் வகுக்கப்படுவதையும் இந்த உரை எடுத்துக்காட்டுகிறது.

*2-1-1999* அன்று பெரியபாளையத்தில் பணி தொடங்கப்பட்ட *106* பாலங்கள் அன்னியில், மாநிலம் முழுவதும் *360* கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு *104* பாலங்கள் கட்டுவதற்கான பணியும் அண்மையிலே தொடங்கப்பட்டிருக்கின்றது. உலக வங்கி நிதியுதவியோடு தமிழ்நாடு சாலைப் பகுதித் திட்டம் இந்த உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க சமத்துவபுரங்கள் தொடரும் என்ற அறிவிப்பும் இந்த உரையில் இடம் பெற்றிருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்ற செய்தியும் இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி கற்கும் வயதடைந்த அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் வகையில், தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அந்தக் குறிக்கோள் நிறைவேற அரசு பாடுபடும் என்ற சூளுரையும் இந்த உரையின் வாயிலாக எடுக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள், தொடர் முயற்சிகள் இவையும் ஆளுநர் உரையிலே இடம்பெற்றிருக்கின்றன. நேர்மையான, ஒளிவுமறைவற்ற மற்றும் பொறுப்புள்ள நிர்வாகத்தை ஏற்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும் நீதிபதி இராமானுஜம் குழு பரிந்துரைகள் செயலாக்கம்பெற இந்த அவையிலேயே அந்த அறிக்கை, அரசினுடைய குறிப்புகளோடு விரைவில் இந்தக் கூட்டத் தொடரிலே வைக்கப்படும் என்று எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11-50*

இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் தொடக்கத்திலேயே தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கவில்லை என்றும், தமிழக மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்றும் குறிப்பிட்டார்.



*1996-97*-ல் தமிழகத்தினுடைய தனிநபர் சராசரி வருமானம் *2918* ரூபாய். *1997-98*-ல் தமிழ்நாட்டினுடைய தனிநபர் சராசரி வருமானம் ரூ.*3057*ஆக உயர்ந்துள்ளது. புள்ளியியல் துறை மதிப்பீட்டின்படி இந்த ஆண்டும் தனிநபர் சராசரி வருமானம் ரூபாய் *3164*ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தனிநபர் சராசரி வருமானம் *1980-81*ஆம் ஆண்டு விலைப் புள்ளிகளைக் கொண்டு மதிப்பிடப்பட்டதாகும். *1991-92*ஆம் ஆண்டு விலைப் புள்ளிகளைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனிநபர் வருமானம் மேலும் அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது நம்முடைய மாநிலம் என்பதை இங்கே எடுத்துக் கூறினேன். ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உரையாற்றும்போது, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொழில்கள் எல்லாம் என்ன ஆயிற்று என்று சில தொழில்கள் தொடரப்படாமலே முடிந்துவிட்டதை எடுத்துக்காட்டினார்கள். குறிப்பாக Pilkington Glass தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். Market-ல் போதிய தேவை (demand) இல்லை என்று கணித்த காரணத்தால், Pilkington நிறுவனம் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது. இதற்கு நான் பொறுப்பாளி அல்ல. அவர்களே market நிலவரத்தை அறிந்து அதைக் கைவிட்டுவிட்டார்கள். அதற்குக் காரணம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த செயின்ட் கோபெயின் (St. Gobain) என்ற நிறுவனம் இந்த கிளாஸ் தொழிற்சாலையை வேகமாக உருவாக்கி வருகிறது. பெரிய அளவிலே அத்தொழிற்சாலையைத் தமிழகத்திலேயே அது உருவாக்கி வருகிற காரணத்தினால் அவர்கள் அந்தத் தொழிற்சாலையை கைவிட்டுவிட்டார்கள்.

கும்ஹோ டயர் (Kumho Tyres) தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். அவருக்கும் தெரியும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். பொருளாதாரத்திலே ஏற்பட்ட மந்த நிலை எந்த அளவிற்குக் கொரியாவை தாக்கியது என்று நன்றாகத் தெரியும். இது தென்கொரியாவிலே உள்ள ஒரு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த தொழிற்சாலையாகும். இந்தோனேஷியாவிலே தொடங்கி ஹாங்காங் போன்ற இடங்களில் பரவி, கொரியா வரையிலே வியாபித்த இந்தப் பொருளாதார மந்த நிலையினால், தென்கொரியாவிலே உள்ள இந்தப் பிரச்சினையின் காரணமாக இந்த கும்ஹோ டயர் (Kumho Tyres) நிறுவனம் தனது திட்டத்தை அடியோடு ரத்து

செய்துவிடவில்லை, தள்ளிப் போட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நார்க்ஸ் ஹைடிரோ, (Norx Hydro) உலக அளவில் பி.வி.சி.-க்கு (P.V.C) Market குறைந்துள்ளதால் அதுவும் தனது திட்டத்தைக் கைவிட்டுவிட்டது. உலக அளவிலே பி.வி.சி. (P.V.C.) பைப்பிற்கு Market நிலவரம் குறைந்துவிட்ட காரணத்தால் அதுவும் தன்னுடைய திட்டத்தைக் கைவிட்டுவிட்டது. ஆனால் அதேநேரத்தில் Mitsubishi, ஹூண்டாய் Hyundai ஆகிய நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த மாமன்றம் மிக நன்றாக அறியும் என்று கருதுகிறேன். Ford நிறுவனம் அக்டோபர் திங்களில் தனது உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது.

கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தின்கீழ் (குறுக்கீடு) நான பேசி முடித்த பிறகு கேட்கலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு கேளுங்கள். திரு. சுந்தரம், இப்போது உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தின்கீழ் தற்போது சுமார் !41 Megawatt மின்சாரம் தயாரிக்கபபட்டு வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். வரும் ஆண்டுகளில் மேலும் சுமார் 100 Megawatt மின்சாரம் தயாரிக்கப்படும் என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழ்நாட்டைப் பார்த்தால், Centre for Monitoring Indian Economy என்கின்ற பெரிய நிறுவனம், மத்திய அரசினுடைய புள்ளிவிவரங்களையெல்லாம் தருகின்ற ஒரு பெரிய நிறுவனம், Centre for Monitoring Indian Economy. Survey of Investment Projects, May, 1996—அதன்படியும், அதற்குப் பிறகு எடுத்த surveyன்படியும் உள்ள குறிப்புகளை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகின்றேன்.



மே 1996-ல் Trends in total Investment by States என்ற தலைப்பில் கர்நாடகாவில் ஒரு இலட்சத்து பதினோராயிரத்து நானூற்று அறுபத்தி நாலு கோடி முதலீடு; (Investment) குஜராத்தில் ஒரு இலட்சத்து மூவாயிரத்து நானூற்று அறுபத்தொரு கோடி Investment; ஒரிசாவில் ஒரு இலட்சத்து ஆயிரத்தொன்பது கோடி Investment; மராட்டியத்தில் ஒரு இலட்சத்து ஐந்நூற்றுப் பதினாறு கோடி Investment; தமிழ்நாடு தொண்ணூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி Investment, மே-1996-ல்.

பிறகு, உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் இவை எல்லாம் இதற்கு அடுத்துதான் வருகின்றன. ஆறாவது, ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது இடங்களில் இவை எல்லாம் வருகின்றன. இது 1996 ஆம் ஆண்டில் மே மாதத்தினுடைய நிலைமை. அப்போது, தமிழ்நாடு தொண்ணூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி முதலீட்டிலே இருந்தது.

ஜனவரி 1999-வரை Investment என்பதற்கான Rankஐ பார்த்தால், மகாராஷ்டிரம் ஒரு இலட்சத்து ஐம்பத்தொன்றாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று எட்டு கோடி Investment; தமிழ்நாடு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தியேழு கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், இரண்டாவது இடத்திற்கு தமிழ்நாடு வந்துவிட்டது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றோம்.

இதிலே என்ன வித்தியாசம் என்றால் மகாராஷ்டிரத்திலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று எட்டு கோடி Investment. தமிழ் நாட்டிலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தேழு கோடி Investment. அது 11.52 சதவிகிதம் மகாராஷ்டிரா; தமிழ்நாடு 11.49 சதவிகிதம். அதாவது. 0.03 அவ்வளவுதான் வித்தியாசம். மராட்டியத்தோடு வித்தியாசம். 0.03% தான். ஒரு சதவிகிதம் கூட அல்ல 0.1 சதவிகிதம் கூட அல்ல. நாம் இரண்டாவது இடத்திற்கு வருகிறோம். அதேநேரத்தில் மற்ற மாநிலங்கள் பற்றி நான் சொல்லவில்லை. குஜராத் மூன்றாவது இடத்திற்குப் போய் விடுகிறது. நாம் இரண்டாவது இடத்திற்கு வந்தது மாத்திரமல்ல, மே 1996ஆம் ஆண்டு முதலீட்டிற்கும் ஜனவரி 1999க்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்றால்—மராட்டியத்திலே ஐம்பத்தோராயிரத்து எண்பத்திரண்டு கோடி, தமிழ்நாட்டிலே அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தி ஏழு கோடி. மராட்டியத்திலே 21.03%. தமிழ்நாடு 24.94%. 3.9% அதிகம். எனவே, இந்த வித்தியாசம்

என்ற வகையிலே கணக்கிட்டால் தமிழ்நாடு முதலிடத்திற்கே வந்துவிட்டது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அகில இந்தியாவினுடைய மொத்த முதலீடு என்று எடுத்துக்கொண்டால், ஜனவரி 1999-இல் பதின்மூன்று இலட்சத்து பதினைந்தாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று இரண்டு கோடி. அதிலே தமிழ்நாட்டிற்கு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தியேழு கோடி. இதே நிலை 1996-லே பார்த்தால் அகில இந்தியாவில் பத்து இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்துமூன்று கோடி; அப்பொழுது தமிழ்நாட்டில் தொண்ணூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி, அதாவது 8.45 சதவிகிதம். இரண்டரை ஆண்டுகளிலே உயர்வு இந்திய அளவில் இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தொன்பது கோடி; தமிழ்நாட்டிலே அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தியேழு கோடி. இரண்டு இலட்சம் அகில இந்தியாவில் அதிகம். தமிழ்நாட்டிலே அறுபதாயிரம் கோடி அதிகம். இது 24.94 சதவிகிதம் என்பதையும் நாம் எண்ணிப்பார்த்து பெருமையடையலாம்.

தொழிற்சாலைகள் வளருகின்றன, தொழில்கள் வளருகின்றன என்று சொல்கிற நேரத்தில் சில தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றனவே என்கின்ற ஆதங்கமும் நம்முடைய உறுப்பினர்களுக்கு இல்லாமல் இல்லை. இவர்கள் எல்லாம் இங்கே இதைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கின்றார்கள். மூடப்பட்ட அல்லது மூடப்படுகின்ற தொழிற்சாலைகளுக்காக இந்த அரசும் வருத்தப்படுகிறது, கவலையைத் தெரிவிக்கிறது. ஆனால், பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது இயற்கை. அதற்காக மூடப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டது சரிதான் என்று நான் வாதிக்க விரும்பவில்லை. அதற்குப் பின்னாலே இருக்கின்ற தொழிலாளர்களுடைய வயிறு என்னுடைய நினைவுக்கு வருகிறது, அவர்களுடைய வாழ்க்கை என்னுடைய நினைவுக்கு வராமல் இல்லை. இருந்தாலும், வாழை மரம் வளர வளர, பிறகு கன்று வளர வளர ஏற்கெனவே இருந்த வாழை போய்விடுவதைப்போல தமிழ்நாட்டிலே சில தொழில்கள் நலிவடைந்து இருக்கின்றன என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இதற்குக் காரணம் என்ன என்று பார்த்தால் நீண்ட காலமாகவே இயங்காமல் இருக்கிற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் 43. இவை பெரும்பாலும் நிதி நெருக்கடி, பங்குதாரர்களுக்குள் மன வேறுபாடு ஆகிய காரணங்களினால் மாத்திரமே இயங்காமல் உள்ளன. இவை தொழிலாளர் பிரச்சினையால்



மூடப்பட்டவை அல்ல. அதேபோல், தொழில் தகராறு சட்டம் பிரிவு 25(0)-ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டு, மூடப்பட்ட நிறுவனங்களும் எதுவும் இல்லை. மேற்கூறிய 43 நிறுவனங்களில் கலைப்பு அதிகாரி (Official Liquidator) முன் நிலுவையில் உள்ளவை 11 நிறுவனங்கள் ஆகும். தொழில் நிதி மற்றும் புனரமைப்பு வாரியம் (B.I.F.R./ A.A.I.F.R.) முன்பு நிலுவையில் உள்ளவை 8 நிறுவனங்கள் ஆகும். 2 நிறுவனங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தாததால், அந்த நிறுவனம் இவற்றைக் கையகப்படுத்தியுள்ளது. 3 நிறுவனங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே வழக்கு நிலைவையிலே உள்ளது. 12 நிறுவனங்கள் மூடுதல் பிரச்சினை தொடர்பாக தொழிற் சங்கங்கள் எழுப்பிய தாவாக்களில் அரசு நீதிமன்றத் தீர்ப்புக்கு விட்டு, ஆணை பிறப்பித்துள்ளது.

நண்பகல் 12-00

இதைத் தவிர, சென்னை B & C Mill கதவடைப்புப் பிரச்சினையை அரசு நீதிமன்றத் தீர்ப்பிற்கு அனுப்பியபின், தமிழக அரசின் அறிவுரைப்படி 28-3-1998 அன்று தொழில் தகராறு சட்டம், பிரிவு 12 (3)ன்கீழ் ஆலை மீண்டும் திறப்பது குறித்தும், தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்ல விருப்பம் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை குறித்தும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் அமலாக்கம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இயங்காமல் உள்ள இத்தகைய 43 நிறுவனங்கள் தவிர, தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் இயங்காமல் உள்ள 19 நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றில் 5 நிறுவனங்களின் பிரச்சினை அரசால் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை பற்றி திரு. ஞானசேகரன் நேற்றையதினம் குறிப்பிட்டார்கள். அந்த நூற்பாலை புனரமைப்பு செய்யப்பட அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆலை திறப்பது குறித்து கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை திரு. ஞானசேகரன் அவர்களுக்கு ஆறுதலாகக் கூறிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இயங்காமல் உள்ள நிறுவனங்கள் அனைத்துமே நிதி நெருக்கடி காரணமாக மட்டுமே மூடப்பட்டு, இயங்காமல் உள்ளன. அது தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை. இவற்றில் தொழிலாளர் பிரச்சினை எதுவும் இல்லை. நிதி நெருக்கடி காரணமாகவே

மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், அரசுத் தரப்பிலே நிதி ஆதாரத்திலும், இப்போது உள்ள சூழ்நிலையிலும் அரசு அந்த அளவிற்கு அகலக் கால் வைப்பதற்குத் தயாராக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே கூறியபடி இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் கலைப்பு நடவடிக்கையிலும், B.I.F.R. மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின்முன் வழக்குகள் நிலுவையிலே உள்ள நிலைமையிலும், இவற்றின்மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ள நிறுவனங்களின் நிர்வாகத்தினர் B.I.F.R. முன்பு எடுத்துச் சென்று, புனரமைப்புத் திட்டம் தயார் செய்து, ஒப்புதல் பெற்று, அதற்குரிய நிதி மூலதனத்தை உரிய நிதி நிறுவனங்கள் அல்லது வங்கிகளிடமிருந்து பெற்று ஆலையைத் திறந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மூடப்பட்டு இயங்காமலேயே உள்ள நிறுவனங்களைத் திறந்து நடத்த வேறு ஏதேனும் வாய்ப்பு உள்ளதா என்பதை ஆராய தொழிலாளர் நலத் துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர், மற்றும் தொழிற் சங்கத் தரப்பினர் மற்றும் அரசு அதிகாரிகளோடு மண்டல வாரியாக கூட்டங்கள் நடத்தி விவாதித்துள்ளார்கள். இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த தொழிற் சங்கங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதிகாரிகள் முன்னிலையிலேயே பேச்சுவார்த்தை, நடவடிக்கைகளும் தொடரப்பட்டன. ஆனாலும், சுமுக முடிவு எதுவும் இதுவரையிலே ஏற்படவில்லை.

அரக்கோணம் எஃகு நிறுவனத்தைப் பொறுத்தவரை, அது நலிவடைந்து, மூட வேண்டிய நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, அந்த ஆலையிலே வேலை செய்துவந்த 722 தொழிலாளர்கள் தானாகவே முன்வந்து, தன்னிச்சையாக ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் (Voluntary Retirement Scheme) செல்வதற்கு ஒப்புதல் தெரிவித்ததன் பேரில், அவர்களுக்கு 16,76,30,681 ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகள்பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள்கூட அதைப்பற்றி இங்கே எடுத்துக்காட்டினார்கள். கடந்த ஆட்சியில் திட்டமிட்டு தரம் குறைந்த பஞ்சை அதிக விலை கொடுத்து வாங்கி பல கோடி ரூபாய் ஊழல்



நடைபெற்றதால் கூட்டுறவு நூற்பாலைகளுடைய நிதி நிலைமை மிகவும் சீர்கெட்டது. தரமற்ற நூலைத் தயாரித்து விற்க முடியாமல் தத்தளிக்கும் நிலைமைக்கு கூட்டுறவு நூற்பாலைகள் தள்ளப்பட்டன. பணம் இல்லாமல் காசோலை வழங்கி, கையிலே பணம் இல்லாமல் காசோலை வழங்கி, அதன் காரணமாக நிர்வாக இயக்குநர்கள் கைது செய்யப்பட்ட நிலை எல்லாம் கடந்த ஆட்சியிலே நடைபெற்று, கூட்டுறவு நூற்பாலைகள் முடமாக்கப்பட்டதை நான் இங்கே வேதனையோடு நினைவுகூர்கின்றேன்.

பிற்பகல் 12.05

நலிவடைந்துள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 18 , கூட்டுறவு நூற்பாலைகளில் 16 ஆலைகளுக்கு ரூ.185.25 கோடி மதிப்பில் புனரமைக்கும் திட்டத்தை ஏற்று, அரசு ஆணை வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், உடனடியாக 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மட்டும் தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD) புனரமைப்புத் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. அரசு 5 ஆலைகளுக்கு ரூ.2.23 கோடி விளிம்புத் தொகை (Margin Money) அளித்துள்ளது. இந்த ஆலைகளுக்குத் தேவையான பஞ்சு வகைகள் Tamil Nadu Spinning Mills Federation (TAN SPIN) மூலம் வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகள், சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைப் பைசல் செய்யும் பொருட்டு ரூ. 7.11 கோடி வழங்க அரசாணை பிறப்பித்து, அதிலே ரூ.1.7 கோடி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் கடன் எல்லாம் எப்போது வாங்கப்பட்டது? கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட தொல்லைகளை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் அவர்கள்மேல் பரிதாபப்பட்டு, அவர்களுடைய நிலைகளை எனக்கு அடிக்கடி உணர்த்துகின்ற பணியில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கூட ஈடுபட்டிருந்தார். இவற்றையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இந்தப் பணிகள் அரசின் சார்பாக முடுக்கிவிடப்பட்டன. ICICI, IFCI, IDBI போன்ற நிதி நிறுவனங்களுக்கு இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் செலுத்த வேண்டிய ரூ.4.4 கோடியை அரசுதான் வழங்கியது. கூட்டுறவு நூற்பாலைகள் தனியார் பஞ்சு

வியாபாரிகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் முதல் தவணையாக ரூ.1.65 கோடியையும் இந்த அரசுதான் வழங்கியது. மீதியை விரைவிலே வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடைபெற்று எவ்வளவு குறைத்துக் கொள்ளலாம் என்று ஒரு settlement-க்கு வந்து, அப்போது நிர்ணயிக்கப்பட்ட தொகையிலே ரூ.1.65 கோடியை அரசு வழங்கிவிட்டது. மீதியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய இன்னல்களுக்கிடையிலேகூட இந்த அரசு திட்டங்களை, நிதி நிர்வாகத்தைச் சரிவர நடத்தி வருகிறது என்பதற்கு யாரும் நமக்கு நற்சான்றிதழ் அளிப்பதற்கு முன்பாக மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்ற திரு. கே.சி. பந்த் அவர்கள்—கோவிந்த வல்லப பந்த் அவர்களுடைய திருக்குமாரன்—இப்போது திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்றார்.

அவர் மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் கே.சி. பந்த். பிப்ரவரி 19-ஆம் தேதி, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்பொழுது பின்வருமாறு கூறுகின்றார்:

"Projection of a plan, far beyond what the resources would warrant, leads to distortion of priorities and to thin spread of resources. I must hasten to add that a number of States are exceptions to this, for example, Goa, Gujarat, Karnataka, Kerala, Maharashtra and Tamil Nadu. Their prudence in deciding the Plan size and realising it, I am sure, makes a better impression on the public than announcing large plans and not realising them." அதாவது நிதியாதாரத்திற்கு அதிகமாக திட்டத்தின் அளவை நிர்ணயிப்பது முன்னுரிமைத் திட்டங்களைப் பாதிக்கும். மேலும், நிதியாதாரங்களைச் சிதறச் செய்துவிடும். அப்படி இல்லாமல் சில மாநிலங்கள் இருக்கின்றன. உதாரணமாக, கோவா, குஜராத், கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடலாம். பெருமளவிலான திட்டங்களை அறிவித்துவிட்டு அவற்றைச் செயல்படுத்தாமல் இருப்பதைவிட விவேகமான முறையில் திட்டத்தின் அளவை நிர்ணயம் செய்து அதை நிறைவேற்றுவதுதான் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் என்று கூறி, தமிழ்நாடு அப்படித்தான் நிதி நிர்வாகத்தை, Financial Management-ஐ நடத்துகிறது என்பதற்கான நற்சான்றை அவர் வழங்கியிருக்கிறார். (மேசையைத்



தட்டும் ஒலி) ஆனால் மேற்கு வங்கத்திலேயிருந்து வந்த ஓர் அம்மையார் மதுரையிலே ஒன்றும், மதராஸ் வீதியிலே ஒன்றுமாகப் பேசியதை நீங்கள் அறிவீர்கள். மதராஸ் என்று நானே சொல்வதற்காக மன்னிக்கவும். அடுக்குத் தொடராகச் சொல்லிவிட்டேன். சென்னையிலே ஒன்றுமாகப் பேசுகிறார்கள். சென்னையிலே அன்னையைச் சந்தித்த பிறகு அவர்களுடைய விமர்சனம் அதுவாக அமைந்தது.

பிற்பகல் 12-10

தமிழ்நாட்டினுடைய நிதி நிர்வாகத்திற்கு திட்டக் குழுவினுடைய துணைத் தலைவரே இந்தச் சான்று வழங்கிய பிறகு, [illegible] மமதா போன்றவர்கள் வந்து ஏதோ பேசிவிட்டுப் போனார்கள் என்பதற்காக நாம் கவலைப்படத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** அன்னை என்று சொன்னால் இந்திரா காந்தியைத்தான் குறிக்கும். ஆனால் சாதாரணமானவர்கள் எல்லாம் அன்னை ஆக முடியாது.

**திரு. கே. சுப்பராயன்:** அன்னை கஸ்தூரிபாய் இருக்கிறார்கள்.

**திரு. ச. அழகிரி:** அன்னை என்று சொல்வதற்குப் பதிலாக அக்காவைச் சந்திக்கச் சென்றார்கள் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் அக்கா என்று சொன்னால் பொன்னம்மாள் அம்மாவைக் குறிப்பதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. (சிரிப்பு)

நம்முடைய திரு. ஜி.கே. மணி அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இங்கே உரையாற்றும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான் அப்போதே விளக்கம் அளித்தேன். இருந்தாலும் விரிவாக அதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 108 ஜாதிகளைச் சேர்த்துவிட்டு, அதிலே 20% கொடுத்தால் நியாயமா என்ற ஒரு கேள்வி; இதை திரு. மணி மாத்திரம் அல்ல; அந்தக் கட்சியினுடைய தலைவர் அன்புக்குரிய நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் இந்தக் கேள்வியை அடிக்கடி எழுப்பியிருக்கிறார். நம்முடைய திரு. கணேசன் அவர்களும் சென்றமுறை இங்கே பேசும்போது அதைக் குறிப்பிட்டிருக்கிறார். 108 ஜாதிகள் என்று சொல்லும்போது மலைப்பாக இருக்கிறது.

அடேயப்பா! 108 ஜாதிகளுக்கு 20% தானா என்று ஒரு மலைப்பாக இருக்கிறது. இதில் உண்மை என்ன என்பதை அறிய வேண்டும்.

1982 ஆம் ஆண்டு திரு. அம்பாசங்கர் தலைமையிலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்டது இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு. அதற்கு முன்பு முதல் பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவை நான் முதலமைச்சராக இருக்கும்போது அமைத்தேன். பிறகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு அமைக்கப்பட்டது. அது 1985 ஆம் ஆண்டு வழங்கிய அறிக்கையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வன்னியர் உள்ளிட்ட 109 ஜாதிவாரியான மக்கள் தொகை அறிவிக்கப்பட்டது. அதனுடைய விவரம், அந்த 109 ஜாதிகளுடைய மொத்த மக்கள் தொகை 1,23,34,987 பேர்—குறித்துக்கொள்ளலாம், மணி—அதிலே வன்னியர் மாத்திரம் 65,04,855 பேர். அதுதான் பெரும் தொகை. சுமார் 1 கோடியே 23 இலட்சத்திலே 65 இலட்சம் பேர் வன்னியர் பெருமக்கள். அஃதன்னியில் மறவர், பிரமலைக் கள்ளர், அம்பலக்காரர், சேர்வை, அப்பநாடு, கொண்டயம் கோட்டை மறவர், அம்பலக்காரர் (சூரியனூர்), கந்தர்வக்கோட்டை கள்ளர், கூட்டப்பால் கள்ளர், பெரிய சூரியூர் கள்ளர், செம்பநாடுமறவர் உட்பட உள்ள சீர்மரபினர் 17,18,532 பேர்.

இவைபோக எஞ்சியுள்ள 41,11,600 பேரில் எத்தனை ஜாதிகள் வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த எண்ணிக்கை என்ன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சலவைத் தொழிலாளிகள் 4,45,637. மருத்துவர், நாவிதர், மங்களா என்று சொல்லப்படுகின்ற வகுப்பினர் 4,26,427. போயர், ஒட்டர் 4,09,567. ஆண்டிப்பண்டாரம் 2,23,770. இசை வேளாளர் 58,327. குலாலா 3.01,179. குரும்பர் 1,83,689. குரும்பர் என்றால் பெரிய 'று' அல்ல; சின்ன 'ரு'. (சிரிப்பு). மீனவர் 2,71,764. தொட்டிய நாயக்கர் 2,71,318. வேட்டுவ கவுண்டர் 1,25,886. டொம்மாரா 4,436. எரவல்லர் 1,377. கொரச்சா 3,429. குருகினிசெட்டி 4,225. நோக்கர் 7,559. முக்குவர் அல்லது முகயர் 4,358. பண்ணையார் 9,758. தொண்டமான் 14,036. பட்டுதுர்காஸ் 441. 441 பேரெல்லாம் இருக்கிறார்கள். இதெல்லாம் சேர்த்துத்தான் 108 ஜாதிகள் என்கிறோம். டோம்ஸ் 260 பேர். தொங்க போயா 238. தொங்கஊர் கொரச்சார் 287. தேவகுடி தலையாரி 1955. தொப்பை கொரச்சாஸ் வெறும் 51.



பிற்பகல் 12-15

குடு தாசரிகள் 482, மொண்ட கொரவர் 196, மொண்ட கொல்லா 64, சேலம் மேல்நாடுகொரவர் 1,839, சேலம் உப்புக் கொரவர் 2,782, சாரங்க பள்ளி கொரவர் 54. தோகமலை கொரவர் அல்லது கேப்மாரிகள் 512 (பலத்த சிரிப்பு). இது ஒரு ஜாதியினுடைய பெயர்; வயல்பாடு அல்லது நாவல்பேடா கொரச்சாஸ் 15, வடுவார்பட்டிக் கொரவர் 381, வரகனேரி கொரவர் 313.

இப்படி ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 14. 50,000த்திற்கு மேற்பட்ட ஆனால் 1 இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 10. 10,000-த்திற்கு மேல், ஆனால் 50,000-த்திற்குக் கீழே மக்கள் தொகை உள்ள ஜாதிகள் 19. 1000 முதல் 10000 வரை மக்கள் தொகை உள்ள ஜாதிகள் 40. 1000-த்திற்கும் கீழே மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 25. இப்படித்தான் 108 ஜாதிகளே அல்லாமல், இதிலே அதிகமான பலனைப் பெறக்கூடியவர்கள், நான் முதலிலே குறிப்பிட்ட இரண்டு வகுப்பினர்கள். வன்னியப் பெருமக்கள், அதற்கடுத்த அளவிலே பயனைப் பெறக்கூடியவர்கள் சீர்மரபினர் மற்றும் மறவர், பிரமலைக்கள்ளர் என்பவர்கள்தான். எனவே, 108 ஜாதிகளுக்கும் பிரித்து எல்லோருக்கும் குறைத்துக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது தவறு. இந்த 20 சதவிகிதம் கொடுத்த பிறகு—பெரிய போராட்டத்தை நடத்தி, அதிலே 28 பேரை பலி கொடுத்து, அதற்குப் பிறகும் கிடைக்காத இந்த 20 சதவிகிதத்தை, 1989 ஆம் ஆண்டு, கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், உடனடியாக அந்தத் தலைவர்களை அழைத்துப் பேசி, 20 சதவிகிதத்தை அறிவித்தது. அதன்பிறகு பட்டியலைப் பார்த்தால், நீங்கள் புரிந்துகொள்ளலாம்—மருத்துவக் கல்லூரியில், பொறியியல் கல்லூரியில், வேளாண்மைக் கல்லூரியில் மற்றும் பல தொழிற் கல்லூரிகளில் எந்த அளவிற்கு இந்த மக்களுடைய விகிதாச்சாரம், இந்த 20 சதவிகித ஒதுக்கீடு காரணத்தால் உயர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

அடுத்து, இங்கே பெரும்பாலான உறுப்பினர்களால் அதிகமாகப் பேசப்பட்ட ஒரு செய்தி, குடும்ப அட்டைகளைப் பற்றியது ஆகும். அதைப்பற்றி இப்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட கோடிட்டுக் காட்டினார்கள். நம்முடைய திரு ஞானசேகரன் அவர்கள்கூட

ஒரு பத்திரிகையிலே அதைப்பற்றி எழுதியிருக்கிறார். எல்லோருக்கும் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டுவிட்டது என்று இந்த அரசு சொல்வது, முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற மாதிரி என்று சொல்லியிருக்கிறார். இந்த உதாரணத்தைப் பார்த்துவிட்டு நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஏனென்றால், ஒரு முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற அளவுக்கு சோறு இருந்தால் தமிழ்நாடு எவ்வளவு வளமாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். (சிரிப்பு)

சொல்லும்போது ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும். நான் எப்போதும், சொல்லும்போதும், எழுதும்போதும் அப்படி எழுதமாட்டேன். முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பதுபோல என்று சொன்னால், அந்த அளவுக்குச் சோறைக் கொட்டி, அதிலே பூசணிக்காயை மறைத்துவிடலாம். அதனாலே 'முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பது போல' என்று போட்டால் சரியாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்றால், இலையையும் வைத்து மறைக்கலாம். இலையும் வருகிறது, அதிலே மறைப்பதற்கு சோறும் வருகிறது. அவருக்கும் மற்றும் அவரைப்போல இங்கே இந்தக் குடும்ப அட்டை விநியோக முறையிலே உள்ள குறைகளைச் சொன்ன திரு. அழகிரி, எதிர்க்கட்சித் தலைவர், நம்முடைய அருமை நண்பர் லத்தீப் மற்றும் திரு. பழனிசாமி போன்றவர்களெல்லாம் சொன்ன அந்தக் கருத்திற்கு சில விளக்கங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமான விஷயமாக இருப்பதால், சில விளக்கங்களை நான் சொல்லியாக வேண்டும். தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உள்ள குடும்பங்கள் 136.95 இலட்சம் குடும்பங்கள். ஆனால், இதுவரை கொடுக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 142.79 இலட்சம். மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலே உள்ள குடும்பங்களை விட அதிகமாகக் குடும்ப அட்டைகள் தரப்பட்டிருப்பது 5.84 இலட்சம் ஆகும்.

இந்த அளவிற்கு அதிகமாக வரக் காரணம், ஒரே குடும்பத்தில் உள்ளவர்களே தனித்தனியாக இரண்டு அட்டைகளை, தந்தைக்கு ஒன்றும், மகனுக்கு ஒன்றுமாக வாங்கியதால் இருக்கலாம். புதிய அட்டைகள் வழங்குவதற்கு முன்னதாக கடந்தமுறை புழக்கத்தில் இருந்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 148 இலட்சம். இதிலே போலி அட்டைகள் ஏராளமாக இருந்தனவெல்லாம் கண்டு



பிடிக்கப்பட்டு களையப்பட்டது சுமார் 11 இலட்சம். அச்சடிக்கப்பட்டு பெற்றுக்கொள்ள யாரும் வராமல் இருக்கின்ற அட்டைகள் மட்டும் சுமார் இரண்டு இலட்சம். இந்த இரண்டு இலட்சம் அட்டைகளுக்கு உரியவர்கள் போலிகள் என்பதால் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் வரவேயில்லை. எனவே, பழைய குடும்ப அட்டைதாரர்களுக்கெல்லாம் எந்தவிதமான குழப்பமும் இன்றி அட்டைகள் வழங்கப்பட்டு முடிவுபெற்றுவிட்டன. அதிலே எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால் இதற்கு முன்பு குடும்ப அட்டைகள் வைத்திருக்காமல், புதிதாக விண்ணப்பம் போட்டு அவ்வப்போது அட்டை பெற வேண்டியவர்கள் மாத்திரம்தான் தொடர்ந்து புதிய அட்டைகளைக் கோரி மனு கொடுத்து வருகின்றார்கள். அரசு பழைய அட்டைகளுக்குப் பதிலாக மாற்று அட்டைகள் வழங்குகின்ற பணியிலே தொடர்ந்து அக்கறை செலுத்தி வந்ததால் புதிய மனுக்களைத் தனியாக எடுத்துக்கொண்டு அவற்றுக்கும் அட்டைகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு முந்தைய குடும்ப அட்டைகள் இல்லாமல் புதிய அட்டைகள் கோரி வந்த மனுக்கள் மாத்திரம் 22 இலட்சம் ஆகும். இந்த 22 இலட்சம் மனுக்கள்மீது ஒவ்வொரு மாவட்ட விநியோக அலுவலரும், கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் விசாரணை மேற்கொண்டபோது அதில் உண்மையானதுதான் என்று தெரிந்தது 4.5 இலட்சம் மனுக்கள்தான். இதிலும் 2 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 2.5 இலட்சம் மனுக்களுக்கான குடும்ப அட்டைகளும் தொடர்ந்து அச்சடித்து வழங்கப்படும் பணி முறையே நடந்துகொண்டுள்ளது.

பிற்பகல் 12-20

இந்த 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர்களில் உள்ளவர்கள் தான், மாண்புமிகு உறுப்பினர்களைச் சந்தித்து எங்களுக்கு அட்டை வரவில்லை, அட்டைவரவில்லை என்று ஆங்காங்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குடும்ப அட்டைகள் பிரச்சினையை இத்தோடு முடித்துவிட முடியாது. தொடர்ந்துகொண்டே இருக்கக்கூடியது. புதிய, புதிய குடும்ப அட்டைகள், தமிழகத்தில் புதிது புதிதாகக் குடும்பங்கள் தொடங்கப்படும்போதெல்லாம் அவர்கள்

கொடுத்துக்கொண்டேதான் இருப்பார்கள். எனவே, இது முடிவுறாத பணியாகும் என்று நான் முன்பு சொன்னதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். இவ்வாறு, புதியதாகக் குடும்ப அட்டைகள் பெறுபவர்களுக்கு அவை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், உடனே ஒட்டுமொத்தமாக குடும்ப அட்டைகள் வழங்குவதில் கோளாறு என்று கூறுவதில் அர்த்தம் இருக்க முடியாது என்று மாத்திரம் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். குறைகள் அறவே இல்லையென்று சொல்ல மாட்டேன். ஆனால் இங்கே எடுத்துக்காட்டுகின்ற அளவிற்குப் பூதாகாரமாக இதிலே குற்றம் இல்லை; குறையில்லை என்பதைத்தான் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற இந்தக் குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினால், குறிப்பிட்ட குறைகள் இருக்குமேயானால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தத் துறை நிச்சயமாக முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது. போலி அட்டைகளை வைத்துக்கொண்டு ஊழல் செய்வதற்காக ஒரு கூட்டம் அலைந்துகொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தப் போலி அட்டைகளைக் கொண்டு Ration கடைகளிலே அரிசியை வாங்கி அல்லது ஏதாவது உணவுப் பொருட்களை வாங்கி, அதை வேறு இடங்களிலே விற்று, அவற்றைத் தாங்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் வேறு இடங்களிலே அதிக விலைக்கு விற்று அதிலே சம்பாதிக்க வேண்டும் என்று ஒரு கூட்டம் தமிழகத்திலே அலைந்துகொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்ப அட்டைகளுக்கு அடுத்தபடியாக, போக்குவரத்துத் துறை பற்றித்தான் அதிகமாக இந்த அவையிலே, ஆளுநர் உரையிலே பேசப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி நான்காவது முறையாக ஏற்பட்ட இந்த 2½ ஆண்டுகளில் பேருந்துகள் இயக்கப்பட புதிய வழித்தடங்கள் உருவாக்கும் வகையில், *1,245* தடங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஆட்சியிலே நஷ்டம் என்று கூறி நிறுத்தப்பட்ட வழித்தடங்களினுடைய எண்ணிக்கை *410*. அதையும் இந்த ஆட்சியில் எடுத்து நடத்தியதில் மொத்தம் புதிய வழித்தடங்கள் *1,655* ஆகும். நடத்த முடியாது என்று



விட்டவையெல்லாம், தனியாருக்குச் சென்றதெல்லாம், அந்தக் கதையெல்லாம் உங்களுக்குத் தெரியும். அவற்றையெல்லாம் ஏற்று நடத்தி, நஷ்டத்தால் கைவிடப்பட்ட தடங்களையும் ஏற்று நடத்தி, *1,655* புதிய வழித்தடங்கள் இந்த 2½ ஆண்டுக் காலத்திலே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த கால ஆட்சியிலே *5* ஆண்டுக் காலத்தில், வாங்கப்பட்ட புதிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை *10,673*. இந்த 2½ ஆண்டுக்கால ஆட்சியிலே வாங்கப்பட்ட பேருந்துகள் *7,212*. போக்குவரத்துக் கழகங்களில், முந்தைய ஆட்சிக்காலத்திலே பேருந்துகளுக்கு உதிரி பாகங்கள் கொள்முதல் செய்தல், மேற்கூடு கட்டுதல் Body கட்டுதல் —ஆகியவற்றில் ஊழல் மிகுந்து காணப்பட்டதால் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் புதிய கொள்முதல் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டது. உதிரி பாகங்கள் கொள்முதல் முறை சீரமைக்கப்பட்டது. பேருந்து மேற்கூடுகளைக் கட்டும் பணி அந்தந்த அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளிலேயே செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாற்றங்களினால் பேருந்து மேற்கூடு கட்டும் செலவு, *1995-96* ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது *30* சதவீதத்திற்கு மேலாகக் குறைக்கப்பட்டு அந்த வகையிலே மாத்திரம் இந்த 2½ ஆண்டுகளில் *48* கோடி ரூபாய் அளவிலே சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தவிர, உதிரி பாகங்கள், டயர் போன்ற செலவினங்களில் *68* சதவீதம் குறைக்கப்பட்டு, நடப்பாண்டில் ரூபாய் *14* கோடி அளவிலே சேமிப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்திலே பேருந்துகளை இயக்குவதற்கான பல்வேறு செலவுகள் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

பிற்பகல் *12-25*

சராசரியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இயக்கப்படும் பேருந்து ஒவ்வொன்றும் அன்றாடம் *405* கிலோ மீட்டர் தூரம் செல்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் மூலம் அன்றாடம் இயங்கும் பேருந்துகளுடைய எண்ணிக்கை *15,346*. *1996-97*-ல் பேருந்தை ஒரு கிலோ மீட்டர் ஓட்டுவதற்கு டீசல் செலவு *2.12* ரூபாய் என்று இருந்தது. தற்போது அந்தச் செலவு *2.73* ரூபாயாக உயர்ந்துள்ளது. இடையிலே டீசலுக்கு விலை உயர்த்தப்பட்டு, குறைக்கப்பட்ட பிறகும் இந்த நிலைதான். *1996-97*இலே *2.12* ரூபாயாக இருந்தது ஒரு கிலோ

மீட்டர் டீசல் செலவு. இப்பொழுது ஒரு கிலோ மீட்டருக்கு டீசல் செலவு 2.73 என்று உயர்ந்திருக்கிறது. அதாவது 61 பைசா ஒரு கிலோ மீட்டருக்குக் கூடியுள்ளது.

அதேபோன்று வட்டிச் செலவு 1996-97-இல் ஒரு கிலோ மீட்டருக்கு 49 பைசாவாக இருந்தது தற்போது 71 பைசாவாக உள்ளது. சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஒரு கிலோ மீட்டருக்கு 1996-97-இல் 3.77 ரூபாயாக இருந்தது தற்போது 4.48 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு சிரமங்கள் பல இருந்தாலும்கூட, இந்தியாவில் தமிழ்நாட்டிலேதான் பயணக் கட்டணம் குறைவாக இருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நான் வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை; பயப்பட வேண்டாம். ஆந்திராவிலே புறநகருக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 24 காசு; கர்நாடகத்திலே 21 காசு; கேரளத்திலே 22 காசு; தமிழ்நாட்டிலே 18 காசு. ஓரளவு சொகுசு உள்ள விரைவுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 34 காசு; கர்நாடகத்திலே 25.5 காசு; கேரளத்திலே 34 காசு; தமிழ்நாட்டிலே 20 காசு. சொகுசுப் பேருந்துக்கு, புறநகர் சொகுசுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 39 காசு; கர்நாடகத்திலே 31 காசு. கேரளத்திலே 39 காசு; தமிழ்நாட்டிலே 25 காசு.

இதையெல்லாம் சொன்னால், கட்டணமும் குறைவாக இருக்க வேண்டும், வசதியும் அதிகமாக இருகக வேண்டும், 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்ற நிலைமையிலேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த இரண்டு ஆசைகளிலே எந்த ஆசையை விடப் போகிறார்கள் என்று நான மிகுந்த பவ்யமாக, பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பட்ஜெட்டுக்கு முன்பு கோரப்படுகின்றது இவ்வளவு அரிய யோசனைகளையெல்லாம் சொன்னீர்கள். திரு. திருநாவுக்கரசு அருமையான யோசனைகளையெல்லாம் சொன்னார். இதற்கும் ஒரு யோசனையை நீங்களெல்லாம் சொல்ல வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரும் மிக நிதானமாகச் சிந்திப்பவர். அதனால் அவரும் அதற்கு நல்ல யோசனையைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விலையைப்பற்றி இங்கே சொல்லப்பட்டது. ஆயிரம் ரூபாய் என்று நீங்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்களே, என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று கேட்டீர்கள். நானும் எப்படியோ



ஏமாந்து போயிருக்கிறேன். எப்படியென்றால், இந்த ஆட்சி ஆரம்பித்தபோது நம்முடைய சுதர்சனம்தான் ஒரு கேள்வியைக் கேட்டார். ஆயிரம் ரூபாய் கரும்பு விலை என்று தேர்தல் அறிக்கையிலே போட்டிருக்கிறோமே, எப்பொழுது நிறைவேற்றப்போகிறீர்கள் என்று. சுதர்சனம் சொன்னால் சரியாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு, நானும் நாயுடு பேச்சை நம்பி (சிரிப்பு), அன்றைக்கு இந்த அவையிலே விரைவில் ஆயிரம் என்பது ஒரு குறிக்கோள்தான், அதை நிச்சயமாக அடைந்து தீருவோம், மெல்ல மெல்ல அடைந்து தீருவோம் என்று சொல்லிவிட்டேன்.

அடிக்கடி பேசப் பேச, அப்படி ஒரு வாசகத்தைத் தேர்தல் அறிக்கையிலேயே போட்டிருக்கிறோமா என்று தேர்தல் அறிக்கையை எடுத்துவந்து பார்த்தேன். இது தேர்தல் அறிக்கை. 1996 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, எங்கேயும் ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லவே இல்லை. இது புதிதாக Print பண்ணியது இல்லை. தமிழ் மாநிலக் காங்கிரஸ் Office-லே கூட இருக்கும் அது. கம்யூனிஸ்ட் கட்சி Office-லேயும் இருக்கும். எடுத்துப் பார்க்கலாம். அதில் என்ன போட்டிருக்கிறோம் என்றால், "கரும்புக்கு அதிக விலை" என்கிற தலைப்பிலே, என்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறோம் என்றால், "மற்ற மாநிலங்களைப்போல வெட்டுக்கூலி, வண்டி வாடகை"—இங்கே அழகராஜா சொன்னாரே அது மாதிரி, "மற்ற மாநிலங்களைப் போல வெட்டுக்கூலி, வண்டி வாடகை முதலியவற்றை ஆலையே ஏற்று, கரும்பு விலையை உயர்த்தி நிர்ணயிக்கும் விதத்தில்"—அதுகூட நிர்ணயிப்போம் என்று சொல்லவில்லை—"முத்தரப்பு மாநாடு கூட்டி, எல்லோருடைய யோசனையையும் பெற்று, உரிய முடிவெடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்"—இதைத்தான் தேர்தல் அறிக்கையிலே போட்டிருக்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே சொல்லவில்லை. 1996-ல் திருச்சியில் நடைபெற்ற 96-வது மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிலே அறிவித்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதுவும் ஞாபகம் என்றுதான் சொல்கிறார் அவர். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** தீர்மானம் . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இல்லை, இல்லை. மாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கலாம். அந்தத் தீர்மானத்தை மறுபரிசீலனை பண்ணித்தான் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. (சிரிப்பு) நான் அதற்காகப் பின் வாங்குவதாக அர்த்தம் அல்ல. கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-30*

கரும்பு விலையைப் பொறுத்தவரையிலும், ஒரு ஒப்பீடு பார்த்தால், இந்த விலை, சர்க்கரைக் கட்டுமானம் (recovery) பிழிதிறன் என்பதை வைத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். இதிலே recovery குறைவாக இருந்தாலும்கூட, அதிகமாகக் கொடுப்பது நாம்தான். உதாரணமாக, ஆந்திராவில் சர்க்கரைக் கட்டுமானம் (recovery) 10.22 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்குக் கொடுக்கப்படும் விலை 630 ரூபாய். கர்நாடகாவில் recovery 10.54 சதவீதம். அங்கே 730 ரூபாய் டன் ஒன்றுக்கு விலையாகக் கொடுக்கிறார்கள். மராட்டியத்தில் recovery 11.11 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 680 ரூபாய். குஜராத்தில் சர்க்கரைக் கட்டுமானம் (recovery) 10.72 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 648 ரூபாய். தமிழ்நாட்டில் recovery பத்தும் இல்லை, பதினொன்றும் இல்லை, ஒன்பதும் இல்லை. 8.94 சதவீதம். அதற்கு நாம் தருகின்ற விலை 753 ரூபாய். எல்லா மாநிலங்களையும்விட அதிகமாகக் கொடுக்கிறோமே நாம், பாராட்ட வேண்டாமா நீங்கள்? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

கூட்டுறவு மற்றும் பொதுத் துறையில் இயங்கி வரும் 19 சர்க்கரை ஆலைகளில் 1997-98 ஆம் ஆண்டு முடிய 364 கோடி ரூபாய் திரண்ட நட்டம் (cumulative loss) ஏற்பட்டுள்ளது. இந்தப் பெரிய நட்டத்திற்குக் காரணம், சர்க்கரை உற்பத்திக்காகும் செலவை ஈடுகட்ட முடியாத நிலை. 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கூடுதல் கரும்பு உற்பத்தி காரணமாக, அரவைக் காலத்தை நீட்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் கட்டுமானமே—(Recovery) குறைந்து போயிற்று.

1997-98-ல் அரவைப் பருவத்தில் பெருமழை. அதே 1997-98 அரவைப் பருவத்தில் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம். கடந்த



ஆட்சியில் விரிவாக்கப் பணிகளை, காலத்திலே அவர்கள் முடிக்கவில்லை என்பதும் ஒரு காரணம்.

கடந்த ஆட்சியில் சில ஆலைகளில் உபரி கரும்பு இதர ஆலைகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டது. அதுவும் ஒரு காரணம். இப்படி தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால், 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 1997-98 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கான மாநில அரசு மற்றும் மைய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலைக்கான வித்தியாசத் தொகையை வழங்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டது. இந்த வித்தியாசத் தொகையை வழங்க முடியாத சூழ்நிலை அந்த ஆலைகளுக்கு ஏற்பட்டது.

கரும்பு விவசாயிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 82 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியது. எதற்காக? அந்த ஆலைகளுக்கு அல்ல. அந்த விவசாயிகளுக்குத் தர வேண்டிய பணத்திற்காக 82 கோடி ரூபாயை இந்த அரசு உதவியாக வழங்கியது. கரும்பு விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவைத்தொகை, தீபாவளிக்கு முன்பே வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டது. கழக அரசு வழங்கிய நிதியுதவியின் காரணமாக 70,273 கரும்பு விவசாயிகள் பயன் அடைந்தார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்கு மேலும் நம்முடைய ஞானசேகரன், ஐ. கணேசன் போன்றவர்கள் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிறீர்கள் என்று சொல்லாமல் இருந்தால் நலம் என்று நம்புகின்றேன். இதற்கு மேலும் தருவதற்கு, முத்தரப்பு மாநாட்டை நாம் நடத்தி, அதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவையில் தங்கள் மூலமாகக் கரும்பு விவசாயிகளுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் சுந்தரம் அவர்கள், ராசிபுரம் தொகுதிக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்ற ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நானும் அதிர்ச்சியடைந்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, அவரிடமிருந்து ஒரு அறிக்கையைப் பெற்றேன். அந்த அறிக்கையின்படி, ராசிபுரம் தொகுதியில் நான் எல்லாப் பணிகளையும் சொல்ல விரும்பவில்லை, நேரமாகும். இந்த இரண்டரை ஆண்டுகளில் நடைபெற்ற பணிகளில் சிலவற்றை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன்.

**53-397—11**

ஊரக வளர்ச்சித் துறை மூலம், சமத்துவபுரப் பணிகள் நடைபெற்றவை 101. செலவு 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் 39—செலவு 48 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய். நமக்கு நாமே திட்டப் பணிகள் 17—செலவு 16 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய். தொகுப்பு வீடுகள் 769—செலவு 2 கோடியே 16 இலட்சம் ரூபாய். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 61—செலவு 33 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய். வேளாண்மைப் பொறியியல் துறைப் பணிகள் 59—செலவு 87 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக இதர பணிகள் உள்ளிட்ட பணிகள் மாத்திரம் 7,227—செலவு 11.18 கோடி ரூபாய்.

பிற்பகல் 12-35

தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் 47 Transformers அமைக்கச் செலவு 70 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். உயர் மற்றும் குறைந்த மின்னழுத்த இணைப்புகள் பெற 1.53 கோடி ரூபாய். உயர் அழுத்த மின் இணைப்பு 3 பெற 6 இலட்சம் ரூபாய். விவசாயத்திற்கு 466 மின் இணைப்புத் தர 1 கோடியே 63 இலட்சம் ரூபாய். 162 குடிசைகளுக்கு மின் இணைப்புத் தர 1 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய். தெரு விளக்குகள் 396 அமைக்க 19 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். மேல்நிலை குடிநீர்த் தொட்டி 55-க்கு 22 இலட்சம் ரூபாய். இப்படி மின் துறை மூலமாக ஆன செலவு 7 கோடியே 19 இலட்சம் ரூபாய்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 84 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கியதற்குச் செலவு 1 கோடியே 39 இலட்சம் ரூபாய்; வருவாய்த் துறை மூலம் பயனாளிகளுக்குச் செலவு 1.47 கோடி ரூபாய். பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் 514 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கியதற்கானச் செலவு 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

பொதுப்பணித் துறை மூலமாக சிக்கலாந்தபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

ராசிபுரம் அரசு மருத்துவமனையிலே புறநோயாளிகள் பிரிவு



கட்டடம் கட்ட 20 இலட்சம் ரூபாய்.

உடையார்பாளையம், ஆர்.புதுப்பாளையம் மற்றும் வெண்ணாந்தூர் உயர்நிலைப் பள்ளிகளிலே கூடுதல் வகுப்பறை கட்ட 15 இலட்சம் ரூபாய்.

ராசிபுரம் மேல்நிலைப் பள்ளியிலே அறிவியல் ஆய்வுக்கூடம் கட்ட 18 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக 84 கிலோமீட்டர் நீளச் சாலைப் பராமரிப்புப் பணிக்காக 1.55 கோடி ரூபாய்.

போக்குவரத்துத் துறை மூலம் பேருந்து வழித்தடம்—5 புதிய பேருந்து வழித்தடங்கள் மற்றும் 23 புதிய பேருந்துகள், 33 மினி பேருந்துகள்.

முழு நேர நியாய விலைக் கடை மற்றும் 14 பகுதி நேர நியாய விலைக் கடைகள் இந்தத் தொகுதியிலே புதியதாக 2½ ஆண்டுகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கல்வித் துறை மூலமாக ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு பள்ளி +2 தேர்வு மையமாக புதியதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

ஒட்டுமொத்தமாக, எல்லாவற்றையும் இப்படிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த 2½ 3 ஆண்டுக்காலத்தில் மொத்தமாக 52.41 கோடி ரூபாய் அளவுக்குப் பணிகளும், பயன்களும் ராசிபுரம் தொகுதியிலே நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட ஏதோ என்னுடைய தொகுதிக்குத் தனிப்பட்ட முறையிலே செலவு செய்ததாகச் சொல்ல முடியாது. (பல உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்) இதெல்லாம் Routine work, சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம். .(பல உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும். திரு. சுந்தரம், முதல்வர் அவர்கள் அப்படியெல்லாம் சொல்லவில்லை; உங்களுடைய தொகுதியிலே எந்த வேலையுமே

நடைபெறவில்லை என்று நீங்கள் சொன்னதற்கு, எல்லாத் தொகுதிகளிலேயும் செய்துள்ளமாதிரி உங்களுடைய தொகுதியிலும் எல்லா வேலைகளும் நடைபெற்றிருக்கின்றன என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதற்காக நீங்கள் பேச முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணி நேரம் இருக்கிறது என்றால், நீங்கள் பேச வேண்டும் என்று இருக்கிறதா? நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் தனிப்பட்ட முறையிலே செய்ததல்ல என்று சொன்னார். யாருக்கும் தனிப்பட்ட முறையிலே செய்ய முடியாது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(திரு. பி.ஆர். சுந்தரம் நின்றுகொண்டே பேசிக் கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நண்பர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஒரு புகாரைச் சொன்னார். திருவில்லிபுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். குறை இருக்கலாம். ஆனால் எப்போதுமே அவர் அதிகமாகத்தான் சொல்வார். 500 பேர் என்றால் 5000 பேர் என்பார். 500 பேர் வந்திருந்தால் 5000 பேர் வந்திருந்தார்கள்; 5000 பேர் வந்திருந்தால், 50000 பேர் வந்திருந்தார்கள் என்றெல்லாம் கூட்டத்திலே சொல்லும்போது சொல்லலாம். 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். அதைப்பற்றி விசாரித்தபோது, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர், இணைப் பதிவாளரிடமிருந்து அறிக்கை பெற்று எனக்கு அனுப்பி இருக்கிறார். அவர் அனுப்பிய தகவல்படி, அந்த வங்கியின் மூலமாக நுகர்பொருள் கடன் மாத்திரம் 362 பேருக்கு 61 இலட்சம் ரூபாய் தான் வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் ரிப்பேர் கடன் என்ற தலைப்பில் 130 பேருக்கு ரூ.53.88 இலட்சம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.



பண்ணைசாராக் கடன்கள் என்ற தலைப்பில் 31 பேர்களுக்கு 14.02 இலட்ச ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வங்கியின் மூலமாக இந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன்களே 1,29,29,000 ரூபாய்தான். இதில் எப்படி 15 கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இதைப்பற்றிப் பிறகு விளக்குவாரேயானால், அதைப்பற்றி அறிந்து ஆவன செய்கின்றேன். ஆக, வழங்கப்பட்ட கடனே ஒரு கோடி சொச்சம்தான், அதிலே 15 கோடி ரூபாய்க்கு ஊழல் நடந்திருக்க முடியாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல. பிறகு, ஜப்தியைப் பற்றி . . .

பிற்பகல் 12-40

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சற்றுப் பொறுங்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பேசுங்கள். முதலமைச்சர் அவர்கள் தவறே நடக்கவில்லை என்று சொல்லவில்லை. கையாடல் 15 கோடி ரூபாய் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அந்த வங்கியில் கடனே 1.5 கோடி ரூபாய்க்குத்தான் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த 1.5 கோடி ரூபாயில் தவறு நடந்திருந்தால் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 15 கோடி ரூபாய்க்கு அந்த சங்கத்திலே ஊழல் நடைபெற்றதாக அவர் இங்கே குறிப்பிட்டார். அதைப்பற்றி விசாரித்த அளவில் கூட்டுறவுத் துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எனக்கு அனுப்பியுள்ள விவரத்தில், அங்கே 15 கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றதற்கான ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், கொடுக்கப்பட்ட கடனே 1 கோடியே சொச்ச ரூபாய்தான் என்கிறபோது 15 கோடிக்கு ஊழல் நடைபெற்று இருக்க இயலாது என்று சொன்னேன். ஊழல் இந்த ஒரு கோடி ரூபாய்க்குள்ளே நடைபெற்று இருக்குமேயானால், அதை மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி எனக்கு சுட்டிக்காட்டுவாரேயானால், நான் நடவடிக்கை எடுக்கத்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தயாராக இருக்கின்றேன் என்று அப்போதும் சொல்லி இருக்கின்றேன், அதை மறைக்க விரும்பவில்லை. எங்கே ஊழல் நடைபெற்றாலும், அதை இந்த அரசு நிச்சயமாகக் கண்டுபிடித்து (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை எடுக்கும் என்பதிலே தாமரைக்கனிக்கு சந்தேகம் தேவையில்லை என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, இங்கே நாடகம் எல்லாம் நடிக்கக்கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கத்தாதீர்கள். தாமரைக்கனி பேசியது எதுவும் அவைக்குறிப்பிலே இடம் பெறாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் பேசியதை எல்லாம் இரப்பர் வைத்து அழித்து விடுகிறீர்களே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அழிக்கத் தேவையில்லை; நீக்கிவிடுவேன்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரு நல்ல நிகழ்ச்சியைத் திசைதிருப்புவதுதான் தாமரைக்கனி போன்ற நண்பர்களுடைய முயற்சியாக இருக்குமேயானால், அதற்காக நான் ஆச்சரியப்படவில்லை. எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகளில்கூட அ.தி.மு.க.வினர் கலந்துகொண்டு திசைதிருப்பிய கட்டங்கள் எல்லாம் அண்மைக் காலத்தில் பல நடைபெற்றிருக்கின்றன.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர்கள் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஆக்கப்பூர்வமான உரைகள் பலவற்றை நிகழ்த்தி, அதற்கான விளக்கங்களை நான் தருகிறேன். அது சரியாகவும் இருக்கலாம்; தவறாகவும் இருக்கலாம். அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது சில கருத்து விளக்கங்களைப் பெறுகிற

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நேரத்தில் மாலைப் பத்திரிகையிலே தாமரைக்கனியைப்பற்றிதான் செய்தி வர வேண்டுமென்பதற்காக உரத்த குரல் எழுப்புவதை...

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? நீங்கள் பிறகு கேளுங்கள், நான் அனுமதி கொடுக்கிறேன். இப்போது முதலமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். தாமரைக்கனி சாட்டிய குற்றச்சாட்டு, 15 கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதாகச் சொன்னார். அதைப்பற்றி விசாரித்ததில் எனக்கு வந்த தகவலைத்தான் சொல்லியிருக்கிறேன். கலெக்டரும் மற்றும் உள்ள அதிகாரிகளும் தந்துள்ள தகவல். அந்தத் தகவல் குறிப்புகள் இங்கே என்னிடத்திலே இருக்கின்றன. அவர்களுடைய கைப்பட வந்த கடிதங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அங்கே கொடுக்கப்பட்ட கடனே 1 கோடியே சொச்சம் ரூபாய்தான் என்கிறபோது 15 கோடி ரூபாய் ஊழல் என்று சொல்லப்படுவது மிகையாக இருக்கிறது. அந்த ஒரு கோடிக்குள் ஏதாவது ஊழல் நடைபெற்றிருந்தால் சொல்லுங்கள், நான் விசாரிக்கிறேன், நடவடிக்கை எடுக்கிறேன் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். விசாரிப்பதும் நடவடிக்கை எடுப்பதும்கூட உங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் என்ன செய்ய முடியும்? யாரோ அ.தி.மு.க. விலிருந்து ஊழல் செய்துவிட்டு தி.மு.க.-வுக்கு வந்துவிட்டார்கள் என்று சொல்கிறார். அ.தி.மு.க.-வில் அவர் ஊழல் செய்யும்போது மௌனமாக இருந்தவர், அவர் தி.மு.க.-விற்கு வந்த பிறகு அதை வெளியிடுகிறார் என்றால் இந்த ரகசியம் எனக்குப் புரியவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் அடுத்த கட்டத்திற்குச் செல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில், நம்முடைய விவசாயிகளிடத்தில் ஜப்தி நடைபெறுகிறது என்பதைப்பற்றி பழனிசாமி அவர்களும் மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

எல்லா உறுப்பினர்களும் சொல்லாவிட்டாலும், குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் ஜப்தியைப்பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு வங்கிகளுக்கான கடனை நாம் திருப்பிச் செலுத்தாவிட்டால், மீண்டும் அந்த நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற முடியாது என்பது எல்லோருக்கும் புரிந்த எளிமையான இலக்கணம்தான்.

30-6-1999 தேதியின்படி அந்தப் பகுதியிலே மொத்தமாக ஏற்படும் தவணைத் தொகை, இந்தக் கூட்டுறவுக் கடன் 43.10 கோடி ரூபாய்.—43 கோடியே 10 இலட்ச ரூபாய். இந்தத் தொகையில் குறைந்தது 40 சதவீதம் அளவுக்காவது வசூல் செய்தால்தான் வருகிற ஆண்டு மீண்டும் நாம் NABARD வங்கியின் மூலம் தொகையைப் பெற்று விவசாயிகளுக்கு மீண்டும் சலுகை வட்டியிலே கடன் தர இயலும். அந்த உரிமையை நாம் ஏன் இழக்க வேண்டும்;. முழுக்கக் கேட்கவில்லை, 40 சதவீதம்தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதிலேகூட ஏற்கெனவே வசூல் செய்யப்பட வேண்டிய 43 கோடி ரூபாயில் 40 சதவீதம் என்பது 17.24 கோடி ரூபாய்தான். இதில் 17-2-1999ஆம் நாள் வரை வசூலிக்கப்பட்ட தொகை வெறும் 36 இலட்சம்தான், இன்னும் வசூலிக்க வேண்டிய தொகை 16.88 கோடி ரூபாய். வசூலிக்க வேண்டியது 40 சதவீதம் முழுமையாக அல்ல. இந்தக் கடன் தொகையைக் கட்ட வேண்டிய தவணைத் தவறிய விவசாயிகளுடைய எண்ணிக்கை 81,553. மொத்தம் தவணை தவறிய தொகை 43 கோடியே 10 இலட்ச ரூபாய்.

இதிலே பெரிய விவசாயிகள் 21,898 பேர். இந்தப் பெரிய விவசாயிகள் மாத்திரம் தர வேண்டிய கடன் 19 கோடியே 22 இலட்சம். பெரிய விவசாயிகள் என்றால் யார்? 5 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்கள், டிராக்டர் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்பவர்கள், நிலங்கள் அன்னியில் மாத ஊதியம் பெற்று வேலையில் இருப்பவர்கள், இவர்கள்தான் பெரிய விவசாயிகள் என்ற அந்த வரம்பில் வருகிறார்கள். மொத்தம் 81,553 தவணை தவறிய விவசாயிகளில் சுமார் 60,000 பேர் சிறு விவசாயிகள். அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு Notice கூட அனுப்பப்படவில்லை. பெரிய விவசாயிகளான 21 ஆயிரம் பேருக்கு மாத்திரம்தான் உடனடியாக கடன் தொகையை, அந்த 40 சதவீதத்தைக் கட்ட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் Notice அனுப்பப்பட்டது, விளம்பரம் செய்யப்பட்டது. இதிலே தஞ்சை மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில் Notice மாத்திரம்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. யாருடைய பொருளையும் ஜப்தி செய்யவில்லை.



பிற்பகல் 12-50

கும்பகோணம் சங்கத்தின் மூலம் - அதிலே திருவாரூர் மாவட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம், நாகை மாவட்டம் எல்லாம் இருக்கிறது. இதில்
கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் மாத்திரம் 60 பேர் மீது,
அதாவது, திருவாரூர் மாவட்டத்தில் 10 பேர் மீதும், தஞ்சை
மாவட்டத்தில் 29 பேர் மீதும், நாகை மாவட்டத்தில் 21 பேர் மீதும்
ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவர்கள் எல்லாம் யார்?
அவர்கள் எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று கட்சியின் பெயரைச்
சொல்ல விரும்பவில்லை நான், பெயரை மாத்திரம் சொல்லி
சுவாமிநாதன், அவர் கடன் வாங்கியது 1991ல், செலுத்த வேண்டிய
தொகை 1 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய். இந்தப் பெரிய
விவசாயிடமிருந்து கடன் தொகையைக் கேட்கக் கூடாதா? 40
சதவீதத்தைக் கொடுக்கக் கூடாதா அவர்? சுவாமிக்கண்ணு, 74 ஆயிரம்
ரூபாய் 1996-ல் வாங்கினார், கொடுக்கவில்லை. சண்முகவேல், 85
ஆயிரம் ரூபாய் 1996-ல் வாங்கிய கடன். எம். மாரியப்பன், 1996ல்
வாங்கிய கடன் 53 ஆயிரம் ரூபாய். சம்பந்தம், 1991-ல் வாங்கிய கடன்
1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்". கலியமூர்த்தி குடும்பம், 1992-ல்
வாங்கிய கடன் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்., இவர் விவசாயச்
சங்கத் தலைவர்கூட. கண்ணபிரான், 1990ல் வாங்கிய கடன் 2
இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய். எஸ். செந்தில், 1992ல் வாங்கிய கடன்
1 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய். கோபாலகிருஷ்ணன், 1993-ல் வாங்கிய
கடன் 1 இலட்சம் ரூபாய். திருஞானசம்பந்தம், 1996ல் வாங்கிய கடன்
59 ஆயிரம் ரூபாய். சுந்தரப்பா, 1996ல் வாங்கிய கடன் 79 ஆயிரம்
ரூபாய். மந்திரமூப்பனார், 1 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய், 1996-ல்
வாங்கிய கடன். சண்முகம், 1995ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 15
ஆயிரம் ரூபாய். சேரன் குடும்பத்தார் 1995ல் வாங்கியிருக்கிறார்கள்,
1991லும் வாங்கியிருக்கிறார்கள், 9 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய்.
விவசாயச் சங்கக் கூட்டுக் குழுவின் தலைவர் அவர். அவர் கட்ட
வேண்டாமா? 40 சதவீதமாவது அவர் கட்ட வேண்டாமா?
சுந்தரமூர்த்தி 1996-ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 20 ஆயிரம்
ரூபாய். இராமகிருஷ்ணன், 1994-ல் வாங்கிய கடன், 1 இலட்சத்து 50
ஆயிரம் ரூபாய். ஆனந்தன், 1992ல் வாங்கிய கடன் 74 ஆயிரம் ரூபாய்.
குணசேகரன், 1996ல் வாங்கிய கடன் 61 ஆயிரம் ரூபாய். இந்த மாதிரி
வந்துகொண்டே இருக்கிறது.

சில M.L.A.-க்கள் எல்லாம் இருக்கிறார்கள். நான் பெயரை எல்லாம் சொல்ல விரும்பவில்லை. சொல்லிவிட்டு, அவர்கள் முகத்தைப் பார்க்க எனக்கும் கஷ்டமாக இருக்கும், அவர்களுக்கும் கஷ்டமாக இருக்கும். இதிலே இந்த ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களில் ஆர். மகாலிங்கம். பூண்டி; இவர் கட்ட வேண்டிய தொகை 18 ஆயிரத்து 902 ரூபாய். இவருக்கு 8.78 ஏக்கர் நிலம் சொந்தம். அரிசி ஆலை நடத்திக் கொண்டிருக்கிறார். அவரிடம் கேட்கக் கூடாதா? கட்டாயப்படுத்தக் கூடாதா?

பன்னீர்செல்வம், ஆச்சாள்புரம், கட்ட வேண்டிய தொகை 32 ஆயிரத்து 410 ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது, கல்யாண மண்டபம் இருக்கிறது, நெல் வியாபாரம் இருக்கிறது, உரக் கடையும் இருக்கிறது. இவ்வளவும் இருக்கிறது. சிறிய விவசாயியா இவர்?

ராஜதுரை, தேவநாஞ்சேரி, பாக்கித் தொகை 15 ஆயிரம் ரூபாய்தான். இவருக்கு 8 ஏக்கர் நிலம் இருக்கிறது, சொந்தத்தில் டிராக்டர் உள்ளது.

மணிவண்ணன், செம்பியமாதேவி, 43 ஆயிரம் ரூபாய் பாக்கி. இவருக்கு 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அஞ்சல் துறையில் பணியாற்றுகிறார்.

பெருமாள், வலங்கைமான், பாக்கி 19 ஆயிரம் ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஜவுளிக் கடை சொந்தத்தில் நடத்துகிறார்.

எம். ராணி, திருப்புறம்பியம், 23 ஆயிரம் ரூபாய் பாக்கி. 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. செங்கல் காளவாய் போட்டு செங்கல் வியாபாரம் செய்கிறார். இவர்களிடமிருந்தெல்லாம் பாக்கி வசூல் பண்ணக் கூடாதா? அதுவெல்லாம் ஜப்தி என்று பழனிசாமி போன்றவர்கள் எல்லாம் சொன்னால் கம்யூனிசத் தத்துவத்தை எப்போது மாற்றிக்கொண்டீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு)

மிக முக்கியமாக டாக்டர் கிருஷ்ணசாமி ஒன்று சொன்னார். யாரோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று சொன்னார். நானும் கொடுத்ததாகத் தெரியவில்லை. நிதித் துறையைக் கேட்டேன், அவர்களும் கொடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஏதோ தவறான தகவல் அது. அதேநேரத்தில் கொலை செய்யப்படுகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் அல்லது ஆதிதிராவிடர் அல்லாத மக்களாக இருந்தாலும், ஜாதிச் சண்டையில் கொலை செய்யப்பட்டால், ஏற்கெனவே 50 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை இலட்சம் ரூபாயாக ஆக்கி, இப்போது 2 இலட்சம் ரூபாய், அவர்கள் ஜாதி இந்துக்களாக



இருந்தாலும் சரி, ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி, இரண்டு பேருக்கும் 2 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இதிலே, ஏதோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று கூறி ஆதிதிராவிட மக்களைத் தூண்டிவிடுகின்ற முறையிலே பேசுவது சரியில்லையென்றே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-55

திரு. லத்தீப் அவர்கள் பேசியதைப்பற்றியும் நான் சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். இதற்கிடையிலே இந்த ஆளுநர் உரையினை வெறும் தாள் என்று சொன்னார்களே. குறிப்பிட்டாக வேண்டும். அதில் என்னுடைய உள்ளத்தைக் கவருகின்ற ஒரு திட்டம், உணர்ச்சிமயமான ஒரு திட்டம், மனிதக் கழிவுகளை அகற்றும் இழிநிலை போக்குகின்ற ஒரு திட்டமாகும்.

இதுபோன்ற திட்டங்களை இந்த அரசு இன்றல்ல; நான் முதல் முறையாக முதலமைச்சராக ஆன அந்தக் காலந்தொட்டு இதுவரையிலே தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. கண்ணொளி வழங்குகின்ற திட்டம் பரவலாக தமிழகம் முழுவதும் நடத்தப்படுகின்ற திட்டம். கை ரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா இலவசமாக வழங்கிய திட்டம் இந்த அரசு அறிமுகப்படுத்திய திட்டம். தொழுநோய் இரவலர் ஏறத்தாழ 4 ஆயிரம் பேர், 5 ஆயிரம் பேருக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரவலர் விடுதிகள், மறுவாழ்வு இல்லங்களை அமைத்து அவர்களைப் பராமரித்து வருகின்ற திட்டம்; அப்பொழுது, 1976-க்கு முன்பே ஆரம்பித்து தொடர்ந்து நடந்து வருகின்ற திட்டம். ஏழைப் பெண்களுக்கு திருமண உதவி, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாருடைய நினைவாக நடத்தப்படுகின்ற திட்டம். சமத்துவபுரம் திட்டம், நீங்கள் அனைவரும் பாராட்டிப் பேசி இருக்கின்றீர்கள்.

ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியாவிலே முதன் முதலாக இலவசமாக கான்கிரீட் வீடு கட்டிய திட்டத்தை தமிழகத்திலே தி.மு.க. ஆட்சியிலேதான் நாம் அறிமுகப்படுத்தினோம். (மேசையைத் தட்டும் ஒலி). குடிசை மாற்று வாரியம், முன்பெல்லாம் குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்று இருந்தது; அதை மாற்றி, மேம்பாடு ஒரு பக்கம் நடைபெறட்டும்; Slum Clearance—இருக்கின்ற குடிசைகளை அகற்றிவிட்டு, அங்கு மாடி வீடுகளைக் கட்டித் தருவது; குடிசைவாசிகளுக்கு இந்தத் திட்டம், இந்தியாவுக்கு வழி காட்டுகின்ற முறையிலே தமிழ்நாட்டிலேதான் தொடங்கினோம்.

+2 மாணவர்களுக்கு bus pass இலவசமாக வழங்குகின்ற திட்டம். இப்படிப் பல திட்டங்கள் ஏழையெளிய மக்களை அடிப்படையாக வைத்து நடத்தப்படுகிற திட்டம். எப்படி மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாவை அகற்றினோமோ, அதைப்போல மனிதக் கழிவுகளை அகற்றுகின்ற இழி நிலையை மனிதனிடமிருந்து விலக்க வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் இந்த ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசிய சில பேர்,—பல பேர் பாராட்டியும் குறையும் சொல்லிப் பேசி இருக்கின்றீர்கள்; அது வேறு விஷயம்; எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டுமே என்று எதிர்த்துப் பேசியவர்கள்—இந்தத் திட்டத்தையாவது ஆதரிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் அதையும்கூட ஆதரிக்கவில்லை.

ஒரு நல்ல Parliamentarian என்பது பற்றி A.T. பன்னீர்செல்வம் அவர்கள் ஒரு தடவை சொல்லி இருக்கிறார். அவரை ஒருவர் கேள்வி கேட்கிறார். 'நீங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கிறீர்களே; நீங்கள் ஆக்கபூர்வமாக என்ன செய்தீர்கள்' என்று. ஆக்கபூர்வமாக செய்த காரியங்களை எல்லாம் சொல்கிறார். திடீரென்று கேள்வி கேட்கிறார் செய்தியாளர். 'அரசு ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தருகிறது என்று சொன்னால், அதை நீங்கள் ஆதரிப்பீர்களா' என்று கேட்டார். உடனே, A.T.P. சொன்னார், 'ஆதரிப்பேன். ஆதரித்துவிட்டு, வீடு கட்டித் தந்தால் மட்டும் போதாது; ஆளுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் அப்படீன்னு சொல்லுவேன்' என்று சொன்னார்.

அதுமாதிரி, நீங்கள் ஆக்கபூர்வமாகச் சொல்லுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஓர் எதிர்க்கட்சி அந்தமாதிரி ஆக்கபூர்வமாக ஈடுபடலாம். ஆனால், இருக்கிற எந்தத் திட்டத்தையுமே, ஒரு நல்ல திட்டத்தைக்கூட ஆதரிக்காமல், இந்த ஆளுநர் உரை வெறும் வெற்றுத் தாள்; வெறும் காகிதம் என்றால் காகிதத்தில்தான் அச்சடிக்க முடியும்; என்ன, currency note-லேயா அச்சடிக்க முடியும்? (சிரிப்பு) currency note-லே அச்சடிக்கப்பட்ட ஆளுநர் உரை அல்ல இது; இது காகிதத்திலேதான் அச்சடித்து இருக்கிறோம். ஏழையெளிய மக்களுடைய இரத்தத்தைத் துடைக்க, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) காலங்காலமாக இருந்து வருகின்ற இழிவைப் போக்க, மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார்—இவர்கள் எல்லாம் எதற்காகப் பாடுபட்டார்கள்? மனிதனுடைய இழிவுகள்



நீக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்கள்; அவர்களுடைய சுயமரியாதைக்காகப் பாடுபட்டார்கள். அதை மனதிலே வைத்துத்தான் இந்தத் திட்டத்தை நான் அறிவித்து இருக்கிறேன். இந்தத் திட்டம்பற்றி நேற்றையதினம் தினமணி பத்திரிகையிலே டாக்டர் வா.செ. குழந்தைசாமி, முன்னாள் துணை வேந்தராக அண்ணா பல்கலைக்கழகத்திலும், இந்திரா காந்தி பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிய பெருந்தகை சொல்கிறார்:

"இந்த ஆண்டு ஆளுநர் உரையில் பாராட்டத்தக்க அம்சங்கள் பல இருக்கலாம். ஆனால், என் நெஞ்சைத் தொட்ட ஓர் அறிவிப்பு, இனம் அறிய இயலாத ஒரு மனநிறைவு, அங்கம் முழுவதும் அலை போலப் பரவச் செய்த ஒரு பிரகடனம், 'மனிதக் கழிவுகளை மனிதன் சுமக்கும் அவலம் தமிழ் மண்ணிலே இருந்து விரைவில் மறையும்' என்பதுதான். மாந்தர் கழித்ததை மாந்தர் சுமக்கும் அவலத்தை அகற்றும் இந்த முடிவு ஒரு நிகழ்ச்சியை என் நினைவிற்குக் கொண்டு வருகிறது. 1989-90 நிதி ஆண்டில் கலைஞர் தலைமையில் நடந்த தமிழகத் திட்டக் குழுக் கூட்டம் ஒன்றில் இக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. அப்போது மைய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன் தேசிய அளவில் இந்தப் பழக்கத்தை ஒழிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருப்பதாக முதல்வர் கலைஞரிடம் கூறினார். எனவே, அதைப்பற்றிக் குழு விவாதிக்கவில்லை. பின்னர் மைய அரசு கவிழ்ந்தது. மாநில அரசும் கலைக்கப்பட்டது. இந்தச் சாபக்கேடு தொடர்ந்தது.

கங்கை வெள்ளமும் கழுவ இயலாத இந்தக் களங்கத்தைத் தலைமுறை தலைமுறையாகச் சுமந்து, வயிற்றைக் கழுவி, வாழ்க்கை நடத்தும் அப்பாவி மக்களின் உள்ளக் குமுறல்களின் உருவகமாக அமைந்ததுதான் பின்வரும் கவிதை" என்று அவர் எழுதிய கவிதையில் 4 வரி மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்;

"மாந்தர் கழித்ததை மாந்தர் சுமந்திடும்
வாழ்வு தொடர்ந்திடும் நாட்டினிலே,
போந்த சுதந்திரம், பேசு சமத்துவம்
பொய்யடா; யாவையும் ஏட்டினிலே.

பிற்பகல் 1-00

இந்த ஆண்டு முதல் மனித இனத்தையே மாசுபடுத்தி வந்த ஓர் இழிவு மறைகிறது. தன்மான உணர்வுள்ள சமுதாயம் தலை குனிய வேண்டிய ஒரு மாசு அகல்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் சரிதையில் கறை படிந்த பக்கம் கடந்த காலச் செய்தியாகிறது. ஆளுநர் உரையில் ஒரு நீண்ட வாக்கியத்தின் சிறு பகுதியாக மட்டுமே இடம் பெற்றிருக்கும் இந்த அறிவிப்பு, ஒரு சாதாரணத் திட்டம் அன்று; தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய வாழ்வில் ஒரு மகத்தான திருப்பம். வரலாறு பதிவு செய்யத் தவறாது. இதன் தாக்கம் மற்ற மாநிலங்களிலும் எதிரொலிக்கும். வைதீக மொழியில் கூறுவதானால், வைக்கம் வீரரின் ஆவி வாழ்த்தும்." (மேசையைத் தட்டும் ஒலி)—என்று குழந்தைசாமி அவர்கள் இப்படி ஒரு நற்சான்றை தினமணிப், பத்திரிகையிலே எழுதியிருக்கிறார். இதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிட வேண்டும். இதிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு, கழிவைச் சுமக்கின்றவர்களுக்கு மாற்று வேலை தருகின்ற திட்டத்தினை வெகு விரைவிலே இந்த அரசு அறிவிக்கும். 6, 7 மாதங்களுக்குள்ளாக இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிப்போம் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக, திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். என்மீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை, இந்த அரசுமீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தினார் இஸ்லாமியர் சமுதாயத்தின் மீது, சிறுபான்மையின சமுதாயத்தின்மீது, அது இஸ்லாமியராக இருந்தாலும், கிறிஸ்துவராக இருந்தாலும், சிறுபான்மையினருக்கு என்றைக்கும் தி.மு.க. ஆட்சி துணையாக இருக்கும்; இன்னும் சொல்லப் போனால் அமைந்திருக்கின்ற தி.மு.க. கூட்டணி என்றைக்கும் துணையாக இருக்கும் என்ற உறுதியை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் சார்பிலும், இங்கே வீற்றிருக்கின்ற மற்ற தோழமைக் கட்சிகளின் சார்பிலும், நான் திரு. இலத்தீப் அவர்களுக்கும், இஸ்லாமிய சமூகத்தினருக்கும் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே யாரும் சிறுபான்மையினச் சமுதாயம் சீரழிக்கப்பட வேண்டும்; சீர்குலைக்கப்பட வேண்டும்; வன்முறைக்கு ஆளாக்கப்பட வேண்டுமென்கிற எண்ணத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அல்ல. திரு. இலத்தீப் அவர்கள் சொன்ன ஒரே ஒரு குறை, தீவிரவாதிகளை வேட்டையாடுவது என்கின்ற பெயரால் அப்பாவி மக்களைத்



துன்புறுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் இதை எடுத்துச் சொல்லச் சொல்ல—காவலர்கள் அதில் எவ்வளவு நிதானமாக நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வளவு நிதானமாக நடக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்ன உதாரணத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பள்ளி வகுப்பில் ஆசிரியருடைய பேனா காணாமல் போய்விட்டது என்றால் அவர் உடனே இவன்தான் எடுத்திருப்பான் என்று 2 பேரைக் கூப்பிட்டு, 'நீதான் எடுத்தாய்' என்று சொன்னால் வம்பு வரும். அதற்காக என்ன செய்வார் என்றால், அந்த ஆசிரியர் எல்லா பையன்களும் கையிலே வைத்திருக்கிற பையைத் திறந்து காட்டுங்கள் என்று சொல்வார். எல்லோரும் கையில் உள்ள பையைத் திறந்து காட்டுவார்கள். அப்போதுதான் மற்றவர்களுக்கு இவர்மீது கோபம் வராது. நம்மைத் திருடன் என்று நினைத்து விட்டாரே என்று கோபம் வராது. எல்லோருடைய பைகளையும் திறந்து பார்த்து, உண்மையான திருடனைக் கண்டுபிடிப்பதைப்போல, சில காரியங்கள் தமிழகத்திலே காவல் துறைமூலம் நடைபெற்றிருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக இஸ்லாமியப் பெருமக்களானாலும் சரி, கிறிஸ்தவப் பெருமக்களானாலும் சரி, மனம் வருந்தத் தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியா முழுவதும் ஆங்காங்கே நடைபெறுகின்ற வன்முறைகள், சிறுபான்மையின சமுதாயத்திற்கு இப்போது அறைகூவல் விடுகின்ற முறையிலே நடைபெறுகின்ற வன்முறைகளையெல்லாம் இந்த மாமன்றம் கண்டித்திருக்கிறது. நம்முடைய மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பேசும்போது விலைவாசி உயர்வைக் கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். பீகார் அரசு கலைப்பைக் கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் கண்டிப்பேன். வெளியிலேயும் கண்டிப்பேன், உள்ளேயும் கண்டிப்பேன். ஆளுநர் உரையின் மூலமாகக் கண்டிக்க வேண்டிய அளவிற்குத்தான் கண்டிக்க முடியும் என்பதை மணி அவர்கள் உணராதவர் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உரைக்கு நன்றியுரை பகர்ந்தவர்களுக்கும், கருத்துரை பகர்ந்தவர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் அமைகின்றேன், நன்றி, வணக்கம். மேசையைத் தட்டும் பலத்த ஒலி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

[1999 பிப்ரவரி 23

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய உணர்வை நான் நன்கு அறிவேன். நான் கேட்ட சில விளக்கங்கள் எனக்காக அல்ல என்பதை அவர் நன்றாக அறிவார். நாட்டிற்கு அவருடைய உணர்வுகள் தெரிய வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம். அதேநேரத்தில் பல்லாண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கின்ற கோரிக்கை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சிறு விளக்கத்தையாவது தர வேண்டுமென்று நான் விரும்பினேன். தொடர்ந்து இஸ்லாமிய சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு - அது எவ்வளவு என்பதை அவர்களே நிர்ணயிக்கட்டும். நான் அதிலே குறுக்கிட விரும்பவில்லை. 12% கேரளாவிலே கொடுக்கிறார்கள் என்று சொன்னேன். அந்த அளவுக்குக்கூடக் கேட்பதற்குத் தயாராக இல்லை. எங்களுடைய ஜனத்தொகை எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு கொடுங்கள். அதிலே வேண்டுமென்றால் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள். அதுகுறித்து எல்லாக் கட்சித் தலைவர்களும் தயவுசெய்து குரல் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி நீங்கள் குரல் கொடுக்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனால் யாரும் பேசவில்லை. தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வது, எங்களுடைய ஜனத்தொகை எவ்வளவு என்று அதிகாரபூர்வமாக உங்களுடைய புள்ளி விவரம் கூறுகிறதோ, அந்த அளவுக்காவது இட ஒதுக்கீடு கொடுத்தால்தான் இந்தச் சமுதாயத்திற்கு விடிவு ஏற்படும். இல்லையென்றால் சமூக நீதி இந்த நாட்டில் நிலைநிறுத்தப்படாது என்பதில் உறுதியாக நாங்கள் இருக்கிறோம். தயவுசெய்து அதுகுறித்து முதல்வர் அவர்கள் விளக்கம் தரவேண்டும்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இருக்கின்ற இட ஒதுக்கீடே உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவுக்காகக் காத்திருக்கிறது. அதெல்லாம் முடியட்டும், பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சாத்தான்குளம் தொகுதியில், ஏழைத் தொழிலாளிகள் 19 பேர் இறந்துவிட்டார்கள், அவர்களுக்கு நிதியுதவி செய்ய வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். திரு. மணி நாடார் மூலமாக வந்த அந்த மனுவின் மீது இந்தக் கோரிக்கை வைத்தார்கள், தலா 50 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1999 பிப்ரவரி 23]

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே. என்று கத்தினால் என்ன அர்த்தம்?

**திரு. இரா. தாமரைக்கனி:** **

(திரு. இரா. தாமரைக்கனி வெளிநடப்புச் செய்தார்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் தாமரைக்கனியைக் காப்பாற்ற முயற்சி செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இடம் பெறாது. (குறுக்கீடு) திரு. சுந்தரம், உங்களுக்கு வாய்ப்பு கிடையாது, வெளிநடப்புச் செய்வதாக இருந்தால் நீங்களும் போங்கள்.

(திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. சொ. கருப்பசாமி ஆகியோரும் வெளிநடப்புச் செய்தனர்)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு—தொடர்ச்சி

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, சாயப்பட்டறைத் தொழிலாளர்கள் பற்றி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேனே, உங்களுக்குக் கேட்கவில்லையா?

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. பி. வெங்கடசாமி.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"1999 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்களால் 18-2-1999 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-2-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

61. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கையும், ஆண்டு கணக்குகளும், [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

62. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை. [1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125(2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

63. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

64. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

65. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், ஆண்டு கணக்குகளும். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

66. 1995-96 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி இரண்டாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

7. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

ஒ௧௨

220163

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F 259A-6—1,00,000—30-1-84.